# குயில் குஞ்சுகள்

திருமதி. இந்திராணி புஸ்பராஜா



# குயில் குஞ்சுகள்

இந்திராணி புஸ்பராஜா

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

குயில் குஞ்சுகள் ✧ சிறுகதைகள் ✧ ஆசிரியர் : இந்திராணி புஸ்பராஜா ✧ © இந்திராணி புஸ்பராஜா ✧ முதல் பதிப்பு : டிசம்பர் 2013 ✧ வெளியீடு: பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம் ✧ அச்சு : எவகிறீன், மட்டக்களப்பு ✧ அட்டை : இணையம் ✧ வடிவமைப்பு, இணைப்பாளர் : த. மலர்ச்செல்வன்

Kuyil Kunchukal ✧ Short Stories ✧ Author : Indrani Pushparajah ✧ © Indrani Pushparajah ✧ Language : Tamil ✧ First Edition : December 2013 ✧ Size : Demy 1 x 8 ✧ Paper : 80g Bank ✧ Pages : 90 ✧ Copies : 350 ✧ Published by : Department of Cultural Affirs, Eastern Province ✧ Design and Co-ordinating : T. Malarchselvan ✧ Printed : Evergreen Printers, Batticaloa.

ISBN : 978 - 955 - 4628 - 07 - 6

என்னை உருவாக்கி
உலகில் உயரவைத்த
என் தாய் தந்தையருக்கு

# நன்றி

பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கி.மா

மாவட்ட பண்பாட்டுப்பிரிவு, மட்டக்களப்பு மாவட்டம்

த. மலர்ச்செல்வன்

தினக்குரல்

வீரகேசரி

செங்கதிர்

அணையா விளக்கு

சுடர்

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஊனமாகும் உறவுகள் | 01 |
| ஒரு தாளம் தப்பாகிறது | 09 |
| குயில் குஞ்சுகள் | 18 |
| இளமை எனும் புயற்காற்று | 26 |
| பக்கத்து வீட்டு பாலு மாமா | 35 |
| ஒரு தாயின் கனவுகள் கலைகின்றன | 45 |
| நியாயப்படுத்த முடியாத நியாயங்கள் | 52 |
| பூக்களைப் பொசுக்காதீர்கள் | 59 |
| போலிப் பூக்கள் | 68 |
| கருகும் மொட்டுக்கள் | 75 |

# முதல்படி

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இதுவரை படைப்பினை நூலாக்காத படைப்பாளிகளின் தொகுப்புக்களை வெளியிடத் தீர்மானித்தபோது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள படைப்பாளிகளின் விபரங்களைச் சேகரித்து ஒரு நடுவர் குழாமின் முன்மொழிவினூடாகவே தெரிவினை மேற்கொண்டேன். இத்தெரிவில் ஒருவராக திருமதி. இந்திராணி புஸ்பராஜாவும் இடம் பிடித்துக் கொண்டார்.

எனக்கு இந்திராணி புஸ்பராஜாவை சிவானந்த வித்தியாலயத்தில் படிக்கும் காலத்திலிருந்தே அவரின் நாமத்தை அறிவேன். என்னுடைய சகமாணவர்கள் அவரின் விஞ்ஞானம் கற்பிக்கும் திறனை புகழ்ந்து பேசுவார்கள். அக்காலங்களில் நான் அவரை நேரில் பார்த்திருக்க வில்லை.

2000ம் ஆண்டுகளுக்குப் பின்னரான காலங்களில் பெண்எழுத்தாளியென அறிந்திருந்த போதும் அதுவரை அவரின் எப்படைப்புக்களையும் நான் வாசித்திருக்கவில்லை. நூலாக்கச் செயற்பாட்டின் தருணத்திலேதான் அவரின் பிரதிகளை வாசித்தேன்.

ஈழத்து எழுத்துச் சூழலிலுள்ள கதைசொல்லிகளை மிஞ்சாது அவரின் எழுத்தும் உருப்பெற்றிருக்கின்றது. தட்டையான எழுத்து முறை மையே எமது ஈழத்து இலக்கியத்தில் பாச்சலை ஏற்படுத்தியிருந்த காலத்தில் மாற்றுச் சிந்தனைக்கும், மீறலுக்கும், உடைப்புக்கும் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. ஆனால் இக்காலகட்டத்தில் பித்தன் ஷா, உமா வரதராஜன், சண்முகம் சிவலிங்கம் போன்ற மாற்று எழுத்து முறையாளர்கள் மட்டக்களப்பில் எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் எழுத்துக்களை பலர் படிக்கவில்லையென்றே எண்ணத் தோன்றுகின்றது. படித்தாலும் விளங்கவில்லையென்ற வறுமை நிலையே இருந்தன. இச்சூழலிலே இந்திராணி புஸ்பராஜா சமூக அநீதிகளை, பிறழ்வுகளை,

துன்பங்களை எனப் பல்வேறு தளங்களில் தன் படைப்புக்களை படைத்திருக்கிறார்.

இருந்தும் புனைவின் பொது வெளியில் பெண்கதை மொழிதல், மரபுகள் மீறப்படுதலில் தொடங்கி பெண்ணியக் கருத்தாக்கங்களை மீட்டுருவாக்கம் செய்துவரும் எழுத்துக்களை நாம் தொடர்ந்து கண்டு வரும் சூழலில் பெண்புனைகதையாளர்களது எண்ணிக்கை சொறபத் திலும் சொற்பமாக இருந்துவருகின்றது. அம்பை, பாமா, சந்திரா, உமாமகேஸ்வரி, சு. தமிழ்ச்செல்வி என்பதான வெகு சில பெயர்களையே உள்ளடங்கியதாகயிருக்கின்றது. ஈழத்தில் இப்படியொரு பட்டியலை நாம் தரிசிக்க முடியாதுள்ளது. கவிதையில் காணப்படும் ஒளிவீச்சு, சிறுகதைகளில் இல்லை.

எனவேதான் பெண்படைப்பாளிகள் குடும்பச்சுமையிலிருந்தும், பெண் எனும் அடிமைத்தனத்திலிருந்தும் விழித்தெழ வேண்டும்.

நல்ல வாசிப்பும், களத்தின் இயங்கியலும் சாத்தியமானால் நல்ல படைப்பு உருவாகும். மாறாக பூட்டிய கதவுகளுக்குள் படைப்பு உற்பத்தியாகுமானால் அது தட்டையான படைப்புக்களையே உருவாக்கும்.

திருமதி. இந்திராணி புஸ்பராஜாவிடம் ஒளிக்கீறல்கள் தென்படுகின்றன. அவர் இன்னும் பெண்கதை மொழியை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு
மார்கழி 2013

த. மலர்ச்செல்வன்
மாவட்ட கலாசார இணைப்பாளர்

## என்னுரை.....

**"சிறுகதையில் ஒரு பனிப்பாறை அசைவதில் உள்ள அழகு இருக்கும். அதன் ஒரு சிறுமுனை மட்டும் வெளியே தெரிய, மிகுதி உடல் முழுவதும் நீரில் அமிழ்ந்து இருக்கும் தன்மை ஒரு அழகு"**

**- ஏனஸ்ட் ஹெமிங்வே -**

தமிழும் இலக்கியங்களும் சிறுவயது முதல் என்னைக் கவர்ந் தவை. விஞ்ஞானத்துறையில் கல்விகற்று விஞ்ஞான ஆசிரியையாகக் கடமையாற்றிய எனக்கு இயல்பாகவே இருந்த ஆர்வத்தினால் பேச்சு, நாடகம், பாட்டு, எழுத்து என ஒவ்வொரு துறையும் இயலுமையுள்ளதாக இருந்தது. மாணவப் பருவத்தில் பல பேச்சு விவாத நாடக மேடையேற்றங்கட்கு நான் கற்ற வின்சன்ட் மகளிர் பாடசாலை ஆசிரியர்கள் துணை நின்றார்கள். தொடர்ந்து நானாகவே எழுத்துத் துறையில் பிரவேசித்தேன். 1966 முதல் 1972 வரை வானொலியில் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பிரதிமூலம் கலந்து கொண்டு பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றேன். இதனால் என் எழுதும் ஆற்றல் வலுப்பெற்றது. நான் முதன் முதலில் பத்திரிகையில் எழுதிய சிறுகதை க்ஷக்ஷஒரு தாயின் கனவு கலைகின்றது:: வீரகேசரி பத்திரிகையில் அது பிரசுரிக்கப்பட்டபோது எனக்கு சிறுகதை எழுதுவதில் நாட்டம் அதிகரித்தது. பல்வேறு எழுத்துலக விற்பனர்களதும் சிறுகதைகளை ஆயிரக் கணக்கில் படித்து அவற்றை விமர்சிக்கக்கூடிய ஆற்றல் பெற்றேன். ஒவ்வொரு கதைகளிலும் உள்ள நிறை குறைகளை என்னால் புரிந்துகொள்ள முடிந்ததால் நான் ஒரு தனிப்பாணியில் சிறுகதை எழுத முயற்சித்தேன்.

"சிறுகதை" என்பது ஒரு வீட்டின் உள்ளே திறந்திருக்கும் ஒரு யன்னலால் பார்ப்பது போல் அமையவேண்டும் என்பார்கள். யன்னலூடாக

முழுவீட்டையும் பார்க்கமுடியாது எனவே என் சிறுகதைகளை அந்த நியதிக்கு ஏற்ப எழுத முயற்சித்தேன். என் கதைகள் இச்சமூகத்தில் வாழும் நிஜங்களின் தொகுப்பு. ஆசிரியராக அதிபராகக் கடமையாற்றிய எனக்கு பெண்களையும் சிறுவர்களையும் இருட்டில் இருந்து வெளிச்சத் திற்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஆதங்கம் என்றென்றும் உண்டு. எனவே என்கதையின் கரு பெரும்பான்மையாக அவர்களைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளது. இவை வெறும் கற்பனைக் கதாபாத்திரங்கள் அல்லாமல் நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் பல்வேறு மனிதர்களின் பிரதிபலிப்பு. எங்கோ பார்த்தவர்களைப் போல் கதையில் அவர்கள் நடமாடுவார்கள். சம்பவங்கள் நம்மைச் சூழ நடந்துகொண்டிருக்கும் பல்வேறு நிஜங்களை ஞாபகப்படுத்தும். என்கதைகளின் இறுதியில் ஒரு செய்தி உண்டு. கதை சொல்ல வருவதும் அந்தச் செய்தியைத்தான்.

எனது சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதற்கு முழுக்காரண கர்த்தாவாக இருந்த திரு. த. மலர்ச்செல்வன் மாவட்ட கலாசார உத்தியோகத் தருக்கு என் மனமார்ந்த நன்றி.

கல்லடி உப்போடை,
மட்டக்களப்பு.

இந்திராணி புஷ்பராஜா

# ஊனமாகும் உறவுகள்

சுழலும் மின்விசிறியைப் பார்த்தபடியே கதிரையில் சாய்ந்திருக்கிறேன் நான். என் மனம் போல இடைவிடாமல் அதுவும் சுழன்று கொண்டிருக்கிறது. என் இதயத்தின் வெம்மைச் சூட்டில் சூடான என் விழிகளில் இருந்து வழிகின்ற கண்ணீர் என் கன்னங்களை நனைத்து உதிர்வதைக்கூட என்னால் உணரமுடியவில்லை. என்னை எத்தனை கொடுமையான இடிதாக்கியிருக்கிறது. நான் எப்படிச் செயலற்றுப் போனேன்.

புத்திசாலியாக எல்லாக் கருமங்களிலும் இருக்க முயற்சித்த நான் எப்படி இந்த விடயத்தில் மாத்திரம் ஏமாந்து போனேன். இந்த உலகத்தின் போலியான பாச வலைக்குள் என் உணர்வுகள் சிக்கிக் கொண்டதா? என்னால் எந்த ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை.

மெல்லிய முனகல் சத்தம் கேட்கிறது. மின்விசிறியில் இருந்த பார்வையை என்னருகே இருந்த கட்டிலை நோக்கித் திருப்புகிறேன். அங்கே என் எட்டு வயதுப் பிஞ்சு மகள் பலவந்தமாகப் பறித்து வீசப்பட்ட பூக்குவியல் போல் கிடக்கிறாள்.

பிஞ்சுக் கைகளில் சேலைன் பாய்ந்து கொண்டிருக்க கண்மூடியிருக்கும் என் தேவதையைப் பார்க்க 'ஓவென்று அலற வேண்டும் போல் இருக்கிறது. எத்தகைய தொரு கொடுமை இது.....'

என் மகள் எத்தனை அழகானவள் என்று பார்த்து ரசித்த கணங்களை நினைத்துப் பார்க்கிறேன் என் கண்தான் என் செல்லக்குட்டியில் பட்டு விட்டதோ? இல்லாவிட்டால் இந்த மொட்டு மலருமுன்னே கசக்கப்பட்டிருக்குமா?

கசக்கிய அந்த அரக்கனை நினைத்துப் பார்க்கிறேன். என்னுள் கோபாக்கினி கனல்கின்றது... அந்த அரக்கனை ஆண்டவனாக அல்லவா பூசித்திருக்கிறேன். என் நினைவுகள் பின்நோக்கி நகர்கின்றது.

அப்போது எனக்கு இருபது வயது... உயர்தரப் பரீட்சை எடுத்து விட்டு வீட்டில் இருந்த

காலம். மிகவும் சராசரியான வருமானமுள்ள குடும்பம். அப்பா கடையொன்றில் கணக்கெழுதிக் கொண்டிருந்தார். அந்த வருமானத்தில் அம்மா அப்பா நான் தம்பி என்ற குடும்ப வண்டி மிக மெதுவாகவே ஓடிக்கொண்டிருந்தது.

ஒரு நாள்.... எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அன்றொரு வெள்ளிக்கிழமை. 'மகள்... கொஞ்சம் வாங்களன்... என்னோட பள்ளியில ஒண்டாப் படிச்ச சோமசுந்தரம் வந்திருக்கார்... உன்னைப் பார்க்க வேணுமாம்' அறைக்குள் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த நான் புத்தகத்தை வைத்துவிட்டு வெளியே வந்து வாசலில் தயங்கி நிற்கிறேன்.

அப்போது தான் அவர் என் பார்வையில் பட்டார் ஐம்பது வயதிருக்கும் தோற்றத்தில் ஒரு மிடுக்கு இருந்தது. வெள்ளை வேட்டி சட்டையில் மிகவும் கம்பீரமாக இருந்தார். தங்க பிறேம் போட்ட கண்ணாடி அவருக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

'இவதான் என்ர மகள் சுகந்தி' அவரது பார்வை என் தலைமுதல் கால்வரை படர்கிறது.

'சுகந்தி செயலகத்தில் கிளாக்கா வேலை செய்யிற தன்ர மகன் சிவநேசனுக்கு உன்னைச் செய்து வைச்சால் நல்லமெண்டு நினைக்கிறார். நீ என்ன புள்ள சொல்லுறாய்' அப்பாவின் வார்த்தைகள் என்னைத் திக்கு முக்காட வைக்கின்றது. திருமணம் பற்றி இப்படி அவசரமாக முடிவு சொல்ல முடியுமா? நான் பலியாடு போல அப்பாவின் முகத்தையே பார்க்கிறேன்.

'என்ர மகள் நான் சொன்னா மறுப்பு சொல்லமாட்டாள் எண்டு சொன்ன நான் தானே? நீங்க சாதகத்தப் பாருங்க....' என் அப்பா என் சம்மதம் பற்றிய சிந்தனையே இன்றி என் திருமணத்தை முடிவு செய்தபோது என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை.

என்னைக் கைப்பிடித்த என் கணவர் நல்லவர் மிகவும் அன்பானவர். ஆனால், தன் பெற்றோரின் வார்த்தைகளிற்குக் கட்டுப்பட்டவர். இதனால் எங்களது வாழ்க்கைப் பயணம் அவர்களது வீட்டிலேயே ஆரம்பமாகியது.

வாழ்க்கை எவ்வளவு அற்புதமானது என நான் கண்கூடாகக் கண்ட நாட்கள் அவை. மாமாவும் மாமியும் கண்கண்ட தெய்வங்களாகத் தோன்றினார்கள்.

பிள்ள வேலைக்குப் போறவன் சாப்பாட்டக் கவனிக்க மாட்டான். அவனுக்குப் பிடிச்சதை மட்டும்தான் சாப்பிடுவான்... நீதான் கொஞ்சம் கரிசனையாப் பார்த்துக் கொள்ள வேணும்' என்னருகே அமர்ந்திருந்து என் தலையைத் தடவியபடியே

சொல்லும் மாமியைப் பெருமையோடு பார்க்கிறேன்.

என் வீட்டில் கூட நான் அனுபவிக்காத மகிழ்வல்லவா? இரவில் என்னவர் மார்பிலே முகம் புதைத்து நான் பெற்ற இன்பத்தை அவருடன் நாணத்துடன் பகிர்ந்து கொள்ளும் இரவுகள்.

'உண்மையிலேயே நான் பாக்கியம் செய்தவள் தான். உங்கட அப்பாவும் அம்மாவும் கண்கண்ட தெய்வங்கள் தான். என்னையும் சொந்த மகளப்போல பார்க்கிறாங்க நான் நினைச்சுக்கூடப் பார்க்கல்லப்பா...' நான் நெகிழ்ந்து போவேன்.

'சுகந்தி... இந்த வீட்டில அம்மாவும் அப்பாவும் எனக்குக் கிடைச்ச அதிர்ஷ்டப் பொக்கிஷங்கள்.... நான் இந்த நிலையில இருக்கிறதுக்கு அவங்கதான் காரணம்' சொல்லும் போதே குரல் நெகிழ்ந்து போகும். நான் தாய்மை அடைந்தபோது என்னைப் பூப்போல பார்த்துக் கொண்டார்கள்.

'மகள் உனக்கு என்ன சாப்பிட வேணும் போல இருக்குது. சொல்லும்மா' பாசமாக மாமா கேட்கும்போது எனக்கு அழவேண்டும் போல் இருக்கும். ' எனக்கு ஒண்டும் வேணாம் மாமா நீங்களும் மாமியும் இப்படி அன்பா இருந்தாலே போதும்...' எனது வார்த்தைகள் தொண்டையில் இருந்து வெளிவர மறுக்கும்.

மாமா எனக்காக நான் பிடிக்கும் என்று சொன்னது சொல்லாதது எல்லாவற்றையும் வாங்கிக் குவிப்பார். இந்த மகிழ்ச்சியூடே நர்மதா பிறந்தாள். வீடே திருவிழாக் கோலம் பூண்டது. நான் அந்த வீட்டின் வரலெட்சுமியாக எல்லோரிடமும் அறிமுகப் படுத்தப்பட்டேன். வாழ்க்கை இத்தனை ரம்மியமானதா?

நர்மதா அந்த வீட்டின் குட்டித் தேவதையானாள் அவளது கலகலவென்ற சிரிப்பு வீடெங்கும் எதிரொலித்துக் கொண்டே இருக்கும். தாத்தா பாட்டியோடு நர்மதா ஒட்டிக்கொண்டதால் எனக்கு வீட்டுவேலைகள் இலகுவாகிப் போனது. நர்மதாவிற்கு நான்கு வயதாக இருக்கும்போது நான் மீண்டும் தாய்மை அடைந்தேன்.

எனக்கு அடிக்கடி தலைச்சுற்றல், வாந்தி.... நான் சோர்ந்து போனேன். என்னால் நர்மியைப் பரிபூரணமாகக் கவனிக்க முடியவில்லை. எனக்கு மிகுந்த கவலையாக இருந்தது. 'இந்த ஏலாத உடம்போட ஏன் பிள்ள நர்மதாவையும் இழுத்துக்கொண்டு கவலைப்படுறாய்.... அவள் இரவிலேஎங்கட ரூமில படுக்கட்டுமே' என்ற மாமியின் வார்த்தைகள் என்னை மகிழ வைத்தாலும் இரவிலும் எனக்கும் என் கணவருக்கும் மத்தியில் படுத்துக்கொண்டு இருவர் மீதும் தனது சின்னக்கால்களைப் போட்டுக் கொண்டு தூங்கும் நர்மதாவைப் பிரிவது மிகவும் கஷ்டமாக இருந்தது.

'இல்லம்மா.... நான் அங்க போய் படுக்கமாட்டன்... இங்கதான் படுப்பன்' அவள் அடம்பிடிப்பாள். 'பாட்டியின் அறையில டி.வி. இருக்கல்லோ ..... பிள்ளைக்குக் காட்டூன் போட்டுக் காட்டுவாங்க டொம் அன்ட் ஜெரி எல்லாம் பார்க்கலாம்.

மிகவும் கஷ்டப்பட்டு அவளை அவர்களிடம் அனுப்பி வைத்தோம். மகன் பிறந்தான். சுலக்ஷன் என்று பெயர் வைத்தோம். குடும்பத்திற்கு ஓர் ஆண் வாரிசு வந்ததில் எல்லோருக்கும் மகிழ்ச்சி. ஆனால், நர்மதாவைப் போல் இல்லாமல் மகனுக்கு அடிக்கடி நோய் வந்தது...

'அம்மா தம்பியப் போல நானும் உங்களோட படுக்கிறனே' மீண்டும் நர்மதா நச்சரிக்கத் தொடங்கினாள். ' நர்மி உங்களுக்கு தாத்தா பாட்டியப் பிடிக்கல்லயா?' அவளை என்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டே கேட்டேன். ' பிடிக்குது.... ஆனா தம்பி போல இந்தக் கட்டில்ல படுக்க ஆசையா இருக்கு....' நான் அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டேன்.

'மகள்.... தம்பியப் பார்த்தீங்களா? அடிக்கடி காய்ச்சல் வருது. இரவெல்லாம் அழுறான் பாவம் தானே.... தம்பி இன்னும் கொஞ்சம் வளர்ந்த உடனே மகளும் எங்களோடயே இருக்கலாம். அவளுடைய கூம்பிப் போன முகத்தைப் பார்க்க நிரம்பக் கவலையாக இருந்தது.

ஒரு நாள் காலை வேளையில் கூடத்திற்குள் வந்த நான். கூடத்தின் மத்தியில் இருந்த நீண்ட கதிரையில் அழுது கொண்டே படுத்திருந்த நர்மதாவைக் கண்டு திடுக்கிட்டுப் போனேன். இரவு என்றாலே அவளுக்கு அதிக பயம் அப்படி இருக்கும்போது இவள் எப்படி வெளியே வந்து தூங்குகிறாள். அருகில் போய் அமர்ந்து கொண்டேன். அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

'என்னம்மா பயந்திட்டியா?' முகத்தை என்னை நோக்கித் திருப்பினேன். மங்கலான இரவு விளக்கொளியிலும் முகம் சிவந்திருந்தது தெரிந்தது.

'என்ன நர்மி...' நெஞ்சோடு அணைத்துக் கொண்டேன்... எனது குரல் ஒலிகேட்டு அறைக்குள் இருந்து என் மாமியார் வெளியே வருவது தெரிந்தது.

நான் மாமியாரை என்ன கேட்பது என்று தெரியாமல் மௌனமாகிப் போகின்றேன். பிள்ள... எனக்குப் பக்கத்தில தான் படுக்கிறவள்... இரவு ஏலா எண்டு அழத்தொடங்கிட்டாள்... பிறகு அவங்கட தாத்தாவுக்குப் பக்கத்தில் கட்டில்ல படுக்கட்டும் எண்டு விட்டன். அவரும் இவள் விழுந்திடுவாள் எண்டு கட்டிப்பிடிச்சிட்டுப்படுத்தார். திடீரென கொஞ்ச நேரத்துக்கு முதல் அழுதுகொண்டு வெளியில ஓடி வந்திட்டாள்...

நானும் கூப்பிட்டு பாத்தன் கேக்கல்ல...

என் மாமியாரின் விளக்கவுரை என்னை ஆசுவாசப்படுத்தியது... நர்மதாவைத் தூக்கிக் கொண்டு எங்கள் அறைக்குள் வந்தேன். தரையில் எனது போர்வையை விரித்து அவளை அதில் படுக்கவிட்டு நான் அருகில் அமர்ந்து கொண்டேன்.

'என்னப்பா.... விடிய முதலே பிரச்சினையோ...' தலைமுதல் கால்வரை இழுத்துப் போர்த்திக்கொண்டே கேட்கிறார் என் கணவர். அவருக்குக் காலை வேளையின் சுகமான தூக்கம் கலைந்துவிட்டதே என்ற கவலை. நான் எதுவும் கூறவில்லை. கூறினால் அவரும் பிள்ளையில் தான் பிழை கூறுவார்.

பாடசாலைக்கு அனுப்ப அவளை குளிப்பாட்டும் போது கேட்டேன். ' ஏன் நர்மி அவ்வளவு அழுகை' ' எனக்கு தாத்தா கட்டிப்பிடிச்சுக் கொஞ்சுறது பிடிக்கல்ல'

'நீ பயப்பிடுவாய் எண்டு தானே கட்டிப் பிடிக்கிறார்....' நான் சமாதானப்படுத்து கிறேன்... 'அவரோட மீச முகமெல்லாம் குத்துது... அவரோட பல்லு என் தோள்ள இடிச்சிருக்கு... இந்தா...' அவள் காட்டிய இடத்தில் தோள்பட்டையில் பல்லின் மெல்லிய கீறல்

'பாட்டிக்குத் தெரியுமா... நீ சொன்னியா?'

'போ... அம்மா.... ஒரேயொரு பேத்தி எண்டு என்னில சரியான ஆசையாம் அதுதான் என்னக் கட்டிப்பிடிச்சுக் கொஞ்சுறாராம், ஆசையாக் கடிச்சிற்றாராம் பாட்டி சொல்றா...' அவளுடைய குழந்தைக் கண்களில் கோபம் தெரிந்தது. இந்த விடயத்தை மாமா, மாமியிடம் நான் எப்படித்தான் சொல்லிவிட முடியும்.

'நர்மி நீ தாத்தாக்கிட்ட இதெல்லாம் பிடிக்கல்ல எண்டு சொல்லிடு...' சில நாட்கள் மௌனமாக ஓடிப்போனது.... ஒரு நாள் உடைமாற்றும் போது அவளது இடுப்பிலும் தொடைகளிலும் சின்னஞ் சிவப்புநிற கீறல்களைப் பார்த்தேன்.

'என்ன நர்மி பள்ளிக்கூடத்தில ஆரோட சண்டை போட்டாய்.... அங்க இங்கெல்லாம் கிள்ளி வைச்சிருங்காங்க....' என்றேன்.

'நான் ஒண்டும் சண்டை போடல்ல... வடிவா எழுதல்ல எண்டு தாத்தாதான் கிள்ளினார்...' நான் என் கணவரைக் கோபத்துடன் திரும்பிப் பார்த்தேன்.

'என்ன சுகந்தி நம்மட பிள்ள நல்லா வரவேணுமெண்டு 'அப்பாவுக்கு ஆசை யில்லையா. எல்லாம் பிழையா எழுதுறாள்...'

'அதுக்கு குழந்தைக்கு கிள்ளுறதா....' 'மகள்.... நீ நேற்று சரியாக எழுதிக் காட்டினவுடனே தாத்தா உனக்கு என்ன தந்தார். 'பெரிய சொக்கலேற்' என்றாள் மகிழ்ச்சியுடன் என்றாலும் என் கணவர் நான் கேட்கும் வரை விடயத்தைச் சொல்லாதது எனக்கு மிகுந்த கவலையாக இருந்தது. 'சுகந்தி நம்மட மகன்ர நோய் நொடிக்குள்ள பிள்ளைய அவங்க ரெண்டு பேரும் பார்த்துக் கொள்ளுறது பெரிய விடயம். பெரிசு படுத்தாத பிளீஸ்'

நான் அத்தோடு இச்சர்ச்சையை நிறுத்திக்கொண்டேன். அந்த இரவு ஒரு கொடிய துன்பத்தைச் சுமந்து வந்து சேர்ந்தது. மகனுக்கு காலையில் இருந்தே மெல்லிய காய்ச்சல். மாலை வேளையில் கையும் காலும் வெட்டி வெட்டி இழுத்தது. பிள்ளையைத் தூக்கிக் கொண்டு பெரியாஸ்பத்திரிக்கு ஓடினோம். மகன் உயிரற்ற ஜடம்போல் கிடந்தான். என் அடிவயிற்றில் எழுந்த அக்கினி நெஞ்சுக் குழியை எரித்தது போன்றதொரு வேதனை. ' என்ர பிள்ளையக் காப்பாத்துங்க டாக்டர்.... டாக்டரின் கைகளைப் பற்றிக் பிடித்துக் கதறுகிறேன்...

' இது ஈடியூ... நீங்க சத்தம் போடக்கூடாது. இவருக்கு வலிப்பு வந்திருக்கு... ஐ.சீ.யூக்கு மாத்துவம்.... நீங்க படிச்ச ஆள் இப்படிச் சத்தம் போடலாமா?'

வைத்தியரின் ஏளனமான பேச்சு என்னை ஒன்றும் செய்யவில்லை. மூன்று நாட்கள் மகனுடனே என் பொழுது கழிந்தது.... என் கணவர் தான் வீடு அலுவலகம் என்பதோடு வைத்தியசாலையையும் சேர்த்துக் கொண்டு சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருந்தார். இரண்டுநாள் தகப்பனுட ன் வைத்தியசாலைக்கு வந்த நர்மதா மூன்றாம் நாள் வராதது எனக்கு என்னவோ போல் இருந்தது.

'எங்கப்பா நர்மி.... குழப்படியா? தாத்தாவையும் பாட்டியையும் ஆட்டி வைக்கிறாளா? மகனுக்கு இப்பிடிச் சுகமில்லாம வரக்குள்ள அவங்களுமில்லாவிட்டால் நாங்க எவ்வளவு கஷ்டப்படுவம்...' நான் பேசிக் கொண்டே போனேன். அவர் குனிந்த தலை நிமிராமல் மகனுக்குப் பால் கரைத்துக் கொண்டிருந்தார்.

'ஏனப்பா வீட்டில என்னவும் பிரச்சினையா?' என்றேன். 'சீச்சீ... அப்படியொண்டும் இல்ல. வேலை கூடிப்பொயிற்று தானே' அவர் மழுப்பினாற் போல் இருந்தது. ஆனால். அந்தச் சந்தர்ப்பத்தில் எதையும் பெரிதுபடுத்தாமல் விட்டுவிட்டேன்.

மறுநாள் பத்துமணிக்குத் தான் மகனை வீட்டுக்குச் செல்ல அனுமதித்தார்கள். வீட்டில் பம்பரமாகச் சுழன்று எல்லா வேலைகளையும் முடித்தேன். மாமாவும் மாமியும் இருக்கவில்லை. வரவேற்பறையில் நர்மதாவின் புத்தக மேசையைப் பார்த்தபோது திடுக்கிட்டேன். அவளது புத்தகப்பை அப்படியே இருந்தது.

'என்னப்பா நர்மி ஸ்கூல் போகவில்லையா?' என்றேன். 'இல்ல சுகந்தி' என்றார். என் கணவர் என் முகத்தைப் பாராமல் எங்கோ பார்த்தபடி அவர் பதில் தந்த விதம் என்னுள் ஒரு நெருடலை ஏற்படுத்தியது.

'அப்படியெண்டால் அவள் எங்கப்பா?' மாமா, மாமி எங்கயும் கூட்டிற்றுப் போனவங்களா? என்னுள் ஒரு தவிப்பு. சுகந்தி அதுதான் பிறைவேற ஆஸ்பத்திரியில் வைச்சிருக்கம் அம்மாவும் அப்பாவும் அங்கதான் இருக்கிறாங்க. நீ கிடந்து பதறுவாய் எண்டுதான் நான் சொல்லவில்லை...' எனக்குக் காலின் கீழே பூமி பிளந்து என்னை விழுங்கினாற் போல் இருந்தது. என்னால் நிற்கவே முடியவில்லை சுதாகரித்துக் கொள்ள அவரைப் பற்றிக் கொள்கிறேன்.

மீண்டும் ஒரு பயணம்.... அந்தப் பிரமாண்டமான தனியார் வைத்தியசாலையின் பிரத்தியேக அறைக்குள் நுழையும் வரை நான் நானாக இல்லை. அங்கே என்பெண் கிழிந்த நாராய் கண்மூடிக்கிடந்தாள். நான் மயங்கிச் சாய்கிறேன். கண்விழித்த போது என் கட்டிலைச் சுற்றி மாமா, மாமி, என் கணவர் மூவரும் நின்று கொண்டிருக்கிறார்கள். நான் சட்டென எழுந்து அமர்கிறேன் என் கணவரின் கைகளைப் பற்றிப் பிடிக்கிறேன்.

'என்ர பிள்ளைக்கு என்ன நடந்ததப்பா?' அழுகையோடு கேட்கிறேன்.

'தெரியாமல் நடந்திட்டுது சுகந்தி..... எல்லாம் இந்த அம்மாவால தான் வந்தது. காசுப் பிரச்சினையில் ரெண்டு பேரும் அடிபிடி சண்டை, அப்பா கோவிச்சிற்றுப் போய் நல்லாக் குடிச்சிப்போட்டு வந்திருக்கிறார். நானும் நீ ஆஸ்பத்திரியில் தனிய எண்டு அங்க வந்திற்றன். அதான் இப்படி நடந்து போச்சுது' அவர் சொன்னவைகள் எனக்குத் தெளிவாக விளங்கவில்லை.

'என்னப்பா நடந்து போச்சு' சட்டென என் மாமனார் என் கால்களைப் பிடித்துக் கொண்டார். நான் திகைத்தேன்.

'நான் தான் தப்புச் செய்திட்டன் பிள்ள. என்னை மன்னிச்சிடு குடிவெறியில் நான் மிருகமா மாறிட்டன்' எனக்கு ஓரளவு விளங்கத் தொடங்கியது. தலையை இரண்டு கைகளாலையும் அறைந்து கொண்டு ' ஐயோ... ஐயோ' எனப் பெருங்குரலெடுத்து அழத்தொடங்கினேன். என் கணவர் என் வாயைப் பொத்தினார்.

'சுகந்தி ஊரைக் கூட்டிராத அம்மா. நம்மட பிள்ளையின்ர வாழ்க்கைதான் இருட்டாகிவிடும்...' என் கணவர் துடிக்கும் என்னை தன் நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறார்.

'மகள் என்னை மன்னிச்சிடம்மா என்ர உயிருக்கு உயிரான பிள்ளைய நான்

இப்படிச் செய்வனா? ஏதோ பேய் எனக்குள் பூந்திட்டுது. எனக்கு வேணுமெண்டா அடி. ஆனால், ஊருக்குச் சொல்லி என்னைக் கேவலப்படுத்திப் போடாதே' என்மாமனாரின் வார்த்தைகள் என்னைக் கொதிப்பேற்றின. அவரை வெறித்துப் பார்க்கிறேன்.

'இதைப் பெரிசு படுத்திப் போடாத பிள்ள... ஊர் நம்மைப் பாத்துத் துப்பும்.....' இதுமாமி. நான் கௌரவம் என்ற போலிச் சிறைக்குள் கைதியாகிப் போனேன்.

'அம்மா பிள்ளை கண்திறந்தா பால் ஏதும் கரைச்சுக் குடுங்க. சேலைன் கழட்டிட்டன்' என என் தோளில் கைவைத்த தாதி என்னைக் கனவுலகில் இருந்து மீட்கிறாள். நாங்கள் குழந்தைகளாக இருந்த காலத்தில் நம்மிடையே இருந்த உறவுகள் எத்தகைய உன்னதமானவை. மாமி, மாமா, தாத்தா, பாட்டி, அண்ணா, தம்பி என குடும்ப விருட்சத்தின் ஒவ்வொரு கிளையும் மிகவும் ஆரோக்கியமானதாக இருந்தது. மூத்தவர்கள் தம்வாரிசுகளை கண்ணை இமை காத்தது போல் காத்தார்கள். மானிட நேயம் மண்ணில் தவழ்ந்த காலம் அது. ஆனால் உலகமயமான இந்தக் கணினி யுகத்தில் உறவுகள் அனைத்துமே உணர்வுகளால் உள்ளத்தால் ஊனமாகிப் போய்விட்டன. ஊனமான உறவுகளில் மானிட நேயம் மலருமா? நான் அழுது கெண்டே என் பிள்ளைக்கு பால் கரைக்கிறேன்.

'நர்மி பால் குடிம்மா.....' ஜீவனில்லாத கண்கள் மெல்லத் திறக்கின்றன. கன்றிப்போன உதடுகள் துடிக்கின்றன. 'பலமுறை உன்னிடம் முறையிட்டேனே அம்மா....' அலட்சியப்படுத்தி விட்டாயே....' என்று என்னைக் கோள்வி கேட்பது போல் இருக்கிறது.

உண்மைதான் என்னைப் போல் எத்தனையோ தாய்மாரின் கவலையீனம் அல்லது மூத்தோர் மேல் கொண்ட நம்பிக்கை நம் நாட்டிலே மொட்டவிழ்ந்து மணம் வீசும் முன்னே பிஞ்சு மலர்களை சிதைத்துச் சின்னா பின்னமாக்க வழிசமைக்கின்றது. என் மகள் போல் உங்கள் குழந்தையும் தன் உணர்வுகளை வெளிப்படுத்தும் போது தயவு செய்து செவி கொடுங்கள். ' வலிக்குதம்மா.....'

உதட்டில் வைத்த பால் கிண்ணத்தை தள்ளும் இந்தப் பிஞ்சின் ஊனமாகிப் போன எதிர்காலத்திற்கு நான் என்ன செய்யப் போகிறேன்?

தினக்குரல் 09.06.2013

# ஒரு தாளம் தப்பாகிறது....

என் கைகளைப் பற்றிப் பிடித்தபடி அழுது கொண்டிருக்கும் என் அன்பு மகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன் நான்.

அந்தச் சிறைக்கூடத்தில் வரவேற்பறையில் நானும் மகளும் எங்களைச் சுற்றி என்னைப் போன்ற சிறைக்கைதிகளைச் சந்திக்க வந்த சொந்தங்கள். கைதியாகிப் போனதை எண்ணி வருந்தும் ஜீவன்கள்..... உறவுகளைச் சந்தித்த அதிர்ச்சியில் பேச்சிழந்து ஆசைதீர அவர்களது முகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் கைதிகள். இந்த வினோத உலகத்தில் நானும் என்மகளை ஆசைதீரப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

என் மகள் அழகே உருவானவள்... பார்த்தவர்களைச் சுண்டி இழுக்கும் அபூர்வ அழகு...காதளவோடிய கண்கள்..... அதில் ஓடியசையும் கருவிழிகள். எடுப்பான நாசி சிவந்த உதடுகளினிடையே இடைக்கிடை பளிச்சிடும் முத்துப்பல்வரிசை. மஞ்சள் கலந்த வெண்ணிற சருமம்.

இதேபோல் தான் பதினைந்து வருடங்களின் முன் நானும் இருந்தேன். எங்கள் ஊரின் இளைஞர்களின் இரவுத் தூக்கத்தையே கவர்ந்து கொண்ட கனவுக்கன்னியாக சைக்கிளில் வலம் வந்தேன்.... அழகு என்பது எனக்கு தலைக்கனம் தர எல்லோரையுமே அலட்சியப் பார்வை பார்த்தேன். வீட்டில் நான் தான் செல்லப் பெண் அம்மா, அப்பா, அக்கா, அண்ணா எல்லோருமே என் அழகை ஆராதிக்கின்றவர்களாக இருந்ததால் என் அபிலாஷைகள் எல்லாமே துரிதமாக நிறைவேறியது.

பத்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் போதுதான் என் வாழ்வின் புதிய அத்தியாயம் இதழ்விரித்தது. வழமைபோல வீட்டில் இருந்து சைக்கிளில் டியூசன் வகுப்பிற்குப் புறப்பட்டேன். நான் கல்லடி மணிக்கூட்டுக் கோபுர வளையில் திரும்பும் போது மோட்டார் சைக்கிளின் ஹோர்ன் ஒலி கேட்டு திரும்பிப் பார்த்தேன். திரும்பிய என் கண்களில் அவன் தென்பட்டான். டெனிம் காற்சட்டையும் நீலநிற சேர்ட்டும் போட்டிருந்தான். மேற்புறத்தில் திறந்து விடப்பட்டிருந்த சேர்டின் ஊடாக பளிச்சென

தங்கச் சங்கிலி மின்னியது. கையில் கட்டியிருந்த தங்க வர்ண கடிகாரமும் கறுப்புக் கண்ணாடியும் அவனுக்கு ஒரு கம்பீரத் தோற்றத்தைத் தந்தது. என்னைப் பார்த்ததும் அவனது உதட்டோரத்தில் மெல்லிய புன்னகை தோன்றி மறைந்தது. என்னுள் ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி.

இந்த நிகழ்வுகள் தொடர்ந்தன. அவனது யெர் வினோதன் என அறிந்து கொண்டேன். வினோதன் என் கண்விழி நுழைத்து கருத்தினில் கலந்த போது நான் செயலற்றுப் போனேன். டியூசன் வகுப்பு எனக்குத் தேவையற்ற ஒன்றானது. வினோதனுடன் அழகான கல்லடிக் கடற்கரையில் என் பொழுதுகள் கரைந்தன.

"தங்கச் சிலைபோல் இருக்கிற உனக்கு மதுமிதா எண்ட பெயர் நல்ல பொருத்தம்" என் விரல்களை தன் கரங்களுள் சிறைப்படுத்திக் கொண்டே அவன் சொல்கிறான். நான் நாணத்தில் தலைகுனிந்து கால்விரல்களால் மண்ணில் கோலம் போடுகிறேன்.

"ஏன் மது பேசாம இருக்கிறாய்....ம்...." "என்ன பேசிற தெண்டே விளங்கல்ல வினோ" பனிக்கட்டிகளை எனது தலைமீது கொட்டிவிட்டாற்போன்ற சிலிர்ப்பு என்னுள் எழுகின்றது. என்னை அறியாமலே ஒரு ஆண்மகனின் அருகாமை எனக்குப் பிடிக்கிறது.

நாட்கள் நகர நகர எங்கள் சந்திப்புகள் தொடர்ந்தன. வினோதனின் தோள்களில் சாய்ந்து கொண்டு இயற்கையை ரசிப்பது அவன் சொல்லும் வெட்கம் கெட்ட ஜோக்குகளுக்கு விழுந்து விழுந்து சிரிப்பது.... அவனோடு கொஞ்சிப் பேசுவது.... என்னை அவனது சிந்தனைகள் ஏங்கவைத்தன. படிக்கவிருப்பமில்லை... கண்களை மூடித்திறந்தால் வினோதனின் மனோகரமான உருவம்.

இதற்கும் ஒரு முடிவு வந்தது. அன்றொரு சனிக்கிழமை..... வழமைபோல் டியூஷனுக்குப் புறப்பட்டேன். அப்பா வாசலில் அமர்ந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார். "மது... என்ன அவசரமாக வெளிக்கிடுறாய்" அவரது கேள்வி சிறிது சூடாக இருந்தாற்போல் இருந்தது.

"டியூசனுக்குத் தான்" என்குரல் எனக்கே கேட்காதமாதிரித் தோன்றியது.

"ஏன் மது... உனக்கு கிளாசில படிப்பிக்கிறாங்களா? கடற்கரையில படிப்பிக்கிறாங் களா?" கேலியாகக் கேட்டுக்கொண்டே அறைக்குள் இருந்து வந்த அக்காவின் வார்த்தைகள் என்னைத் திக்குமுக்காட வைத்தன. எனக்கு ஏதோ புரிவது போல் இருந்தது.

"நாயே... ஊரானோட கடற்கரையில வெக்கமில்லாம நாடகம் போடுறயா?"

உள்ளேயிருந்து பாய்ந்து வந்த அண்ணா விட்ட அறையில் எனக்கு உலகமெல்லாம் சுற்றிவந்தது. மறு அறை விழுமுன் அம்மா அண்ணாவின் கைகளைப் பற்றிப்பிடித்துக் கொண்டாள்....

"ஆரோ பொய் சொல்லி இருக்கிறாங்க..." நடுங்கியபடி நான். "பொய் சொல்லு றாங்களா பொறுடி...." கோபமாகப் பேசியபடியே காற்சட்டைப் பையினுள் கையைவிட்டவன் கையை வெளியே எடுத்தபோது.... கையில் செல்போன்...

"இப்பப்பார்....." அவனது செல்போனைத் திருப்பிக்காட்டிய போது நான் அதிர்ச்சியில் உறைந்து போகிறேன். போண் திரையில் வினோதனின் தோளில் சாய்ந்தபடி நான்...யாரோ காட்சியைக் கமராபோணில் பதிவுசெய்தே கொடுத்துவிட்டார்கள். ஆதாரங்களோடு நிரூபிக்கப்பட்ட குற்றவாளியாக நான். பிறகென்ன எனது சகல சுதந்திரங்களும் பறிக்கப்பட்டு நான் கூண்டுக் கிளியானேன். என்னைச்சுற்றி ஒரு கண்காணிப்பு வலையம். எனக்கு அது பிடிக்கவில்லை.

ஒரு நாள்.... எங்கள் வீட்டு டெலிபோனில் அவனுடன் தொடர்பு கொண்டேன். அழுதேன்.... என் இயலாமையைச் சொல்லி அழுதேன்.... இருவரும் திட்டம் தீட்டினோம்.... சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தோம்...

சந்தர்ப்பம் வந்தது. ஒருநாள் பாடசாலை இடைவேளையின்போது வாசலில் வந்து நின்ற மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டேன்.... ராஜகுமாரனுடன் குதிரையில் பறப்பது போல் இருந்தது. எனது புதிய வாழ்வின் வாசல் கதவுகள் பதினைந்து வயதிலேயே எனக்காகத் திறந்தன.

மது இதுதான் எண்ட அக்கா.... இங்கதான் நாம நிக்கப்போறம்" அக்கா என்று அழைக்கப் பட்டவள் மாநிறமாக இருந்தாலும் களையான முகம் ஆனால், அதில் நட்பின் சாயல் இருக்கவில்லை.

இது அத்தான்... சீ.ரீ.பி. டிப்போவில வோச்சரா இருக்கிறார்.... இந்த மூண்டுபேரும் அவங்கட பிள்ளையள்...." வினோதன் எனக்கு அறிமுகம் செய்த ஒவ்வொருவரும் விசித்திர ஜந்துவைப் பார்ப்பதுபோல் என்னைப் பார்ப்பதாகத் தோன்றுகின்றது. அந்த இடம் எனக்கு அந்நியமாகத் தோன்றியது.

என்ன மது யோசிக்கிறாய்... புது இடம்தான். ஆனால், அக்கா குடும்பம் நல்லது. உனக்குப் பிடிக்கும்" வினோதனின் சமாதானங்கள் எனக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. ஆனால், என்ன செய்வதென எனக்குத் தெரியவில்லை. அக்காவின் தொளதொளத்த சட்டையைக் கொண்டு வந்து தந்தான். என் அக்காவின் சட்டையைக்

கூட மாற்றிப் போடாத நான் வேறு வழியில்லாமல் போட்டுக்கொண்டேன். வினோதன் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தான். ஆனால், அதைக் கேட்கும் நிலையில் நான் இருக்கவில்லை. என் சிந்தனை முழுவதும் வீட்டில் என்னை எப்படியெல்லாம் தேடுவார்களோ என்ற எண்ணமே வியாபித்திருந்தது. என்னால் சாப்பிட முடியவில்லை. "ஓ" வென்று அழவேண்டும் போலிருந்தது. இரவு வந்தது பிடிக்காவிட்டாலும் எங்களுக்கு ஒரு அறையைத் தந்திருந்தார்கள். தட்டுமுட்டுச் சாமான்களின் நடுவே கிழிந்த ஒரு பிளாஸ்டிக் பாய்.... அதில் அழுக்கான உறையுடன் ஒரு தலையணை.

"எப்படி எங்கள் மணவறை....நல்லாயிருக்கா..." வினோதனின் கேலியான பேச்சு என்னுள் பயத்தை வரவழைத்தது. "இப்படி இரு மது..." என்னை என் தோள்களில் அழுத்தி இருக்க வைத்துத் தானும் இருந்து கொண்டான்.

"வினோ... நாங்க அவசரப்பட்டு ஓடி வந்திட்டம். நாம நாளைக்கே ரெஜிஸ்டர் பண்ணுவம்" நான் தயங்கித் தயங்கிச் சொல்கிறேன். அவன் பலமாகச் சிரித்துவிட்டான். பக்கத்து அறையில் இருக்கும் வினோதனின் அக்கா குடும்பத்திற்கும் கேட்டிருக்கும் என்ற எண்ணம் என்னைக் கூசவைத்தது. அவன் வாயைப் பொத்தினேன்.

"விசரி...... பதினைஞ்சு வயசில யாரும் ரெஜிஸ்டர் பண்ணுவாங்களா? நாம பதிவு செய்யப் போனமெண்டால் பிடிச்சுப் பொலிஸில குடுத்திடுவாங்க...." நான் மௌனமானேன். அன்று அவனது ஆசைக்கு நான் இரையாகிப் போனேன். தாலி கட்டாமல் மேளம் கொட்டாமல் ஒரு கலியாணம் இருண்ட அறையினில் அரங்கேறியது.... தடுக்க நினைத்தும் தடுக்க முடியாதவளாக நான் உடன்பட்டுப் போனேன்....

ஒரு மாதம் ஓடி மறைந்தது. அக்காவின் முணுமுணுப்பும் அலட்சியமும் எனக்கு வேதனை தந்தது... "வினோ நீங்க கல்லடியில அம்மா வீட்டுக்குப் போங்களன்.... கடற்கரை ஓரம் மாடிவீடு வசதியாயிருக்கும்" நேரடியாகவே அக்கா சொல்லிட எங்கள் அடுத்த பயணம் ஆரம்பமானது. வினோதனின் அம்மா மெல்லிய தேகம் தீட்சண்யமான கண்களும் கொண்ட உயர்ந்த பெண்... பார்வையில் பாசமிருக்கவில்லை. எனக்கு என்னவோ போல் இருந்தது.

"இது தங்கச்சி.... அது தம்பி" என்று அறிமுகப்படலம் முடிந்து வேண்டாத விருந்தாளியாக வீட்டினுள் அடியெடுத்து வைத்தேன். அங்கு அவர்களுக்குச் சம்பளமில்லாத வேலைக்காரியாகிப் போனேன். காலை முதல் மாலை வரை அக்குடும்பத்தில் ஒவ்வொருவரும் விரட்டி விரட்டி வேலை வாங்கினார்கள். நான்

உள்ளத்தால் உடைந்து போனேன். வினோதன் என்ன நடந்தாலும் தனக்குச் சம்பந்தமே இல்லாத மாதிரி நடந்து கொண்டான்.

இத்தனை சோதனைகளின் நடுவே நான் தாயானேன். அடிக்கடி தலைச்சுற்றல் வாந்தி. என்னால் வேலை செய்ய முடியவில்லை. என்னைச்சுற்றி நடப்பவை எல்லாம் எனக்கு அதிர்ச்சி தந்தன.

மிகப்பெரிய அதிர்ச்சி வினோதன் பள்ளிப் படிப்பை ஐந்தாம் வகுப்பிலேயே தொலைத்துவிட்டு நிற்கும் ஓர் ஊர்சுற்றி இளைஞன் என்ற உண்மை. காலையில் கடற்கரை ஓரமாக பழைய மேசையொன்றைப் போட்டு மீன் வாங்குபவர்கட்கு வாங்கும் மீனை வெட்டிக் கொடுப்பான்.... அதில் கிடைக்கும் சொற்ப பணத்தையும் மாலை நேரத்தில் மதுவுக்காகக் கரைத்துவிட்டுத் தள்ளாடிய படியே வருவான். தாயிடம் கையேந்திச் சண்டை போடுவான்.

ஒரு நாள் சண்டை பெரிதாகி இருவரும் வெளியேற்றப்பட்டோம். நான் அழுது அழுது ஓய்ந்து போயிருந்தேன். அழுவதற்கு கண்ணீர் கூட மிச்சமில்லாமல் வற்றிப் போய்விட்டமாதிரியான உணர்வு. வினோதன் மீன்வெட்டும் தகரக் கொட்டிலையே வீடாக மாற்றினான்.... அவனது இயல்புகள் மாறின.

"மது.... கையில காசில்லடி.... " என்று அழுது என் தோடுகளைக் கழற்றி எடுத்தான். அழகான வீட்டில் அன்பான குடும்பத்தில் ராணிபோல் வாழ்ந்தவள்... ஒருவேளைச் சோற்றிற்கு வயிற்றில் ஒரு சீவனுடன் ஏங்கி நிற்கும் கொடுமையான வாழ்வு எனக்கு வந்து சேர்ந்தது. வினோதனுக்கு புதிய புதிய நண்பர்கள் அறிமுகமானார்கள்.

"மது... கெதியா மீனைப் பொரிச்சுக் கொண்டு வாடி" வாசலில் அவனும் நண்பர்களும்... வயிற்றுச் சுமையோடு மிகவும் கஷ்டப்பட்டேன். "எப்பிடி என்ர மனிசி..." புதிய நண்பர்களுக்கு முன்னால் என்னை வேண்டுமென்றே வரவழைத்துக் காட்டுவான். எனக்கு உடலெங்கும் ஒரு நடுக்கம் பரவும். அவர்களது கண்கள் தாய்மையடைந்த நிலையிலும் என்மீது மேயும்...

"வடிவான பெட்டையத் தான் பிடிச்சிருக்காய்" அவர்கள் இளித்தபடி சொல்லிச் சிரிப்பார்கள்.... "வடிவுக்காக மட்டும்தான் பிடிச்சிற்று வந்தனான்.... மது... இது என்ர பிரெண்ட்ஸ்... உன்னைப் பாத்தாலே உன்ர வடிவில மயங்கி எனக்குக் கடன் கடனாத் தாராங்க எண்டாப் பாரன்"

முதல் முதலாக என்னுள் கோபம் அக்கினியாக மேலெழுந்தது. என் கண்கள் சிவந்தன. சொந்த மனைவியை எந்தக் கணவனாவது இப்படிக் காட்சிப் பொருளாக்கிக்

கேவலப்படுத்துவானா?...

"வினோ உங்களுக்கு வெட்கமாயில்லையா..." நான் வீறிட்டு அழுதபடி அவனது மேற்சட்டையைப் பிடித்து உலுக்கினேன். ஏன்டி வெக்கப்படோணும்.... காசு தாறவனுகள வீட்ட கூப்பிட்டு கதைக்க ஏன் வெக்கப்படோணும்...." என்னால் பேசமுடியவில்லை. விம்மி விம்மி அழுதுகொண்டு வீட்டிற்குள் ஓடிவிட்டேன்.

அன்று முடிவு செய்தேன் மானமாய் வாழ ஏதேனும் செய்ய வேண்டும். அந்தக் கிராமத்தில் தையல் கடை வைத்திருக்கும் மாக்கிரற் அக்காவிடம் வேலை கேட்டேன். "இந்த வயிற்றோட தைப்பியா பிள்ள...." என்றா சந்தேகத்துடன்.

"வயிற்றில் இருக்கிற சீவனக் காப்பாத்தத் தான் வேல கேக்கிறன்" என் கண்ணீர் அக்காவை இரங்க வைத்தது. எனக்கு ஒரு வழி பிறந்தது. எனக்கு அநோமிகா பிறந்தாள்... என் வாழ்வில் ஒரு பற்று வந்தது.... அநோமிகா வளர்ந்தாள்.

ஒருநாள் கல்லடிப்பாலச் சரிவில் அமைந்திருக்கும் சந்தையில் காய்கறி வாங்கிக் கொண்டிருந்த போது அண்ணாவைக் கண்டேன். என்னைக் கண்டதும் அவனது முகம் கறுத்தது... "தூ" என்று துப்பிவிட்டு மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டான். அவன் துப்பிய எச்சில்போல என் வாழ்வும் நாறிப்போய்விட்டது என்று அவனுக்குத் தெரியுமோ தெரியாது.

அநோமிகா நன்றாகப் படித்தாள்.... பருவமெய்தினாள்.... எனக்குக் கவலை கூடியது. வினோதன் எல்லாக் கெட்டப் பழக்கங்களினதும் மொத்த உருவமாக இருந்தான். நான் வீட்டுத் தேவை களுக்காக உழைப்பதால் என்னைத் தொல்லை செய்வது குறைந்தது. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல அந்த நாள் வந்தது.

"மது" என்றான் குழைவாக.... நீண்ட நாட்களின் பின் அவனது குழைவான குரல் எனக்கு வியப்பாக இருந்தது.

"என்ன" என்றேன்.

"நம்மட அநோமிகாவ மைக்கேல்ர மகன் யோசப்பு கேக்கிறான்" எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. பதினைந்து வயது நிரம்பிய நன்றாகப் படிக்கும் என் மகளை வினோவை விடக் கேவலமான போதைப்பொருள் பாவனையாளன் பொறுக்கி என்றெல்லாம் சொல்லப்படுகிற யோசப்புக்கு கட்டிக் கொடுப்பதா... என் அங்கமெல்லாம் பதறியது.

நான்தான் அழகான என் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு புழுவாகக் குறுகிக் கிடக்கின்றேன் என்றால் என் பிள்ளையுமா?.... "வினோ உங்களுக்குப் பைத்தியம்

பிடிச்சிற்றுதா?... நான் வீறிட்டுக் கத்தினேன். அநோமிகா கிளாசுக்குப் போயிருந்தாள்.

"ஏன்ரீ கத்துறாய்... அவனிட்டக் கொஞ்சம் காசிருக்கு... பொம்பிள விஷயங்களில தான் கொஞ்சம் அப்படி இப்படி.... இவள முடிச்சிற்றால் நல்லாயிருவான்". கடைவாயில் எச்சில் வழிய அவன் சொன்ன விதமும் இகழ்ச்சிச் சிரிப்பும் என் அடிவயிற்றில் அமிலத்தைச் சுரக்க வைத்தது.

"மகளத் தருவன் எண்டு காசு வாங்கிற்றாயா?.... நான் கோபத்துடன் கேட்கிறேன். "அப்படி வாங்கல்ல கடனாத்தான் வாங்கினனான்"

"எவ்வளவு"

"ஆகப் பத்தாயிரம் தான்..." எனக்குத் திகீர் என்றது. பத்தாயிரத்தை உழைத்து எடுப்பது இலகுவான காரியமா?

"வினோ... உனக்கு அப்படி என்ன செலவு.... நான் மாடு மாதிரிக் கஷ்டப்பட்டு பிள்ளையையும் வீட்டையும் பாக்கிறன். நீ விடியப் போனாப் பொழுதுபட குடிச்சு வெறிச்சு வாறாய்.... பிறகென்ன கடன்" நான் அழுதுகொண்டே கேட்கிறேன்.

"நான் ஆம்பிளடி... எனக்கு எத்தின செலவு இருக்கும்.... நீ என்ன ஆதனம் காசு பணம் அள்ளிக்கொண்டு வந்தனீயா... வாயைப் பொத்திக் கொள் நான் நினைச்சாச் செய்து காட்டுவன்".

நான் வாயை மூடிக்கொண்டேன். போதையில் இருக்கும் அவனிடம் பேசி எதையும் செய்ய முடியாது. என்று எனக்குத் தெரியும். இத்தனை நாளும் இல்லாத புதிய பயம் என்னுள் முளைவிட்டது. இதிலிருந்து பிள்ளையை எப்படிக் காப்பாற்றப் போகிறேன் என்று நினைக்கப் பயங்கரமாகத் தலையிடித்தது.

நாட்கள் நகர்ந்தன. அவனது போக்கில் மாற்றமில்லை. "அநோமி போத்தலைக் கொண்டுவா" என்பான் நண்பர்களுக்கு மத்தியில் இருந்த படியே. அவளைத் தடுத்துவிட்டு நான் போத்தலுடன் போவேன்...

"எங்கடி அவள்" என்பான்.

"சுகமில்லை" என்று நான் பொய் சொல்வேன்.

அநோமியின் பிறந்த நாள்... அதனைக் கொண்டாட என்னிடம் பெரிய வசதி யில்லை. இருந்தாலும் தையல் காசில் சேமித்து ஒரு சுரிதார் வாங்கி வைத்திருந்தேன். அதைக் கொடுத்த போது அவளது முகத்திலே தெரிந்த மகிழ்ச்சி என்னை நெகிழ வைத்தது. கோயிலுக்குப் போய் வந்தோம்.

மாலை வேளை வினோ ஒரு பார்சலுடன் வந்தான். "அநோமி" என்று இரைந்து கத்தினான். நனைந்த கோழிக்குஞ்சாக நடுங்கியபடி அநோமி வந்தாள்.

"அநோமி உன்ர பிறந்த நாளுக்கு யோசப்பு ஐயாயிரம் ரூபாய்க்குச் சட்டை வாங்கித் தந்திருக்கான்.... போட்டு ஒரு படமெடுத்துத்தா..." அவனது வார்த்தைகளின் அர்த்தம் புரியாத அனோமிகா என்னையும் அவனையும் மாறிமாறிப் பார்த்தாள். என்னால் பேசமுடியவில்லை. வார்த்தைகள் தொண்டையுள் சிக்கிக் கொண்ட மாதிரியான உணர்வு.

"வேண்டாம் அப்பா... ஆரும் வாங்கித்தாறது... அம்மா வாங்கித் தந்ததே போதும்" நான் நினைத்தபடியே அநோமிகா பேசியது எனக்கு மகிழ்ச்சி தந்தது. வினோ கடுமையாகக் கோபப்பட்டான். அவனது எண்ணம் நிறைவேறவில்லையே என்ற ஆதங்கம். இரைந்து கத்தினான் ஏசினான் நாங்கள் இருவரும் பேசாமல் இருந்து விட்டோம். நாட்கள் நகர்ந்து நான்கு மாதங்களை விழுங்கியது. அன்றொரு புதன்கிழமை.

சலனமற்று விரைந்து கொண்டிருந்த எங்கள் வாழ்வின் சந்தோஷமெல்லாம் அன்று தொலைந்துபோனது. நான் புதுவருடத்திற்கான தையல் வேலையெல்லாம் முடித்துவிட்டு வீட்டிற்கு வர இரவு ஒன்பது மணியாகிவிட்டது. நான் தொடர்ந்து தையல் முயற்சியில் ஈடுபட்டதால் தகரவீட்டைப் பெரிதாக்க முடிந்தது. இடுப்புயரம்வரை சீமெந்தால் கட்டி மேலே தகரம் அடித்திருந்தோம். இரு சிறிய அறைகள் ஒரு முன் மண்டபம். செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே நுழைய முற்பட்ட நான் கண்டகாட்சி என்னை அதிர்ச்சியடைய வைத்தது. என் ஆசைமகள் அரைகுறையாகக் கிழிந்த ஆடையுடன் வினோவுடன் போராடிக் கொண்டிருந்தாள். என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை.

"அப்பா.... என்ன விடுங்க... நீங்க கொஞ்சநாளா என்னோட சேட்ட விடுறீங்கெண்டு அம்மாட்டச் சொல்லல்ல... அம்மா உங்கள இன்னும் நல்லவன் எண்டு நினைக்கிறா..." அழுதுகொண்டே என் மகள் கையை விடுவிக்கப் போராடிக்கொண்டிருந்தாள்.

"அம்மா எண்டா எனக்குப் பயமா.... என்னோட ஓடி வந்தவள் தானே அவள்.... இஞ்சபார் நீ யோசப்பத் தான் கட்டோணும் நானும் உன்ன முடிச்சித்தாரனெண்டு அஞ்சும் பத்துமா அம்பதாயிரத்துக்கு மேல கடன்பட்டுட்டன்...." வினோ அவளது தலைமயிரை இறுகப் பற்றிக் பிடித்துக்கொண்டு கன்னத்தை இறுகத்திருகினான்.

"அதுக்கு நீயேன்.... என்ற சட்டை எல்லாம் கிழிக்கிறாய்.... விடு"

"அநோமி இப்படி இருக்கிறதால தானே உனக்கும் உன்ர அம்மாவுக்கும் திமிர் வருகுது.... நீ ஆர் என்ர மகள்... நான் போட்ட விதையில இருந்து முளைச்ச மரம்... அந்தப் பிரயோசனத்த மத்தவன் அனுபவிக்க முதல் நான் அனுபவிச்சா ஆரு கேக்கிற... பிறகு உன்ர அம்மா எங்க மாப்பிள தேடுவாள்.... எவன் கட்டுவான் உன்ன... எண்டு பாக்கிறன். அவனுடைய கொக்கரிப்பும் மகளின் வீறிட்ட அலறலும் என்னை உணர்ச்சிகளின் உச்சத்திற்குக் கொண்டு சென்றது. பெற்ற தந்தையே மகளைச் சேதப்படுத்த நினைக்கும் செயற்பாட்டை தாய்மனம் ஏற்றுக்கொள்ளுமா? எத்தனை போதைநிலை என்றாலும் சொந்த இரத்தத்தையே களங்கப்படுத்த நினைப்பவன் மனிதனா. நான் என்னை மறந்தேன் வாசலில் சாத்தியிருந்த உலக்கையை தூக்கி ஓங்கி அடித்தேன்.... வினோ இரத்த வெள்ளத்தில் வீழ்ந்த பின் தான் நான் சுயநினைவை அடைந்தேன்.

வினோ கோமா நிலையில் வைத்தியசாலையில்.... நான் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையில் எதிர்பாராமல் அடித்துவிட்டேன். என்று சாட்சி சொல்லி இந்தச் சிறையில்.

"அம்மா எனக்காகத்தானே இப்பிடி வாழ்க்கையை அழிச்சிட்டீங்க" என் மகளின் வார்த்தைகள் என் நினைவை மீட்டன.

"அநோமி.... அம்மா அப்பா எண்ட காவல உடைச்சுக்கொண்டு ஊர், பேர் தெரியாதவன நம்பி அவன் பின்னால என்னப்போல இண்டைக்கும் ஓடுற ஒவ்வொருவரும் யோசிக்க வேணும் மா... அந்த வயசில வாழ்க்கை பற்றி எதுவும் தெரியாம நாங்க எடுக்கிற பிழையான முடிவுகள் எவ்வளவு கொடுமை.... அநோமி.... உன்ர பாங்க் எக்கவுண்டில ரெண்டு லெட்சம் ரூபா காசு இருக்கு.... மாக்ரட் அக்காவோடையே இரு.... அப்பாவையும் போய்ப்பாரு. மகள் உன்ன விட்டா அவருக்கும் ஆருமில்ல தானே..." அநோமி என்னை வியப்புடன் பார்க்கிறாள். மன்னிப்பது தானே பெண்ணுக்குப் பெருமை... மகளைப் பூரணமாகப் காப்பாற்றிவிட்ட நிறைவுடன் எழுகிறேன் நான். சிறைச்சாலை மணி அடிக்கிறது.

தினக்குரல் 17.06.2012

# குயில் குஞ்சுகள்......

"டிரிங்"

பாடசாலையின் மின்சார மணி அடித்து ஓய்கிறது.

வகுப்பறையில் இருந்து வெளியே வந்த நான் அலுவலகத்தை நோக்கி கடக்கிறேன். எனக்குக் காலை வணக்கம் சொல்லியபடியே என்னைக் கடந்து போகும் ஒவ்வொரு ஆசிரியர்கட்கும் பதில் வணக்கம் சொல்லியபடியே நடக்கும் என் கண்கள் பாதையின் இருமருங்கிலும் வளர்ந்துள்ள பிச்சிப் பூ மரங்களில் தாவுகின்றது. வெள்ளை முத்துக்களை அள்ளிச் சிதறினாற்போல அலாதியான அழகு. இந்தப் பாடசாலையின் விசேடமே அழகான பூஞ்செடிகள் தான். காலை வேளையில் பசுமையான தாவரங்களையும் அழகான பூக்களையும் பார்க்கும் போது ஒவ்வொரு பிள்ளைகளும் மன ரீதியாக ஒரு மகிழ்வைஅனுபவிப்பார்கள் என்ற தத்துவஞானிகளின் கருத்துகள் எத்தனை உண்மை என எனக்குப் புரிகிறது.

அனுவலகத்துள் வந்த நான் கதிரையில் அமர்ந்து என் முன்னே அடுக்கி வைக்கப்பட்டிருந்த கோப்புகளை ஒவ்வொன்றாகப் பார்க்கத் தொடங்கினேன். வாசலில் நிழலாடியது.

நிமிர்ந்த என் பார்வையில் பத்துப்பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறு பெண்ணுடன் நின்ற ஒரு மூதாட்டி பாடுகிறாள். நீண்ட தூரம் நடந்து வந்தமையால் வியர்த்துப் போன முகம். மூதாட்டியாக இருந்தாலும் தோற்றத்தில் ஒரு கம்பீரம் தெரிந்தது "உள்ளே வாங்கம்மா" எனது மென்மையான குரல் தந்த உத்வேகத்தில் இருவரும் உள்ளே வருகின்றனர். எனது மேசைக்கு முன்னால் உள்ள இரு கதிரைகளிலும் அவர்களை அமரச் சொல்கிறேன். தனது சேலைத் தலைப்பினால் முகத்தை அழுத்தித் துடைத்தபடி என் முன்னால் அமர்ந்து தன்னைச் சுதாகரித்துக் கொள்கிறாள் அந்த மூதாட்டி.

"என்னம்மா என்ன விசயம்?" என் முன்னால் இருந்த தண்ணீர் போத்தலின் மூடியைத் திறந்து அந்த மூதாட்டியிடம் நீட்டியபடியே கேட்கிறேன். "இந்தப்

பிள்ளையைப் பள்ளியில் சேர்க்க வேணும் அம்மா. என்னைத் துறுதுறுவென்று பார்த்தபடி இருக்கும். சிறுமியில் என் பார்வை தாவி மீள்கின்றது. சுருண்ட முடி, வரைந்தவைகள் போல் அழகான கண்கள், சிறிய வாய் பலரையும் கவரக்கூடிய ஏதோ ஒன்று அந்தக் குழந்தையிடம் மறைந்திருப்பது எனக்குப் புரிகிறது.

"இவ்வளவு நாளும் படிச்சது எங்கம்மா....." "எங்கட ஊரில் தான் படிச்சவள்" "உங்கட பிள்ளையோ....."

தயக்கத்துடன் கேட்கிறேன். இந்த மூதாட்டிக்கு இந்த வயதில் ஒரு பிள்ளை இருக்கக் கூடுமோ என்ற எண்ணம் என்னுள்ளே ஓடுகிறது.

"இல்லையம்மா என்ர பேத்தி....." "இந்தப் பிள்ளையின் பெற்றோர்... நான் வார்த்தைகளை முடிக்காமல் மூதாட்டியைப் பார்க்கிறேன்".

"பெற்றோர் இருந்தும் இல்லாத அனாதைப் பிள்ளையம்மா...." என்னால் கஷ்டப்பட்டு இந்தப் படிப்பை மட்டு தான் குடுக்க முடியும்.... நல்லாய் படிப்பாளம்மா.அதுதான் எப்பிடியென்றாலும் உங்களிடம் கெஞ்சிக் கேட்டு இந்தப் பள்ளியில் சேர்க்க வந்தனான்".

இவ்வளவும் பேசி முடிக்கும் போதே மூதாட்டியின் குரல் நலிந்து மூச்சு வாங்கியது கண்களின் துளிர்ந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"உங்களிடம் சொன்னா என்னம்மா...." மூதாட்டி சொல்லத் தொடங்கினாள் நான் கேட்கத் தயாரானேன்.

அந்தக் கிராமத்திற்கு அழகே பச்சைக்கம்பளம் விரித்தாற் போன்ற வயல் நிலம்தான். தொலை தூரத்தில் தெரியும் உயர்ந்த குன்றுகள். குன்றுகளைத் தழுவிச்செல்லும் வெண் முகிற் கூட்டம் வயல்வெளியே ஊடறுத்துச் செல்லும் தார்வீதி. அழகான அந்தக் கிராமத்தில் கந்தசாமி என்று பெயர் சொல்லிக் கேட்டாலே ஊரார் விரல் நீளும் திசையில் சிறிதாய் பார்க்க மிக அழகானதாய் அமைந்த கல்வீடு தென்படும். வீட்டைச் சுற்றி வரிசையாய் நிற்கும் தென்னை மரங்கள்.... வீட்டு முற்றத்தில் பூக்களை அள்ளிச் சொரிந்து அழகாக விளங்கிய நித்திய கல்யாணிச் செடிகள். அதுதான் கந்தசாமி சுந்தரலட்சுமி தம்பதிகளின் வசந்தமாளிகை. கந்தசாமி நல்ல உழைப்பாளி. அதேவேளை மிகவும் நேர்மையானவன். இந்த இனிய இல்லறத்தின் சாட்சிகளாய் செந்தூரன், சங்கீதா என்று இரு பிள்ளைச் செல்வங்கள்.

கந்தசாமியின் உலகமே அந்த அழகான குடும்பம் தான். பயிர் விளைந்தால் வயல்காவலுக்குப் போவான். சில நாட்களில் யானைகள் வாழும் அடர்ந்த காட்டுப்

பகுதிக்குப் போய் விறகு வெட்டி வருவான். சங்கீதா என்றால் அவனுக்கு உயிர். அவள் என்ன கேட்டாலும், என்ன கஸ்டப்பட்டாவது அதை வாங்கிக் கொடுத்து விடுவான்

இந்தப் பாசமானதம்பதிகளிடையே பிள்ளைகள் விடயத்தில் காரசாரமான விவாதங்களும் நடக்கும்.

"பெண் பிள்ளைகளுக்குக் கூடச் செல்லம் கொடுக்கக் கூடாது என்பாள்" அவள்.

"என் பிள்ளைகளுக்கு என் உயிரையே கொடுப்பேன் என்று சொல்லி அவளைத் துடிக்க வைப்பான் அவன்."

ஒரு நாள் கடைக்குப் போன கணவன் மிகவும் மகிழ்ச்சிகரமாகத் திரும்பி வருவதைக் கண்ட சுந்தரி வழமைபோல் அவனைச் சீண்டினாள்.

"என்ன ஒரே கொண்டாட்டமாக இருக்குது.... லொத்தரில பரிசு கிடைச்சிற்றோ" வாசல் காதவில் சைக்கிளைச் சாத்தி வைத்து விட்டு நிமிர்ந்தவனுக்கு மனைவியின் கிண்டல் புரிகிறது.

"சுந்தரி பரிசு கடவுள் எங்கட கையில் எப்பவோ குடுத்திட்டாரே.... என்ன முழிக்கிறாய்.... நம்மட பிள்ளைகளைத் தான் சொல்றேன். இண்டைக்கு சங்கீதாவைப் படிப்பிக்கிற துரைசாமி மாஸ்டரைச் சந்திச்சனான்.... என்ன சொன்னவர் தெரியுமோ.... இந்த மார்கழியில நடக்கப்போற ஓ...எல் சோதினையில் எங்கட சங்கீதா 9ஏ எடுப்பாளாம். டவுன் பள்ளியில கொண்டு போய் விஞ்ஞானம் படிக்கவிட்டால் கொஞ்ச நாளில எங்கட சங்கீதா படிச்சு டொக்டராய் வந்திடுவாளாம்.... கொடுத்து வைச்ச மனிசனாம் நான்....."

வீட்டின் வாசற் கதவருகே அமர்ந்திருந்த சுந்தரியின் அருகே வந்து அமர்ந்து சந்தோசத்துடன் சிரிக்கும் கணவரைப் பார்க்க அவளுக்கே பெருமையாக இருக்கிறது. சங்கீதா கெட்டிக்காரிதான், நன்றாகப் படிப்பாள் ஆடுவாள், பாடுவாள் அந்த ஊரில் அவளுக்கு மிகவும் நல்ல பெயர் இருந்தது.

"அவர்ர வாய்ச் சொல் போல நடந்திடோனும்.... அந்தப் பிள்ளையாருக்குத் தங்கத்தால சங்கிலி வாங்கிப் போடுவேன். தன் கணவனை வாஞ்சையுடன் பார்த்தபடி பாசத்துடன் சொல்கிறாள் அவள்....

காலம் சில வாரங்களை விழுங்கி மாதங்களை நாடி ஓடியது. செந்தூரன் ஒரு நாள் தலையைச் சொறிந்தபடியே தாயின் முன்னே வந்து நின்றான்.

"என்ன மகன் பள்ளிக்குப் போன நீ திரும்பி ஓடிவந்திட்டாய் ஏதும் சுகயீனமோ !! எனக்கு இனிமே பள்ளிக்குப் போக ஏலாது அம்மா...... கணக்கும் இங்கிலீசும் சுட்டுப்

போட்டாலும் எனக்கு விளங்குதில்ல. சரியெடுக்காட்டி அடிக்கிறாங்க ஏசுறாங்க...."

அவனது கண்களில் இருந்து கண்ணீர் வடிகிறது. சுந்தரி எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள் அவன் கேட்கவில்லை. கந்தசாமியும்தன் பங்கிற்கு நிறையப் புத்திமதி சொல்லிப் பார்த்தான் கடைசியில் செந்தூரனின் பிடிவாதமே வென்றது. தந்தையுடன் அவனும் சிறு கூலி வேலைக்குச் செல்லத் தொடங்கினான். அவனது சின்னக் கைகளால் விறகு வெட்டுவதைப் பார்க்கும் போது தந்தைக்கு மனமெல்லாம் பற்றி எரியும். பிள்ளைகளைத் தண்டிக்கும் ஆசிரியர்களை எல்லாம் மனதுக்குள் திட்டித் தீர்ப்பான்.

"சம்பளத்துக்குத் தானே படிப்பிக்கிறாங்க கொஞ்சம் அன்பாய் பாசமாய் சொல்லிக் குடுக்கக் கூடாதோ"

சில நாட்கள் நகர்ந்தன. அன்று ஒரு வெள்ளிக்கிழமை காலையிலேயே விறகு வெட்டக் காட்டிற்குச் சென்ற தகப்பனும் மகனும் பசியோடு வருவார்களே என்று விரைவாகச் சமைத்துக் கொண்டிருந்தாள் சுந்தரி. வெந்தயக் குழம்பை இறக்கி வைத்து விட்டு பயற்றங்காய் கறியை அடுப்பில் வைக்க முயன்ற போது வாசலில் பக்கத்து வீட்டுக் கற்பகத்தின் குரல் அழைப்பது கேட்கிறது.... அக்கா சுந்தரி அக்கா....

கறியை இறக்கி வைத்து மூடிவிட்டு வாசலுக்கு ஓடிவருகிறாள். வாசலில் பரபரப்பாக நிற்கும் கற்பகத்தைப் பார்க்க நெஞ்சில் சுள்ளென்று வலி காட்டிற்கு விறகு வெட்டச் சென்ற கணவனுக்கும் மகனுக்கும் ஏதும் நடந்திருக்குமா.....

"என்ன கற்பகம்....கையெல்லாம் பதறுது. என்ன பிள்ள விசயம் "விசயத்தைச் சொல்லாமல் தன் தலையில் அடித்துக் கொள்ளும் கற்பகத்தின் செயல் அடிவயிற்றில் அமிலத்தைச் சுரக்க வைக்கிறது. கதவு நிலையைப் பற்றிப் பிடித்து தன்னைச் சுதாகரித்துக் கொள்கிறாள்."

"உன்ர குடியில நெருப்பள்ளிப் போட்டுட்டானுங்களே அக்கா.... சுந்தரி அக்கா உங்கட சங்கீதா..... அந்த கராச்சில நிக்கிற பொடியனோட வானில் ஏறிப்போறாளாம் அக்கா.... எப்படி நீ இதைத் தாங்குவாய்.... ஏனைய வார்த்தைகள் எதுவும் சுந்தரியின் காதுகளில் ஏறவில்லை. அவளது மகள் ஊர் பேர் தெரியாத ஒருவனுடன் ஓடிவிட்டாள் என்ற செய்தி இடிபோல் அவளைத் தாக்கியது. அவள் மயங்கிச் சாய்ந்தாள். சுந்தரி கண்விழித்த போது சிவந்த கண்களுடன் சுவரில் சாய்ந்திருந்த கந்தசாமி தான் அவளது பார்வையில் பட்டான். கன்னங்களில் நீர் வழிந்தோட மௌனமாக அழும் கணவனை தொடர்ந்து பார்க்க அவளால் முடியவில்லை. கண்களை மூடிக் கொள்கிறாள்."

"அம்மா எழும்பும் மா..... நீங்க ரெண்டு பேரும் அழுது கொண்டிருந்தால் எல்லாம்

சரியாகிடுமா... எழும்பும் மா..."

செந்தூரன் தாயை மெல்ல எழுப்புகிறான். " சுந்தரி என்ர மானம் மரியாதை எல்லாம் பொயிட்டுது சுந்தரி.... நான் வெளிமனிசர்ர முகத்தில எப்படி முழிப்பன்.... எங்கட ஆசை எல்லாம் பொய்யாய் போச்சே கடவுளே..."

தலையில் அடித்துக் கதறும் கணவனின் கைகளைப் தாவிப் பிடிக்கிறாள் சுந்தரி..... அவளது மடியில் முகம் புதைத்து விம்மி விம்மி அழுகிறான், கந்தசாமி... . கதறும் பெற்றோரைத் தேற்றும் வகையறியாமல திகைத்து நிற்கிறான் செந்தூரன்.

அடுத்து வரும் இரண்டு நாட்களும் பெற்றோரைச் சாப்பிட வைக்கப்பாடாய் படுகிறான் செந்தூரன். மகனின் கெஞ்சுதலிற்கு சுந்தரி கொஞ்சம் இசைந்து வந்தாலும் கந்தசாமியை மசிய வைக்க முடியவில்லை. இரண்டு நாட்களும் அன்னம் தண்ணி எதுவும் இன்றி மூலையில் சுருண்டு கிடந்த கணவனைத் தேற்ற வழியின்றித் திகைத்தாள் சுந்தரி. சம்பவம் நடைபெற்று மூன்றாம் நாள் காலை வேளை, காலை வேளைக்குரிய வேலைகளை விரைவாக முடித்துக்கொண்டு கொடியில் கிடந்த சேலையை விரைவாகச் சுற்றிக் கொள்ளும் தாயை வியப்புடன் பார்க்கிறான் செந்தூரன்.

"எங்கம்மா வெளிக்கிடுறீங்க....."

"நான் மட்டுமில்ல மகன் நீயும் வா.... ரெண்டு பேரும் போய் நடராசா மாமாவை கூட்டிக் கொண்டு வருவம்... ரெண்டு பேரும் எவ்வளவு சொல்லிப் பார்த்திட்டம் அன்னம் தண்ணி இல்லாமல் இப்படிக் கிடந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்..... என்ர பெத்த வயிறுந்தான் பத்தி எரியுது. நாம செய்த பாவம்..... சைக்கிள எடு மகன்" பின்கதவைப் பூட்டிக் கொண்டு வாறன் இருவரும் நடராசா மாமாவுடன் வீட்டிற்குத் திரும்பி வந்த போது சுந்தரியின் தலையில் மற்றொரு பேரிடி விழுந்தது. மானமே பெரிதென வாழ்ந்த கந்தசாமி பயிருக்கு விசிறவிருந்த பூச்சி மருந்தைக் குடித்து பெயர் நீங்கிப் பிணமாகி இருந்தான்....

"நீங்களும் என்னை விட்டிற்று ஓடிற்றீங்களா அப்பா என்ற அவளது அலறல் ஒலி அந்தப் பிராந்தியம் எங்கும் ஒலித்தது. மரம் போல் விறைத்துச் சாய்ந்த தாயைச் செந்தூரன் இறுகப் பற்றிக்கொண்டான். அன்று முதல் அவளது வாழ்வில் நம்பிக்கையே செந்தூரன் தான். பகல் முழுவதும் கடுமையாக உழைப்பான் இரவில் அம்மாவின் மடியில் படுத்துக்கொண்டே பல கதைகளையும் பேசி அவளது துயரத்தைக் குறைப்பான். காலம் மெதுவாக ஓடியது. நான்கு வருடங்கள் நகர்ந்து போனதே ஒரு கனவாகப் போயிற்று."

மார்கழி மாதத்தின் ஒரு புதன்கிழமை. நாட்டில் பெய்த தொடர்மழையால் நாடே வெள்ளக் காடாக விளங்கியது. வயல் நிலமெல்லாம் வெள்ளத்தில் மூழ்கி மக்களெல்லாம் வெளியே வர முடியாமல் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கின்றனர்.

வாசல் கதவைத் திறந்து வெளியே எட்டிப் பார்க்கிறாள் சுந்தரி. வெள்ளம் வடிந்தோடியதால் ஒரு சிலர் பாதை வழியே செல்வது தெரிகிறது. வாசல் கதவைச் சாத்திவிட்டு உள்ளே வரும் தாயைப் பார்த்ததும் பாயைச் சுருட்டி வைத்துவிட்டு எழுந்து அமர்கிறான் செந்தூரன்.

"என்னம்மா வெள்ளம் குறைஞ்சிருக்கோ..." "ஓம் மகன்..." இண்டைக்குத் தான் ரோட்டால சனம் போகுது. கொஞ்சம் பொறு ஐந்து நிமிசத்தில தேத்தண்ணி வச்சுத் தந்திடுறேன். அடுப்பை மூட்டி கேத்தலை நீர் நிரப்பி அடுப்பில் வைத்தாள்........ சீனிப் போத்தலுள் கரண்டியை நுளைத்தவளின் செவிகளில் அந்தக் குரல் வந்து தாக்கியது.

"அம்மா......"

அதிர்ச்சியோடு இருவரும் வாசலை நோக்கித் திரும்புகின்றனர் அங்கே ஒரு மூன்று வயது மதிக்கத்தக்க பெண் குழந்தையைக் கையில் பிடித்தபடி அவள் நின்று கொண்டிருந்தாள்.

நான்கு வருடங்களின் முன்னே குருவிக் கூடு போல் இருந்த குடும்பத்தைக் கல்லெறிந்து தகர்த்து விட்டுப் போனவள் சங்கீதா என்று கீதமாக பெயர் வைத்த தந்தையை முகாரிராகம் பாட வைத்த பெருமைக்குரியவள்.... குடை பிடித்து வந்தாலும் மழைச்சாரலில் நனைந்ததால் மெல்ல நடுங்கும் பெண் குழந்தையின் கையை இறுகப் பற்றிப் பிடித்திருந்தாள். ஒட்டி உலர்ந்த தேகம் குழி விழுந்த கண்கள்.... கறுத்து உருமாறி நிற்கும் அவளைப் பார்க்க சுந்தரியின் அடிவயிற்றில் இருந்து ஆவேசம் பொங்கி வருகிறது.

"எங்கடி வந்த நீ..." ஆரைத் தேடி வந்த நீ ...... சுந்தரியால உரத்துப் பேச முடியவில்லை. வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்குகின்றன.

"உங்கள விட்டா நாங்க எங்க போறது அம்மா..... நீங்க அடிச்சாலும் உதைச்சாலும் நானும் என்ர பிள்ளையும் இங்கதான் இருக்கவேணும்.... அந்த மனிசன் எங்கள விட்டுட்டு வேறொருத்தியோட கொழும்புக்கு ஓடிற்று அம்மா...."

"நீயே ஓடுகாலி. அதுதான் அவன் உதறிப்போட்டுப் போயிற்றான். எங்கையெண்டாலும் போய் சாகிறது தானே. மிச்சம் இருக்கிற மானத்தைப் போக்கவா இங்க வந்த நீ......!"

சுந்தரியால் சுதாகரித்துக் கொள்ள முடியவில்லை. பாய்ந்து சென்று சங்கீதாவின்

தலைமயிரைப் பற்றி மாறி மாறி அறைகிறாள். தாயை அறைவதைக் கண்டு அச்சிறு குழந்தை விரீட்டு அலறுகிறது. புதிய வருகையினால் திகைத்துப் போய் இருந்த செந்தூரனை குழந்தையின் அலறல் சுயநினைவுக்கு கொண்டு வருகின்றது. ஓடிச் சென்று தாயின் கையைப் பற்றிப்பிடிக்கிறான்.

"அம்மா...... கொஞ்சம் பொறுமையாய் இருதாயே. அந்த சின்னப் பிள்ளை பயந்து அழுகுது பார். சனமெல்லாம் ஓடி வந்து வேடிக்கை பார்க்கத் தொடங்கிடும் கொஞ்சம் கேளம்மா...... சுந்தரி சோர்ந்து போய் அமர்ந்து கொண்டாள். சங்கீதா அந்த வீட்டில் நடமாடத் தொடங்கினாள். தாயும் மகளும் பேசிக் கொள்வதில்லை. சங்கீதாவின் மேல் கோபத்தைக் காட்டினாலும் பேத்தி ரம்மியாவை அவளால் வெறுக்க முடியவில்லை. செந்தூரனுடன் ரம்மியா விரைவில் ஒட்டிக்கொண்டாள்.

"அம்மம்மா என்னோடயும் கோபமா?" என்று மடியில் அமர்ந்து சுந்தரியின் முகத்தை நிமிர்த்திக் கேட்கும் போது சுந்தரி நெகிழ்ந்து போனாள்..... ஆரம்பத்தில் வீட்டி ற்குள்ளேயே முடங்கிக் கிடந்த சங்கீதா படிப்படியாக வெளியிலும் சென்றுவர ஆரம்பித் தாள். உற்றார் உறவினர்கள் ஏளனம் செய்வது சுந்தரியின் காதுகளில் விழுந்தாலும் அவற்றைப் புறக்கணிக்கத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டாள்."

ஒரு வருடம் வரை மௌனமாகவே நாட்கள் நகர்ந்தன. "அம்மம்மா அம்மா வேலைக்குப் போகப் போறாவாம்...."

அப்பம் சுட்டுக் கொண்டிருந்த சுந்தரியின் தோளில் சாய்ந்து விளையாடிக் கொண்டே செல்கிறாள் ரம்யா....... சுட்ட அப்பத்தை சாப்பிட்டுக் கொண்டிருந்த செந்தூரனின் தட்டில் வைத்தவள் ரம்மியாவின் முகத்தைத் திரும்பிப் பார்க்கிறாள்.

"நல்லாப் படிச்ச ஆட்களுக்கே வேலை இல்லையாம் உங்கம்மா படிச்சிக் கிழிச்சவ தானே வேலைகளைத் தூக்கித் தான் குடுப்பாங்க..... முகத்தைக் கழுவிக் கொண்டு பின்வாசலால் உள்ளே நுழையும் சங்கீதாவின் செவிகளில் இவ்வார்த்தைகள் முட்டி மோதுகின்றன. முகத்தைத் துண்டால் துடைத்தபடி செந்தூரனைப் பார்க்கிறாள்."

"செந்து நான் கொம்பியூட்டர் சென்ரருக்கு வேலைக்குப் போகப் போறன்....... எனக்கும் நாலு காசு தேவை தானே....." மறு நாளே வேலைக்குப் போகத் தொடங்கிவிட்டாள். படிப்படியாக அவளது நடை உடை பாவனை மாறத் தொடங்கியது. சுந்தரி அடிக்கடி முணுமுணுக்கத் தொடங்கினாள்.

"செந்தூரன் அவள்ட போக்கு சரியில்ல கண்டிச்சு வை."

செந்தூரன் தான் சமாதானப்படுத்துவான். "அம்மா ஒரு வாழ்க்கை பாழாய் போயீட்டுது.... பாவம் அவளும் மனுஷிதானே" சுந்தரி வாயை மூடிக் கொள்வாள்......

சில நாட்களில் மீண்டும் ஒரு பிரச்சினை முளைத்தது. "செந்து... என்னோட வேலை செய்யிற ரவியும் நானும் விரும்புறம் கலியாணம் செய்து கொள்ள நினைச்சிருக்கிறம்... ஆனால் ஒரு பிரச்சினை..... அந்தாள் ரம்யாவை ஏற்றுக் கொள்ளாதாம்......"

வெங்காயம் உரித்துக் கொண்டிருந்த சுந்தரி கோபத்துடன் நிமிர்ந்து பார்க்கிறாள். நெஞ்சு விம்மித்தணிகிறது.

"அம்மா ஆகிற தகுதி ஒண்டுமே இல்லாத உங்களுக்கு எதுக்குடி பிள்ளைகள் கருவிலேயே கலைச்சு விட்டிருக்கலாமே....."

"செய்திருக்கலாம்.... ஓடிப்போனவன நம்பிட்டன்... இனிக் கவனமாக இருப்பன் செந்து ரம்யாவை நீங்கள் தான் பார்த்துக் கொள்ள வேணும்..... கொஞ்சம் நாள் போகட்டும் பிறகு பார்ப்பம் வாசலில் விளையாடிக் கொண்டிருந்த ரம்யா ஓடி வந்து சுந்தரியின் மடியில் அமர்ந்து கொள்கிறாள்."

"அம்மம்மா அந்த ரவி அங்கிள் என்னை ஒரே ஏசுறவர் நான் அங்க போகமாட்டன். உங்களோடயே இருக்கிறன். அன்று பொறுப்பெடுத்தவள் தான் இன்றும் கைவிட வில்லை. கதை கூறி முடித்த மூதாட்டிக்கு தேனீர் வரவழைத்துக் கொடுக்கிறேன்."

"அம்மா என்ர மகன் இந்தப் பள்ளிக்குக் கிட்ட இருக்கிற ஒரு பெண்ணைத் தான் முடிச்சிருக்கிறான். இப்ப நானும் இங்க வந்திட்டன். உங்களுக்குப் புண்ணியமாகப் போகும் என்ர பேத்தியைப் படிப்பிச்சு விடுங்க."

தேனீரைப் பருகும் மூதாட்டி அருகே கைகளைக் கட்டிக் கொண்டு இருக்கும் சுட்டிப் பெண்ணைப் பார்க்கிறேன். யுத்தம் எமக்கு எத்தனையோ இழப்புகளைத் தந்தது. அதில் முக்கியமானது குடும்பக் கலாசாரச் சிதைவு. இதோ என் கண்முன்னே காகக் கூட்டில் இருந்து துரத்தப்படும் குயில் குஞ்சுகள் போல் தாய் தந்தை இருவரால் புறக்கணிக்கப்பட்டு நிற்கும் அநாதரவான குழந்தை. இதுபோல் எத்தனையோ குழந்தைகள் கண்ணீருடன் கவலைகளுடன்..... சில பெண் குழந்தைகட்கு யார் காவல். கதிரையைத் தள்ளிவிட்டு எழும் நான் ரம்யாவின் கைகளை ஆதரவாகப் பற்றுகிறேன். எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையோடு என் கைகளை இறுகப் பற்றிக் கொள்கிறாள் அவள்.

வீரகேசரி 29.05.2011

# இளமை எனும் புயற்காற்று

'சோ' வென்ற இரைச்சலோடு வெளியே மழை பெய்துகொண்டிருக்கிறது. முன்பக்கத்தில் அமைந்திருந்த தகரக்கூரையில் மழைத்துளிகள் விழுந்து இரைச்சலை அதிகப்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த இரைச்சலால் பாதிக்கப்படாதவளாக போர்வைக்குள் சுருண்டு கிடக்கிறேன் நான்.

இந்த இனிமையான காலைநேரத்தில் மெல்லிய குளிரின் ஊடுருவலை தடுக்கும் வெதுவெதுப்பான போர்வையின் அணைப்பு எனக்குச் சுகமாக இருக்கிறது.

"மது இன்னும் எழும்பவில்லையா பிள்ள..... ஆறு மணியாகுது...." அம்மாவின் குரல் சமையலறையில் இருந்து கேட்கிறது. இன்னும் சிறிது நேரம் தூங்கினால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற எண்ணங்கள் என்னுள்ளே ஓடுகிறது.

"இன்னும் மது எழும்பல்லியா..... எத்தனை மணிக்கு பள்ளிக்குப் போறது......" அப்பாவின் குரல் எங்கிருந்தோ ஒலித்து என்னை தட்டி எழுப்புகிறது. துள்ளிக் கட்டிலில் இருந்து இறங்குகிறேன்.

காலைக்கடன் கழித்து. குளித்து சாப்பாட்டு மேசைக்கு வரும் போது நேரத்தைப் பார்க்கிறேன் ஆறு நாற்பத்தைந்து. மழை நின்று விட்டிருந்தது.... விரைவாகச் சாப்பிட்டு புத்தகங்களை அள்ளி பாடசாலைப் பையில் திணித்துக் கொண்டு சைக்கிளில் ஏறி மிதிக்கிறேன்....

சைக்கிளில் போகும் போதே என்னைப் பற்றி நான் சொல்லிவிடுகிறேன். நான்.... பத்தாம் வகுப்பில் படிக்கும் மதுமிதா..... எனது வயது பதினாறை நெருங்கிக் கொண்டிருப்பதால் என்னுள் இந்த வயதுப் பெண்களிற்குரிய துடிப்புகள் அதிகம்.

எனக்கு இன்றைய சினிமா மிகவும் பிடிக்கும்.... கண்ணாடியின் முன் நின்று சினிமாப்பட நாயகிகள் ஆடுவது போல் குத்தாட்டம் போட்டு அம்மாவிடம் பலமுறை வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கிறேன்.

வாழ்க்கையை முழுமையாக வாழவேண்டுமென்ற வெறி என்னுள் அடிக்கடி எழும்..... வகுப்பறையை நான் அடைந்த போது மாணவிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பது தெரிகிறது. நின்றுவிட்ட மழையைச் சபித்துக் கொள்கிறேன். பெய்திருந்தால் நானும் வீட்டில் நின்றிருக்கலாமே என்றொரு எண்ணம்.

"என்னப்பா இண்டைக்கு வகுப்பில் பாதியைக் காணவில்லை"வரும் போதே வகுப்பின் அன்றைய நிலவரத்தைப் பார்த்துப் புலம்பியபடியே வரும் வரலாறு பாடஆசிரியரைப் பார்க்க சிரிப்பாக வருகிறது. எப்போதுமே ஏதும் முன்னுரையோடு தான் வகுப்பிற்குள் வருவா....

பாடம் தொடங்கியது.... உலகப் படத்தைத் தொங்கவிட்டு நாடுகளின் அமைவைத் தொட்டுத் தொட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறா. எனது பார்வை வகுப்பறையின் கம்பிவலை விரிப்பினூடே வெளிப் புறத்தில் தாவுகிறது. வகுப்பின் அருகே வளர்ந்திருந்த மஞ்சள் நிற கொன்றை மரங்களில் இருந்து கொத்துக்கொத்தாகத் தொங்கிய மலர்கள்.... மலர்களைச் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தன இரு கரு வண்டுகள்.... மலர்களில் இருந்து வெளிவரும் வண்டுகள் மஞ்சள் மகரந்தப் பொடியை பூசிக்கொண்டு பறப்பது விநோதமான காட்சியாக இருந்தது.

"மது..... என்ன செய்யிறீர்... பாடத்தை கவனிக்காமல்..." ஆசிரியரின் வார்த்தைகள் மீண்டும் உலகப்படத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது. இந்த உப்புச்சப்பற்ற படிப்பு எனக்குப் பிடிப்பதில்லை.

மணித்தியாலக் கணக்கில் செயற்படாமல் கரும்பலகையைப் பார்த்தவாறே இருப்பது எவ்வளவுகொடுமையான விடயம் என அனுபவபூர்வமாக அறிந்தவள் நான்....

எல்லாவற்றையும் வெறுக்கும் என் மனக்கண்ணில் ஒரு மோகனமான உருவம் மாத்திரம் சதாகாலமும் வலம் வருகிறது.

திலீப்குமார்

எங்கள் பாடசாலைக்கு அருகே உள்ள பாடசாலையின் ஏ.எல். படிப்பவன். திலீப்குமார் என்பதை விட 'திலீப் கண்ணா' என்றால் தான் எல்லோருக்கும் புரியும். யார் அப்படி அவனுக்குப் பெயர் வைத்தார்கள் என்று எனக்குத் தெரியாது எப்போதும் புதிய மோட்டார் சைக்கிளில் நகரை வலம் வரும் அவனைச் சுற்றி வரும் பெண்கள் கூட்டத்தில் யாராவது வைத்திருக்கலாம்.

அந்த திலீப்கண்ணா எல்லோரையும் விட்டுவிட்டு என்னைச் சுற்றி வருவதுதான்

புதுமை. நான் பணக்கார வீட்டுப் பெண்ணல்ல.

எனது அப்பா ஒரு ஆரம்பக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர். எப்போதும் அவரது வாயில் இருந்து அறிவுரைகள் உதிர்ந்துகொண்டே இருக்கும். சிறிய விடயத்திற்குக் கூட அரைமணிநேரம் கதைப்பார். அவர் கதைக்கத் தொடங்கினால் எதிர்ப்பேச்சுப் பேச ஆள் இருக்காது. கோபம் வந்துவிட்டால் வீடு இரண்டுபட்டுப் போகும்.

பல சந்தர்ப்பங்களில் அன்பே இல்லாதது போல் தோன்றும். வீடு என்னைப் பொறுத்த வரையில் சின்ன நரகம் தான். திலீப்கண்ணா எனக்கு முதன் முதலில் அறிமுகமான நாள் என் மனக் கண்ணில் விரிகிறது.

அன்று சைக்கிளில் ரியூட்டரிக்குப் போய் திரும்பிக் கொண்டிருக்கிறேன் நான். சைக்கிள் சில்லு காற்றுப் போனதால் காற்றடித்துக் கொண்டு திரும்பியதால் தனித்து வரவேண்டியதாகி விட்டது.

திடீரென என் சைக்கிள் முன்னால் கறுப்புநிற மோட்டார் சைக்கிள் பிறேக் போட்டு நின்றதும் நான் திடுக்கிட்டுப் போனேன்.

"ஹலோ மது...."

நான் எனது பெயரைச் சரளமாகச் சொல்லும் அவனைத் தயக்கத்துடன் நிமிர்ந்து பார்க்கிறேன்.

பொது நிறம்... அரும்பிய மீசை அவனது முகத்திற்கு ஒரு அழகு சேர்க்கிறது. திடகாத்திரமான உடல்.... நீலநிற கோடுபோட்ட சேர்ட்டும் நீலநிறக் காற்சட்டையும் அணிந்திருந்தான். திறந்திருந்த சேர்ட்டின் மேற்புறத்தின் ஊடாக சிறிய தங்கச் சங்கிலி மின்னியது.

"என்ன இன்டைக்குத் தனியா வாறீங்க.... உங்கட கூட்டத்தைக் காணயில்ல...." கேலியாக உதிர்கின்றன. அவன் வார்த்தைகள், முன்பின் அறியாத ஒருவனிடம் இருந்து புறப்பட்ட கேள்வியால் எனக்கு என்னபதில் சொல்வதென்றே தெரியவில்லை.

"சைக்கிள் காற்றுப் போயிட்டுது அதுதான்...." என்று தயங்கித் தயங்கிப் பதில் சொல்கிறேன். எல்லோருடனும் வீர ஆவேசமாக மார் தட்டும் எனது குரலா அது என எனக்கே சந்தேகம் வருகிறது.

"ஓ..... அதுதான் விடயமா?... கன நாளா உங்களோட பேச முயற்சிக்கிறேன். இண்டைக்குத்தான் சந்தர்ப்பம் கிடைத்திருக்கு...." என்கிறான் அவன்.

"என்னோட பேசவா ஏன்?...

"மது.... உங்களைப் பார்த்த நாளில இருந்து எனக்கு ஏதோ ஒரு இனம்புரியாத கவர்ச்சி" சொல்லிவிட்டு என்னைப் பார்த்துக் கண்ணடிக்கிறான். எனக்குள் ஏதோ ஒரு பயம் ஊடுருவிச் செல்கிறது. "இனம்புரியாத கவர்ச்சி" என்றால் என்ன என எனக்குப் புரியவில்லை. என்ன பேசுவது என்று தெரியாமல் திகைத்துப் போய் நிற்கின்றேன் நான்.

"என்ன மது.... ஒண்டுமே கதைக்கிறீங்களில்ல....."

"நீங்க என்ன சொல்ல நினைக்கிறீங்க எண்டு விளங்கயில்ல..." எங்கோ தொலைதூரத்தில் புள்ளியாகத் தெரியும் ஒரு சைக்கிளைப் பார்த்தவாறு சொல்கிறேன் நான்.

"மது இந்த நீல நிற சுரிதார் உங்களிற்கு சுப்பராக இருக்குது...." அவன் ஏதேதோ சொல்லிக்கொண்டு போக எனக்கு தர்மசங்கடமான நிலை. யாரும் பார்த்தால் என்ன செய்வது என்ற எண்ணம் நெருப்பில் நிற்பது போன்ற உணர்வை என்னுள் விதைக்கிறது.

"நான் போக வேணும்.... வீட்டில் தேடுவார்கள்."

"சரி போகலாம்.... நான் கேட்க வேண்டியதைச் சுருக்கமா ஒரு கடிதம் எழுதி யிருக்கிறன் இதைப் படித்துவிட்டு பதிலிற்காக காலை எங்கோ ஓரிடத்தில் காத்திருப்பேன்... சரியா மது" அவனது மோட்டார் சைக்கிள் வேகமாக விரைந்த பின்னும் விறைத்துப் போய்நிற்கிறேன் நான். அவன் கையில் தந்து விட்டுப் போன கடிதம் பெருஞ் சுமையாகக் கனக்கிறது. சைக்கிளில் ஏறி எப்படி வீடு வந்து சேர்ந்தேன் என எனக்குத் தெரியாது.

வீட்டினுள் நுழைந்து எனது படிக்கும் மேசையின் அடுக்கியிருந்த புத்தகங்களுள் கடிதத்தைப் பத்திரப்படுத்துகிறேன். உடனே படித்துப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் என்னுள் எழுந்தாலும் "பொறு மனமே பொறு என என்னை நானே தேற்றிக் கொண்டேன். உடைமாற்றி முகம் கழுவிக் கொண்டு அறைக்குள் சென்று மேசையில் அமர்ந்து படிக்கும் புத்தகத்தினுள் கடிதத்தை எடுத்து வைத்து விரிக்கிறேன். அம்மாவும் அப்பாவும் முன்வாசலில் யாரோடோ பேசிக்கொண்டிருக்கிறார்கள். துடிக்கும் மனதுடன் வார்த்தைகளை மேய்ந்தன என் கண்கள் ஆரம்பமே அழகான கவிதையாக இருந்தது.

"பூவாய் என்னுள் மலர்ந்தவளே....
புயலாய் உணர்வில் கலந்தவளே...
தேனாய் மனதில் இனிப்பவளே....
தேன் மகளே... என் காதலியே...

உன்னை நான் நேசிக்கிறேன்....
உன் காதலை நான் யாசிக்கிறேன்...

ஓராயிரம் மலர்கள் என்னுள் முகையவிழ்கின்றன.... எவ்வளவு ரம்பியமான வரிகள். எவ்வளவு அற்புதமான சிந்தனை. இப்படியான அழகிய கவிதை எழுதும் ஒருவன் எத்தகைய இனிமை யானவனாக இருப்பான்.மீண்டும் மீண்டும் அவ்வரிகளை மனப்பாடம் செய்து கொண்டேன். என்னை அறியாமலே திலீப் பற்றிய சிந்தனை என்னுள் முளைத்துவிட தொடங்கியது.

அன்றிரவு என்னால் தூங்க முடியவில்லை.கண்களை மூடினால் அவனது முகமும் அவனது கவிதை வரிகளும் என் கண்முன்னே தோன்றித் தோன்றி மறைகின்றன. திரும்பித் திரும்பிப் படுக்கிறேன்... தூக்கத்தில் உயர்ந்த மலைச்சாரல்களில் அலைவீசும் கடற்கரையில் நானும் அவனும் சிறகடித்துப் பறக்கின்றோம். மறுநாள்... மாலைவேளை வகுப்பில் இருந்து சிறிது பிந்தியே வருகிறேன். என் எதிர்பார்ப்பு பொய்யாகவில்லை. மர நிழலில் அவன் நின்று கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் எனது சைக்கிள் வேகத்திற்கு ஏற்ப பக்கத்தில் மோட்டார் சைக்கிளை ஒட்டிக்கொண்டு வந்தான்.

"மது கவிதை பிடித்ததா...." கேட்ட அவனது குரலில் இருந்த வசீகரம் என்னைச் சிலிர்க்க வைக்கின்றது.

"நிரம்பப் பிடித்தது...." உருளும் என் சைக்கிளின் முன் சில்லைப் பார்த்தபடி பதில் சொல்கிறேன் நான்.... அவனைத் திரும்பிப் பார்க்க எனக்குள் ஒரு தயக்கம் மேலெழுகிறது.

"என் கேள்விக்கென்ன பதில்...... என் காதல் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப் பட்டதா??"

"ம்...." என்கிறேன் நான்... என் வார்த்தைகள் என்னுள் மறைந்து வெளிவர முடியாமல் தவிக்கின்றன.

"மது.... நான் எதிர்பார்த்தேன் என் மனதினுள் நுழைந்த காதல் தேவதையான நீ என்னை ஏற்றுக் கொள்வாய் என்று.... நன்றி மது... அவன் சொல்லி விட்டுச் சென்ற பின்னரும் அவனது பேச்சு என்னுள் எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

எங்கள் சந்திப்புகள் தொடர்ந்தன. காதல் வரிகள் கொண்ட கவிதைக் கடிதங்கள் என் புத்தகங்களுள் அடைக்கலமாகின. சிறிய அழகான காதல் சின்னாங்கள். அழகிய சிறு கற்கள் பதித்த மோதிரங்கள். இவற்றை எவர் கண்களிலும் படாமல் என்னால்

முடிந்தவரை மறைத்து வைக்கிறேன். சிறிய மோதிரமொன்றைத் தம்பி கண்டெடுத்து விட்டான்.

'அக்கா இந்த மோதிரம் ஏது?.... அவனது கேள்விக்கு விடை சொல்ல மிகுந்த சிரமப்பட்டேன்.

"இமிடேசன் மோதிரம் தம்பி.... வனிதா போட்டிருந்தாள் வடிவா இருந்தது தாறியா என்று கேட்டேன் தந்திட்டாள்...

இல்லாத வனிதாவை உருவகித்துச் சொல்கிறேன். காதலுக்காக பொய்யும் சொல்லத் தொடங்கிவிட்டேன். எங்கள் பாடசாலைக்குப் பக்கத்திலே உள்ள பிள்ளையார் கோயிலின் பிற்புறப் பிரகாரம் தான் நாங்கள் சந்திக்கும் இடம். கோயிலைச் சுற்றி வருவது போல் நிறையப் பேசி விடுவோம்.

அன்றும் அப்படித்தான் அப்பாவிடமும் அம்மாவிடமும் பொய் சொல்லிவிட்டு கோயிலுக்குப் பறந்து போகிறேன். கோயிலில் கொடித்தம்பத்தின் அருகே அவன் நிற்கிறான். கண்களால் நிறையப் பேசிக் கொண்டோம். கண்களால் சைகை செய்து பின்புறம் நோக்கி நடக்கிறோம்.

"மது இந்த மஞ்சள் நிற சுரிதாரில உன்னைப் பார்க்க என் கண்களையே என்னால் நம்பமுடியாத மாதிரி இருக்குது...."

"ஏன் நல்லா இல்லையா..."

"மது.... அம்மன் சிலை மாதிரி இருக்கிறாயப்பா.... என் கண்ணே பட்டிடும் போல.... பின்னேரம் சுத்திப் போடும்...." அவனது கேலிப் பேச்சு என்னைச் சீண்டுகிறது.

"உங்களுக்கு ஒரே பகிடிதான்" செல்லமாகக் கோபித்துக் கொள்கிறேன் நான். "மது.... இண்டைக்கு உமக்கு ஒரு சின்னப் பரிசு கொண்டு வந்திருக்கிறன் என்னெண்டு சொல்லும் பார்ப்பம்.... உமக்கு நிரம்பப் பிடிக்கும்"

நீலநிற பிளாஸ்டிக் பையில் ஏதோ ஒருபொருள். எங்களைத் தாண்டிச் செல்லும் சிலரின் பார்வை என்மேல் தாவித் திரும்புகிறது. மனதுக்குள் சிறிய பய உணர்வு தலைதூக்கினாலும் மனதுக்குப் பிடித்தவனுடன் பேசிக்கொண்டு இருக்கிறோம் என்ற சிந்தனை பயத்தைப் பற்றிய எண்ணத்தை மறக்க வைக்க என்னுள் ஒரு துணிவு பிறக்கிறது.

"எனக்குத் தெரியா திலீப்.... நீங்களே சொல்லிடுங்க...." சிணுங்கலாகப் பதிலளிக் கிறேன் நான்....

"என் மதுக்குட்டிக்கு என் அன்புப் பரிசு...." பிளாஸ்டிக் பையில் இருந்து வெளியே எடுத்த பொருளைப் பார்த்து கண்கள் விரியத் திகைத்து நிற்கிறேன் நான். அது நீலநிற உறையுடன் கூடிய அழகான செல்போன்.

"என்ன பிடித்திருக்கிறதா?.... என் முகத்தைப் பார்த்தபடியே கேட்கிறான்.

"நிரம்ப.... திலீப் இவ்வளவு பெறுமதியான பொருளைப் பரிசாகத் தருவீங்க எண்டு கனவிலயும் நினைக்கவில்லை.... தாங்ஸ் திலீப்...." வார்த்தைகளை வெளிப்படுத்த முடியாமல் திகைத்துப் போய் நிற்கும் என் கைகளைப் பிடித்து உள்ளங்கையில் செல்போனை வைக்கிறான்.

இதன் பிறகு எங்களிற்குச் சந்திக்கும் இடமோ நேரமோ பற்றி தகவலைப் பரிமாறிக் கொள்வதில் எந்தச் சிரமமும் இருக்கவில்லை. இதனால் நான் அடிக்கடி டியூஷன் வகுப்புகளிற்குச் செல்வதை நிறுத்திக் கொண்டேன். வகுப்பிற்குப் போகிறேன். என்று சொல்லிக் கொண்டே திலீப்புடன் ஹோட்டல்கள், குளிர்பானக் கடைகள் என்று சுற்றத் தொடங்கினேன். அவன் என்னைச் சிரிக்க வைத்தான், தவிக்க வைத்தான். இரவும் பகலும் அதே சிந்தனை. வகுப்பில் எந்தப் பாடமும் பிடிக்கவில்லை.

பரீட்சை வந்தது என்னால் படிக்க முடியவில்லை.... புள்ளிகள் நன்றாகப் பெறமுடியாது என எனக்குத் தெரியும். வகுப்பாசிரியர் என் தலையில் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார்....

"இந்த முறை பெற்றோர் வந்துதான் ரிப்போட் வாங்க வேண்டும்...." எனக்கு அப்பாவிடம் கேட்கப் பயம் அம்மா சீரியல் பார்க்கும் நேரம் அம்மாவின் அருகே இருந்து கெஞ்சிக் கூத்தாடி அம்மாவைச் சம்மதிக்க வைத்தேன். பாடசாலையில் ரிப்போட் வாங்க வந்த அம்மாவிடம் வகுப்பாசிரியர் தன் புகார் பட்டியலை வாசிக்கத் தொடங்கினார்.

"உங்கள் மகள் வரவரமிகவும் மோசமான நிலைக்குப் போறா. வகுப்பில் பாடத்தைக் கவனிப்பதில்லை. வீட்டுவேலை கள் எதுவும் ஒழுங்காகச் செய்வதில்லை." அம்மா என்னை முறைத்துப் பார்க்கிறாள்.... நான் பிள்ளைப் பூச்சிபோல் பாவமாக நிற்கிறேன்.

"அம்மா.... எனக்கு அடிக்கடி தலையிடி வருகிறது... இதனால் என் பாடங்களைப் படிக்க முடியவில்லை... வாறமுறை நல்லாச் செய்வேணம்மா...." முகத்தைப் பரிதாபமாக வைத்துக் கொண்டு. சொல்கிறேன். என் கண்ணீர் அம்மாவைக் கவலையடைய வைத்திருக்க வேண்டும் அம்மா. அப்பாவிடம் என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. நான் தப்பிக்கொண்டேன்.

எங்கள் சந்திப்புகள் தொடர்ந்தன. அன்று இரவு எட்டுமணி இருக்கும்... செல்போன் சிணுங்குகிறது. சத்தத்தைக் குறைத்து உடுப்புகளின் கீழ் வைத்திருந்தேன். அம்மாவும் அப்பாவும் தம்பியும் மாமி வீட்டிற்குப் போயிருந்தார்கள். எனக்கு நல்ல வசதியாகிவிட்டது.

"ஹலோ திலீப்..." என்கிறேன்.

"மது வாற சனிக்கிழமை என்னுடைய பிறந்தநாள். நாங்கள் இரண்டு பேரும் இந்த முறை கடற்கரையில் இந்த நாளை கொண்டாடுவோமா?

"ஐயோ... அப்பாவிற்குத் தெரிந்தால் என்னைக் கொன்றே போட்டுவிடுவார் திலீப்... யாரும் கண்டு சொல்லிட்டாங்களெண்டால் என்ர கதி..." எனது வார்த்தைகள் அவனுக்குச் சினத்தை ஏற்படுத்தி இருக்க வேண்டும்.

"மது.... எல்லா நாளுமா கூப்பிடுகிறேன்.... இதைக்கூட எனக்காகச் செய்யக்கூடாதா?" அவனது கெஞ்சலும் கொஞ்சலும் என்னைச் சம்மதிக்க வைத்தது.

அன்று சனிக்கிழமை நான் விசேட வகுப்பு போய் வர மூன்று மணி எடுக்கும் என்று சொல்லிவிட்டு இரண்டு முப்பதிற்கே வீட்டை விட்டுப் புறப்படுகிறேன். பெற்றோரை ஏமாற்றுகிறேன் என்று குறுகுறுப்பு உள்ளத்தினுள் எழுந்தாலும் திலீப் பற்றிய ஆவல் என்னைச் சமாதானப்படுத்துகிறது.

திலீப் சொன்னபடியே கடற்கரையை அடைகிறேன். அவன் குறிப்பிட்ட இடத்தில் ஒருபுறம் உயர்ந்த சவுக்கு மரங்கள் மறுபுறம் வெண்மணற்பரப்பைத் தழுவிச் செல்லும் கடல் அலைகள். அப்பிரதேசம் வெறிச்சோடியிருந்தது. திலீப் புதர்போல் அடர்ந்திருந்த சவுக்கு மரங்கள் அருகே பொலித்தீன் விரிப்பில் அமர்ந்திருந்தான். சில சிறிய கடதாசிப் பெட்டிகளும் இரு குளிர்பான போத்தல்களும் இருந்தன. என்னைப் பார்த்ததும் அவனது முகம் மலர்ந்தது.

"சரியான நேரத்திற்கே வந்திட்டயே மது தாங்ஸ்டா" என்றான். நான் தயக்கத்துடன் அவனருகே சென்றேன். என்கையில் இருந்த பரிசுப் பொருளை அவன் கைகளில் கொடுத்து "பிறந்தநாள் வாழ்த்துகள் திலீப்" என்றேன். பரிசுப் பொருளை விரிப்பின் மேல் வைத்துவிட்டு என் கைகளைப் பற்றி இழுத்து விரிப்பின் மேல் தன்னை உரசினாற் போல் அமரவைத்தான்.

"திலீப் என்ன செய்கிறாய்.... யாரும் பார்த்தால்......" எனக்குக் கோபம் வந்தது. பார்க்காத இடமாகத் தானே தேர்ந்தெடுத்திருக்கிறேன்.... காதலர் சந்திக்கப் பொருத்தமான இடம்" என்று சொல்லிவிட்டு பெருங் குரலெடுத்துச் சிரித்தான்.....

'குப்' பென்று ஒரு நொடி என்னைத் தாக்கியது.

"நீ.... நீ குடித்திருக்கிறாயா திலீப்..." என்னுள் ஒரு நடுக்கம் பரவியது.

"பிறந்த நாள் என்றால் சும்மா கொண்டாடலாமா மது... பார் எவ்வளவு சிற்றுண்டிகள்.... இதைச் சாப்பிட்டுக் கொண்டே நாம் காணப்போகும். புது உலகம்..." அவனது வார்த்தைகளில் இருந்த தடுமாற்றமும் கண்களின் சிவப்பும் அவன் போதையில் இருக்கிறான் என்பதை உணர்த்தின.

"திலீப் உங்கள் பேச்சே இன்று ஒரு மாதிரியாக இருக்கின்றது..." என்கிறேன். என்ன மது காதலர்கள் என்றால் கட்டிப்பிடிப்பது முத்தம் கொடுப்பது அணைப்பது எல்லாம் இயல்புதானே..... என்றபடியே தனது வலது கரத்தை என்தோளின் மேலே போட்டு என்னை இறுக்கிப்பிடிக்க முயற்சிக்கிறான்.

"திலீப் இது எனக்குப் பிடிக்கவில்லை. நான் உங்களை உயிராகக் காதலிக் கிறேன் என்பது உண்மை. ஆனால், அதற்காக எல்லைகளைத் தாண்டிக் கேவலமாக நடக்க நான் தயாரில்லை." நான் அவனது கையைத் தட்டிவிட முயற்சிக்கிறேன்.

"என்னடி பெரிய கதை, வசனம் பேசுறாய்... காதலெண்டால் எல்லாம் தான் தெரிஞ்சுதானே இவ்வளவு தூரம் வந்தனி..." இருகைகளாலும் என்னை இறுகப் பற்றிக் பிடிக்கிறான். அவனது கைகளின் அசைவிற்கு என் உடைகள் கிழிந்துவிடும் போல் இருக்கிறது.... கைகள் தப்பான இடங்களை நோக்கி நகர்வதை நான் உணர்கிறேன். என்னுள் கோபம் பயம் ஏமாற்றம் அனைத்தும் ஒருங்கே மேலேழுகின்றன. நான் என் பலம்கொண்ட மட்டும் அவனை உதைத்துத் தள்ளுகிறேன். நான் ஓடத் தொடங்கு கிறேன். தொலைவில் புள்ளியாய் தெரியும் மனிதர்களை நோக்கித் தலைதெறிக்க ஓடுகிறேன் என் ஓட்டவேகத்தை செருப்புகள் குறைக்கின்றன. அவற்றைக் கழற்றிவிட்டு ஓடுகிறேன். திரும்பிப் பார்க்கும் ஒரு சந்தர்ப்பத்தில் அவன் ஓட முடியாமல் தள்ளாடுவது தெரிகிறது... கானலைக் காதல் என்று எண்ணிக் காமத்திற்கு இரையாகாமல் என்னைத் தற்காத்துக்கொள்ள ஓடிக்கொண்டிருக்கிறேன். இளமை எனும் பூங்காற்று என் வாழ்வில் புயற்காற்றாக மாறி என்னை விழுங்கவரும் இக்கணத்தில் என் கால்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன.

தினக்குரல் 03.07.2011

# பக்கத்து வீட்டு பாலு மாமா

யன்னல் கதவுகளை அகலத் திறக்கிறேன். என் முன்னால் எங்கள் வீட்டில் முற்புறம் மலர்த் தோட்டம். அழகுறக்காட்சி தருகிறது. மதில் ஓரமாக நின்ற நிறம் நிறமான செம்பருத்திச் செடிகள் மலர் அலங்காரத்துடன் இளங்காலைக் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன. வீட்டின் வாசற்படியில் இருந்து இரண்டு வரிசைகளில் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்த ரோஜாச் செடிகளில் மலர்ந்தும் மலராத ரோஜாப் பூக்கள் இரவு பெய்த மழையில் நனைந்து நீர் முத்துக்களைச் சுமந்தபடி நின்ற கோலம் மனதைக் கொள்ளை கொண்டது. காலை வேளையில் யன்னலைத் திறந்து இந்த அழகான இயற்கையை ரசிப்பதில் எனக்கு அலாதிப் பிரியம். எனது அறை யன்னலில் நின்று பார்த்தால் எங்கள் முன்மதிலும் அகன்ற வாசற்கதவும்தெளிவாகத் தெரியும்.

முன்மதில் கதவடியில் ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நிற்பது எனது பார்வையில் படுகிறது. அந்த நீல நிற மோட்டார் சைக்கிளுக்குச் சொந்தக்காரர் பாலு மாமா. பாலசுப்பிரமணியம் என்ற பெயர். எங்கள் குடும்பத்தைப் பொறுத்தவரை பாலு என்று சுருக்கி எனக்கு பாலுமாமாவாகிப் போனார். ஐந்தரை அடி உயரமும் பொது நிறமும் பக்க வகிடெடுத்து வாரிய தலைமயிரும் கண்களில் நீள்வட்ட பிரேமுடன் கூடிய கண்ணாடியும் கொண்ட ஒரு அறுபத்து மூன்று வயதுக்காரரை உங்களால் கற்பனை செய்ய முடிந்தால் பாலு மாமா உங்கள் கண் எதிரே காட்சி தருவார். அத்தனைக்கும் மேலான விடயம். என்னவென்றால் எனக்கு பாலு மாமாவைச் சுத்தமாகப் பிடிக்காது. பாலு மாமா எங்களிற்குத் தூரத்துச் சொந்தம் தான். பாலு அண்ணே என்று அம்மாவும் அப்பாவும் கொண்டாடும் அவரைப் பிடிக்காமல் போனதற்கு என்க்கு வலுவான ஒரு காரணம் உண்டு.

பாலு மாமாவும் மலர் மாமியும் இருபது வருடங்கட்கு முன்பு எங்கள் வளவிற்கு பக்கத்தில் வீடுகட்டிக் கொண்டு குடியேறியவர்கள். பாலு மாமா பிரதேச செயலகத்தில் கிளார்க்காக வேலை செய்து ஓய்வு பெற்றவர். மலர் மாமி ஒரு பிள்ளைப் பூச்சி. எதற்கும் வாய் திறந்து அபிப்பிராயம் சொல்லத் தெரியாத பெண். மாமிக்கு வீடுதான் உலகம். அதில் பெரும் பகுதியைக் கைப்பற்றி இருப்பது தொலைக்காட்சியும் சீரியல்களும் தான். அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. என்பதால் நான் பிறந்தது முதலே அவர்கட்குச்

செல்லமாகிப் போனேன். மலர் மாமி எனக்காகவே விதம் விதமாகச் சமைப்பா ளென்றால் என் அந்தஸ்து எப்படி என்று உங்களுக்குப் புரிந்திருக்கும். மலர் மாமியை விடப் பாலு மாமா ஒருபடி மேல். சிறுவயதில் எங்கு போவதானாலும் என்னைத்தூக்கிக் கொண்டே போவாராம். அம்மா சொல்லிச் சொல்லி மாய்வாள்..... எனக்கு ஓரளவு பிராயம் தெரிந்த நாள் முதல், என்னைத் தூக்குவது, இடுப்பில் கிச்சுகிச்சு மூட்டி என்னைச் சிரிக்க வைப்பது... சிரிக்கும் என்னை கன்னம் மோவாய் கழுத்து வயிறு என்று கிடைத்த இடமெல்லாம் முத்தமிடுவது... என் ஆசை மஞ்சு, என் செல்லக் குஞ்சு என்று கொஞ்சுவது எல்லாம் மாமாவின் பாசத்திற்கான முத்திரைகளாகத் தான் தெரிந்தது. ஆனால்.... நான் வளர வளர எனக்கு மாமாவின் செய்கைகள் பிடிக்காமல் போனது.... அவர் என்னைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுப்பது, மடியில் தூக்கி வைத்துக் கொஞ்சுவது எல்லாம் என் மனதுக்குக் கசப்பானது....

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை, எனது பத்தாவது பிறந்தநாள்.... நானும் அம்மாவும் கோயிலுக்குப் போய் திரும்பிக் கொண்டிருந்தோம். வாசலில் பாலு மாமா நின்று கொண்டிருந்தார். பேசிக் கொண்டே வீட்டிற்குள் வந்தார்.

"பிறந்தநாள் வாழ்த்துக்கள் மஞ்சுக்குட்டி..." என்று அழகான வெள்ளைநிற கரடிப் பொம்மையைத் தருகிறார் எனக்கு மிகவும் பிடிக்கும் பரிசு "தாங்ஸ் பாலு மாமா" என்று அவர் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொள்கிறேன்.என்ன நினைத்தாரோ சட்டென என்னைத் தூக்கி என் இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிடுகிறார். அவருடைய மீசை குத்தி என் கன்னங்கள் வலிக்கின்றன.

நான் திமிறி இறங்கிக் கொள்கிறேன். "மாமா..... எனக்குப் பத்துவயசு முடிஞ்சு போச்சுது.... இனி அப்படிக் கொஞ்சாதீங்க மாமா....."

பத்து வயசில்ல முப்பது வயது முடிஞ்சாலும் இப்படித்தான் கொஞ்சுவன்...." நான் முறுகிக் கொள்கிறேன். அம்மாவின் முன்னே என் கோபத்தை எப்படி வெளிப்படுத்துவ தென்று எனக்குத் தெரியவில்லை.

"மஞ்சு... நீ பிறந்த நாள் முதல் தூக்கிக் கட்டிப் பிடிச்சிக் கொஞ்சி வளர்த்த மாமா தானே. மகள்... நீ இப்படிச் சொன்னால் அவரின் மனம் என்ன பாடுபடும் நினைச்சியே......" என்கிறாள் அம்மா அப்பாவியாக.

"அப்படிச் சொல்லு தங்கச்சி...... இவள் என்ன சொன்னாலும் என்ன கதைச்சாலும் என்ர செல்ல மஞ்சுக்குட்டி தான்......" என்ற படியே மீண்டும் என் கன்னத்தைப் பிடித்துக்கிள்ளி விட்டுச் சிரிக்கிறார். நான் அம்மாவையும் மாமாவையும் கோபப்

பார்வை பார்த்துவிட்டு உள்ளே செல்கிறேன்.

"விடு மரகதம்...... மஞ்சுக்குட்டி கோபக் குணம் தான் உனக்குத் தெரியுமே? அவள் என்டைக்குமே என்ர செல்லம் தான்" மாமாவின் வார்த்தைகள் என்னைத் துரத்திக் கொண்டு வந்தன.

நான் வயதுக்கு வந்து எனக்கு பூப்புனித நீராட்டுவிழா நடந்த நாள் என் மனதில் நன்றாக வேரூன்றிப் பதிந்துள்ளது. ஒரே மகள் என்பதால் உறவினர் நண்பர்களை யெல்லாம் அழைத்து அமர்க்களப்படுத்தி விட்டாள் அம்மா உள்ளுக்குள் எனக்கும் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. அழகான சேலையில் முழு அலங்காரங்களுடன் உறவினர்கட்கும் புகைப்படத்திற்கும் காட்சி கொடுப்பதில் மனம் நிறைந்த மகிழ்வு ஊற்றெடுத்தது. மாமா, வீட்டு முக்கிய உறுப்பினர் போல் எல்லா வேலைகளையும் தலைமேல் போட்டுக் கொண்டு அங்கு மிங்கும் ஓடிக்கொண்டிருந்தார்.

"என்ன பாலு.... உங்க வீட்டுக் கல்யாணம் போல ஓடித்திரியிறீங்க...." விழாவிற்கு வந்த ஒரு அம்மாள் மாமாவைப் பார்த்துக் கேலி செய்தாள்.

"உங்களுக்குப் பகிடியா இருக்குதா?.... என்ர மஞ்சுக்குட்டிட விழா என்ர விழா தான்" என்கிறார் மாமா..... அம்மாவும் அவருக்கு ஏற்றாற் போல் ஆமாம் போட்டாள். எனக்கு விழாவில் இருந்த ஆசை சட்டென இறங்கி விட்டது போன்ற உணர்வு. எல்லோரும் பரிசு தரத் தொடங்கினார்கள் நானும் பரிசிற்காகவும் புகைப்படத்திற்காகவும் புன்னகைத்துக் கொண்டிருந்தேன். மாமாவின் முறை வந்தது. அழகான தங்க மோதிரம் ஒன்றை எனது விரல்களில் அணிந்தார். விரல்களில் முத்தமிட்டார். நான் சட்டென விரல்களைப் பின்னால் இழுக்க முயற்சித்தேன்.... மாமா விடவில்லை. என் நிலை தர்ம சங்கடமாக இருந்தது..... சட்டென என்ன நினைத்தாரோ தெரியவில்லை. என்னை இறுக அணைத்து இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டார். எல்லோரும் ஆரவாரமாக கை தட்டினார்கள்.

"இந்த மனிசன் இந்தப் பிள்ளையில் இவ்வளவு பாசம் வைச்சிருக்குதே" வந்திருந்த பெண்ணொருத்தி மாமாவிற்குப் பாசச் சான்றிதழ் கொடுக்கிறாள். "அவர் கைக்குள்ள பொத்திப் பொத்தி வளர்த்த பிள்ளதானே...." என்கிறாள் என் அம்மா. "அவருக்கு இல்லாத உரிமை யா..... என்ர அண்ணன் தம்பியும் இப்படி இருக்க மாட்டாங்க" என்கிறார் அப்பா. நான் வார்த்தை இழந்து நின்றேன். என் மனதில் விழா பற்றி நான் கட்டி வைத்திருந்த இன்பமான சிந்தனைகள் கனவுகள் அனைத்தும் கலைந்து போகின்றன. எனக்குள்ளேயும் ஒரு மனமுண்டு. அதனுள்ளேயும் விருப்பு வெறுப்புகள் உண்டு என்று யாருமே சிந்திக்கவில்லையே என்ற எண்ணம் என்னுள் துன்ப

உணர்வுகளை எழுச்சி பெற வைக்கின்றது. அதன் பிறகு நான் முகத்தை உம்மென்று தூக்கி வைத்துக் கொள்கிறேன். எல்லோரும் போன பிறகு அம்மா கேட்கிறாள். "ஏன் பிள்ளை உன் மேல் வைச்ச பாசத்தால மாஞ்சி மாஞ்சி வேலை செய்யிற மாமா கொஞ்சினதுக்கு முகத்தை உம்மெண்டு தூக்கி வைச்சுக்கொண்டு இருந்தது சரியா?..... அந்த ஆள் உயிரைக் குடுப்பனெண்டு நிக்குது. நீ அந்தாளை மதிக்கிறாயில்லை...." அம்மாவின் வார்த்தைகள் சூடாக இருப்பது என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

"அம்மா நான் இப்ப வளர்ந்திட்டன் அம்மா.... அப்பாவப் பாருங்க இப்படி கண்ட இடமெல்லாம் கொஞ்சி என்னக் கஷ்டப்படுத்துகிறாரா இல்லைதானே..... ஏன் இவர் மட்டும்..." என் வார்த்தைகள் எனக்குள் முடங்கிக் கொள்கின்றன. என்னையும் மீறி எனக்குள் அழுகை பொங்குகிறது. எனது அறைக் கட்டிலில் 'பொத்' தென அமர்ந்து இரு கைகளிலும் முகத்தை மூடிக் கொள்கிறேன். அம்மாவிற்கு கவலை வந்திருக்க வேண்டும் என்னருகே வந்து அமர்ந்து எனது முதுகை வருடிக் கொடுக்கிறாள்.

"மஞ்சுக் குட்டி.... நீ பிறந்தது முதலே உன்னை பாசத்தோட தூக்கி வளர்த்த மனிசன் மகள்.... உன்னில வெறித்தனமான பாசம் வைச்சிருக்குது. அவர்களுக்குப் பிள்ளை இல்லாததால் தானே உன்னில் இவ்வளவு பாசம்... நீ ஏன் இந்தச் சின்ன விஷயங்களை எல்லாம் பெரிசுபடுத்துகிறாய்... மஞ்சு நாங்கள் அவரிட்ட இதைச் சொல்ல வெளிக்கிட்டால் அந்தாள்ட மனம் புண்ணாகிப் போகுமல்லவா? அப்பா இதைக் கேட்டால் என்ன நினைப்பார். மகள் மனநோயாளியா மாறிட்டாளோ எண்டல்லவா நினைப்பார்.... மகள் தயவு செய்து இதைப் பெரிசுபடுத்தாத அம்மா"

நான் என் கண்களைத் துடைத்துக் கொள்கிறேன். நான் எனக்குள் ஒரு தீர்மானத்தை எடுத்துக் கொள்கிறேன். மாமாவைத் தவிர்க்கும் விடத்தில் நான் தான் தனித்து நின்று போராட வேண்டும். அம்மாவும் அப்பாவும் மாமாவின் பாச வலைக்குள் நன்றாக கட்டுண்டு விட்டார்கள். நான் என்ன சொன்னாலும் மாமாவின் பாசத்தின் முன்னால் என் வார்த்தைகள் செல்லுபடியாகாமல் போய்விடும்.

அன்று முதல் நானாகவே மாமாவிடம் நெருங்குவதைத் தவிர்த்து வந்தேன். ஆனால் அடிக்கடி வீட்டிற்குவரும் மாமா கிடைக்கும் சந்தர்ப்பங்களில் என் கன்னங்களைத் தட்டுவதும் கிள்ளுவதும் தொடர்ந்த வண்ணமே இருந்தன. நான் முன்னரைப் போல் ஆர்ப்பாட்டம் பண்ணாமல் என் எதிர்ப்பை கைகளைத் தட்டிவிட்டும் ஓடி விலகியும் காட்டிக் கொண்டிருந்தேன்.

வளர வளர எனக்கு தன்னம்பிக்கையும் மானோதிடமும் வலுப்பெற்றதால் சிறிய விடயங்களிற்கெல்லாம் அலட்டிக் கொள்ளவில்லை.

அப்போது நான் பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். பல பிரத்தியேக வகுப்புகட்கும் செல்ல வேண்டி இருந்தாலும் வீட்டில் தங்கி நிற்பதே குறைவு.... மாமாவைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாகவே இருந்தன. மாலை வேளையில் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். வரவேற்பறையில் அம்மா அப்பாவுடன் பாலு மாமாவும் இருந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"மஞ்சு இங்க வா......; நான் முன்னால் போய் நிற்கிறேன். மஞ்சு.... மாமா புதுக்கொம்பியூட்டர் வாங்கி இருக்கிறாராம் நெற்றும் இருக்கிறதாம்....."

"சரி அப்பா......" என்கிறேன் சிரத்தையில்லாமல் நான்....... மாமா என் முகத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது என் கடைக்கண் பார்வையில் சிக்குகிறது. "மாமா உன்னைக் கொம்பியூட்டர் பழக வரட்டாம் மகள். மாமா முதல் ஒபிசில கொம்பியூட்டரில் வேலை செய்தவர்தானே...... உனக்கு சொல்லித் தாராராம்...." அம்மா பெருமிதத்தோடு சொல்கிறாள்.... நான் என்ன சொல்வது என்று தெரியாமல் நிற்கிறேன். "சரி பாலு அண்ணே.... இந்தக் காலத்தில் கொம்பியூட்டர் அறிவு இல்லாமல் எதுவும் செய்ய முடியாது...... வகுப்பெல்லாம் முடிஞ்ச உடனே ஆறு மணியளவில் வீட்ட வரட்டுமே..." என்கிறார் அப்பா.

"என் மஞ்சுக்குட்டி கெட்டிக்காரி தானே. நாலைஞ்சு நாள் தொடர்ச்சியாக வந்தால் போதும் அடிப்படை விசயங்களை எல்லாம் கண்டுபிடித்து விடுவாள்.... நான் தானே என்ர குஞ்சுக்குச் சொல்லிக் குடுக்கவேணும்......; பாலு மாமா வாயெல்லாம் பல்லாகச் சொல்லும் போது நீண்ட நாள் என்னுள்ளே மறைந்து கிடக்கின்ற கசப்பான உணர்வுகள் மேலெழுவது போல் எனக்குத் தோன்றுகிறது.

"சரியண்ணே நாளைக்கு நானே கூட்டிற்று வாறேன்..... உங்கட கொம்பியூட்டரை யும் பார்த்தமாதிரிப் போகும்.... அப்பா இப்படிச் சொல்லி முற்றுப்புள்ளி வைக்க நான் ஓட்டப்பந்தயத்தில் தோற்றுப் போன வீராங்கனை போல் வீட்டிற்குள் சோர்வாக நடக்கிறேன். மறுநாள் அப்பா சொன்னமாதிரியே என்னை மாமா வீட்டிற்கு போகப் புறப்படச் சொல்லிவிட்டார். அப்பாவிடம் எதுவும் பேச முடியாதென்பதால் அம்மாவிடம் என் ஆட்சேபணைகளை பலவிதங்களிலும் சொல்லிப் பார்த்தேன். அம்மா கேட்கவில்லை. கடைசியில் என் பெற்றோரின் பிடிவாதமே வெற்றி பெற்றது. பலியாடு போல அப்பாவின் பின்னால் போனேன் நான்...... பாலுமாமாவின் வீடு மிகப் பெரிய தென்று சொல்ல முடியாது. ஆனால் அழகானது. வீட்டின் முற்புறத்தில் மாமி நிறம் நிறமான அந்தூரியம் சாடிகளையும் ரோஜாச் சாடிகளையும் வைத்து ஒரு தனி அழகை ஏற்படுத்தி இருந்தா. ஒரு வரவேற்பறை இரு படுக்கை அறைகள் ஒரு சமையலறை

என்று வீடு கச்சிதமாக இருந்தது. வரவேற்பறையில் தொலைக்காட்சிப் பெட்டியின் அருகே கொம்பியூட்டர் இருந்தது. மாமா நெற்றில் ஏதோ பார்த்துக் கொண்டிருந்தார். நாங்கள் உள்ளே கால் வைத்த உடனே மாமா சட்டெனத் திரும்பியவர் எங்களைப்பார்த்து விட்டார். அவரது முகம் பிரகாசமானது வாங்க.... வாங்க..... மலர் கோயிலுக்கு பொயிற்றா இருங்களேன்; என்றார்.

“இல்ல அண்ணா நானும் அவசரமாகக் கடைக்குப் போய் வரவேணும் முதல் நாள் எண்டு கூட்டிக் கொண்டு வந்தனான்...... மகள் படிச்சிற்று வரட்டும் நான் பிறகு வாறனே...”

அப்பா போய்விட்டார். நான் கதிரையொன்றின் ஓரத்தில் கொப்பியைப் பற்றிப் பிடித்தவாறு அமர்ந்து கொள்கிறேன். நானும் மாமாவும் மாத்திரம். மாமா கதிரை யொன்றை தனது இருக்கையின் அருகே போட்டார்.

“வா மஞ்சுக்குட்டி.....” என்றார் செல்லமாக. நான் பயத்துடன் கதிரையில் சென்று அமர்ந்தேன். மாமா எந்த விகற்பமும் இல்லாமல் கொம்பியூட்டரை விளக்கத் தொடங்கினார். சகஜமான இலகுவான அவரது விளக்கம் எனக்குப் பிடித்துக் கொண்டது. இரண்டு மூன்று நாட்கள் இந்தச் செயன்முறை விளக்கங்கள் போய்க் கொண்டிருந்தது. நான்காம் நாள்.

“மஞ்சு ஒரு அழகான கவிதை எழுதியிருக்கிறேன். பார்க்கிறாயா? என்றார் மாமா.

“கவிதையா நீங்களா?” என்கிறேன். “நான் எழுதமாட்டேன் என்று நினைக்கிறாயா மஞ்சுக்குட்டி. இங்க வா வந்து பார்....” என் கைகளைப் பற்றி இழுத்துச் சென்று கொம்பியூட்டர் எதிரே இருக்க வைத்து அதனை இயக்குகிறார்.

“மலை தழுவும் மஞ்சு குளிர் காவும்
என் மனம் தழுவும் மஞ்சு எழில்காவும்
சிலை போன்ற பெண்ணே நீ சிரிக்காதே
- உன் கதை சொல்லும் கண்களினால் வதைக்காதே”

“எப்படி என்னுடைய கவிதை மஞ்சு....” என்கிறார் மாமா. நான் கலகலவெனச் சிரிக்கிறேன்.

“மாமா உங்கட வயதுக்கு இந்தக் கவிதை பொருந்துமா....” நான் கேலியாகக் கேட்கிறேன். மஞ்சு வயதுக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பில்லையே மஞ்சு..... கண்ணதாசன் எழுதவில்லையா..... எழுத வேண்டும் போல் தோன்றியது...... சரி

படிக்கலாமா.

நாங்கள் பாடத்தைத் தொடங்கினோம்.... "இண்டைக் நீ செய் மஞ்சு.... இது மவுஸ் தெரியும் தானே பிடி" என்றார். சிவப்பு ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்த மவுசைப் பிடித்து நகர்த்துகிறேன். "அப்படியில்லை மஞ்சுஇப்படி" என்ற படியே கையையும் மவுசையும் சேர்த்துப் பிடிக்கிறார் மாமா. அவரது கை நெருப்புத்தணல் போலக் கொதிக்கிறது. இப்போது பெயின்டிங் செய்வோம். என்றபடி எனக்கு நெருக்கமாக அமர்ந்து கொள்கிறார். அவரது உடல் என்னில் உரசுவது போன்று இருக்கிறது. மவுசை நகர்த்தும் போது அவரது உடல் என் மீது சாய்வது எனக்கு புரிகிறது.

"இன்டைக்குப் போதும் மாமா" என்றபடி எழ முயற்சிக்கிறேன். என்ன மஞ்சுக்குட்டி என எனது இடையைப் பற்றி இறுக்கிக் கதிரையில் அமர்த்த முயல்கிறார் "மாமா...." என்றபடி கைகளைத் தள்ளிவிட்டு எழுந்து கொள்கிறேன். மறுநாள் இந்த வகுப்பைத் தவிர்ப்பதற்காகவே இல்லாத ஒரு தலையிடியை வரவழைத்துக் கொள்கிறேன். இரண்டு நாட்கள் சாட்டுப்போக்குச் சொல்லித் தப்பிவிடுகிறேன். மூன்றாம் நாள் அப்பா கேட்கிறார் ஏன் மஞ்சு கொம்பியூட்டர் படிக்கப் போகவில்லையா....?

"இரண்டு நாள் தலையிடி என்று போகவில்லை அப்பா.... இப்போது பரீட்சை நடக்கிறது. முடிந்த பிறகு போகிறேன்" என்றேன். அப்பா ஒன்றும் சொல்லவில்லை. மாமா தான் ஏன் வருவதில்லை என்று அடிக்கடி கேட்பதாக அம்மா சொல்வாள்.... நான் கேட்டும் கேட்காதது போல் போய்விடுவேன். இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் ஒரு சம்பவம் நடந்தது. நான் பாலுமாமாவை முற்றாக வெறுக்க அதுவே காரணமாயிற்று.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை அம்மாவும், அப்பாவும் கோயிலுக்குப் போயிருந்தார் கள். நான் எனது அறையில் கட்டிலின் மேல் படுத்திருந்தபடி கதைப்புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தேன். காலையில் வீட்டிற்கு வந்த மாமி உள் அறையில் படுத்துக் கொண்டிருந்தாள். வாசற் கதவை மூடாமல் வைத்திருந்தேன். பக்கத்தில் நிழலாடியது போல் இருந்தது. நிமிர்ந்து பார்த்தேன் அறைக்குள் பாலுமாமா நின்று கொண்டிருந்தார். கட்டிலில் இருந்து எழ முயன்றேன்.

மஞ்சு ஏனம்மா என்னைப் பார்த்தால் பேயைக் கண்ட மாதிரி ஓடி ஒளிகிறாய்.... நானென்ன உன்னை விழுங்கிப் போடுவனா? அவரது தீட்சண்யமான பார்வை என்னை ஊடுருவிச் செல்வது போலிருந்தது.

"அப்பிடி இல்ல மாமா...." என்னால் தொடர்ந்து பேச முடியவில்லை. அவர் கட்டிலில்

அமர்ந்து கொள்ள நான் சட்டென எழுந்து கட்டில் ஓரத்தில் அமர்ந்து கொள்கிறேன்.

"இங்க பாரு மஞ்சு...." சிறிய பிள்ளைபோல என் கைகளைப் பற்றி இழுத்து அருகே அமர்த்திக் கொள்கிறார்.

"மஞ்சு..... சின்ன வயதில இருந்து உன்னைப் பார்த்துக் கொண்டு வாறன் வளர வளர ஒரு தேவதை போல வாறாயடி மஞ்சுக்குட்டி..... நீண்ட கண்களும் செப்பு வாயும்..... இந்த வழுவழுப்பான கன்னங்களும் என்ர மஞ்சுக்குட்டிக்கே சொந்தம் என்று நினைக்கிற போது எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா?" மாமா என்னை அணைத்து கன்னத்தோடு கன்னம் வைத்து உரசுகிறார். அனலாகக் கொதிக்கும் அவரது மூச்சுக்காற்று என்னுள் அச்சத்தை விதைத்தது.

"மாமா யாரும் பார்த்தால் என்ன நினைப்பாங்க மாமா...." நான் பிடியில் இருந்து விடுவித்துக் கொள்ளத் திமிறுகிறேன்.

மஞ்சு..... யார் என்ன நினைக்கிறது. மஞ்சு.... நீ நான் தூக்கி வளர்த்த பிள்ளை..... மஞ்சுக்குட்டி.... என்ர செல்லக்குட்டி என்றபடி என்னை இன்னும் இறுக்கி அணைப்பதை யும் கைகள் உடலில் அலைவதையும் பொறுக்க முடியாத நிலையில் என் பலம்கொண்ட மட்டும் அவரைத் தள்ளிவிட்டேன். காலடிபடஅவர் விழுந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வெளியே ஓடி வந்தேன். மாமி நல்ல நித்திரை போல அவ எழும்பாதது எனக்கு சிறிது நல்ல விடயம் மாதிரித் தோன்றியது. நான் வெளியே வந்தபோது அம்மாவும் அப்பாவும் வாசற் கதவைத்திறந்து கொண்டு உள்ளே வருவது தெரிந்தது. அப்போது தான் என்மனதிலே ஒரு மெல்லிய நிம்மதி அரும்பியது. மாமாவும் சுதாகரித்துக் கொண்டு பின்னால் வந்துவிட்டார்.

"என்னண்ணா இப்பதான் வந்தனீங்களா?" என்கிறார் அம்மா.

"ஓம் தங்கச்சி...... உங்களத் தேடித்தான் வந்த நான்..... பிள்ளை தனியா இருந்தாள்..." என்று சகஜமாகக் கதைக்கும் அவரைப் பார்க்க எனக்கு வியப்பாக இருக்கிறது.

அதன் பிறகு மாமா என்றாலே எனக்கு வெறுப்புத்தான் எனது பிரச்சினையை அம்மாவும் அப்பாவும் புரிந்துகொள்ளாதது தான் எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. ஒரு நாள் அம்மா தொலைக்காட்சியில் செய்தி பார்த்துக்கொண்டிருந்தா. நானும் பக்கத்தில் அமர்ந்திருந்தேன். செய்தி வாசிக்கும் பெண் ஒரு தகவலைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

“பத்து வயதுப் பள்ளி மாணவியைத் துஷ்பிரயோகம் செய்த எழுபது வயது முதியவர் பொலிஸாரால் கைது”

இதைக் கேட்டதுதான் தாமதம் “இந்தக் கிழட்டுக் கட்டைகளை நொறுக்கவேணும்” என்கிறாள் அம்மா.

“அம்மா இந்தக் கிழவர் யாரு..... அந்தப் பிள்ளையின்ர பாட்டனார்.... பாட்டனாரை நம்பினதால் தானே இப்படி நடந்தது.” கோபத்துடன் சொல்கிறேன் நான்.

“எல்லாரும் இப்பிடியில்ல மஞ்சு..... ஒரு சிலருக்குத்தான் பித்தம் தலைக்கேறிப் போறது....”

“என்னமோ அம்மா..... என்னை மாதிரிச் சின்னப் பிள்ளைகள் சொல்லுறத நீங்கள் பெரிய ஆக்கள் நம்பிறதில்ல..... அதால தான் எல்லாம் பிழையாகிப் போகிறது”. நான் வெறுப்பாகச் சொல்வதைக் கேட்டு அம்மா சிரிக்கிறாள்.... “உனக்கு எல்லாத்திற்கும் கோபம்தான்” என்ற முணுமுணுப்போடு.

“இல்லை அம்மா..... நாங்கள் அதிகமா நம்பிற வயது போனவங்க தான் அந்த நம்பிக்கையைப் பயன்படுத்திப் பிள்ளைகளைத் துஷ்பிரயோகம் செய்யுறாங்க ஆனால். உங்களைப் போல பெரியவங்க இதை நம்புறயில்ல.....” எனக்குள் மறைந்திருந்த ஆற்றாமை வார்த்தைகளாக வடிவம் பெறுகிறது.

“ஐயோ அண்ணே.....” என்ற அம்மாவின் அலறல் என்னைச் சுயநினைவிற்குக் கொண்டு வருகிறது. ஓ இத்தனை நேரம் நான் கடந்த காலத்தில் ஊடுருவி இருக்கின்றேன். வாசலில் நின்ற பாலு மாமாவைக் காணோம்.

அவர் போய் வெகு நேரமாகியிருக்க வேண்டும். அது சரி அம்மா அலறியது போல் இருந்ததே அம்மாவைத் தேடினேன். பின் அறைக்குள் அம்மா அழுதபடியே சேலை மாற்றிக் கொண்டிருந்தா. “அம்மா என்னம்மா?” ஒன்றும் புரியாதவளாகக் கேட்கிறேன்.

“நம்மட பாலு மாமா அக்சிடன்ட் பட்டிற்றாராம்.... பிள்ளப் பூச்சி போல சூதுவாதில்லாத மனிசன்.... நமக்கு கூடப்பிறந்த சகோதரம் போல....” நானும் அம்மாவுடன் வைத்தியசாலைக்கு விரைகிறேன். மாமா கட்டிலில் கண்மூடிப் படுத்திருந்தார். இரண்டு கால்களையும் வெள்ளைத் துணியால் மூடிக்கட்டியிருந்தார்கள். அம்மா மலர்மாமியுடன் வெளியே பழம் வாங்கப் போய்விட்டா. நான் மாமாவைப் பார்த்துக் கொண்டு நிற்கிறேன். இது தண்டனையா? அவரென்ன பெரிய தப்புச் செய்து விட்டார் என உள்மனம் கேட்கிறது. மாமா கண்ணை மெல்ல மெல்லத் திறக்கிறார். என்மேல்

பார்வை நிலைக்கிறது. "மஞ்சுக்குட்டி என்னை வெறுக்கிற நீ வரமாட்டாய் எண்டு நினைச்சன்....."

"இல்ல மாமா.... உங்கட செய்கைகள் எனக்குப் பிடிக்கயில்ல. ஆனால், ஆபத்து நேரத்தில அதையெல்லாம் வைச்சு கோபம் காட்ட மாட்டன் மாமா...."

மாமாவின் கண்களில் இருந்து நீர்முத்துக்கள் கன்னங்களின் வழியே உருள் கின்றன.

"மஞ்சு.... எனக்குள்ளே என்னை அறியாமலே அழகான பெண்களைக் கண்டால் சபலம் என்கிற உணர்வு வளர்ந்திருக்குது..... அதாலதான் என்ர பிள்ளைபோல வளர்த்த உன்னுடைய உணர்ச்சிகளோட விளையாடிற்றன்..... இந்த மாமாவை மன்னித்துக்கொள்....."

"என்ன மாமா நீங்க..... நான் எப்பவும் உங்கட மகள் தான் மாமா" நான் மாமாவின் கண்ணீரைத் துடைக்கிறேன். மாமா திருந்திவிட்டார் என நினைக்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

தினக்குரல் 25.09.2011

# ஒரு தாயின் கனவுகள் கலைகின்றன.

காலை இளஞ் சூரியனின் மெல்லிய மஞ்சள் ஒளி யன்னலினூடாகப் பாய்கின்றது. மணி ஏழு இருபது இன்னும் பத்து, அல்லது பதினைந்து நிமிஷங்களில் பாடசாலையை அடைய வேண்டும்.

அவசர அவசரமாக வாசல் கேற்றைத் திறந்து நடக்கிறேன். வெய்யில் "சுள்"ளென்று முகத்தில் வந்து மோதுகின்றது. நான் துரிதமாக நடக்கத் தொடங்குகின்றேன்.

சாலையின் இருபுறமும் பெரிதும் சிறிதுமாய் வளர்ந்திருந்த கள்ளி மரங்கள் இடை யிடையே வெள்ளைப் பூக்களை அள்ளிச் சொரியும் மஞ்சவண்ணா மரங்கள், அவற்றின் பின்னணியில் ஓங்கி உயர்ந்து குலை கட்டிக்காய்த்திருக்கும் பசிய தென்னை மரங்கள்; இத்தனை மரங்களின் தளிர்க்கரங்களையும் அசைந்து கொண்டு சுகத்தை அள்ளி இறைக்கின்றது பூங்காற்று.

கிறவல் வீதி தார்ச்சாலையை அடையும் இடத்தில் இடது புறம் அமைந்திருந்த அந்தப் பலாமரத் தடி வீட்டைக் கடக்கும் போது நேற்று நடந்த ஒரு நிகழ்ச்சி என் சிந்தையில் வந்து மோதுகின்றது.

நேற்று மாலை வழமைபோலப் பாடசாலை விட்டு வீடு நோக்கி வந்து கொண்டி ருந்தேன். வகுப்பில் நடந்தவற்றை அசைபோட்டு அந்த நினைவுகளிற் பூரணமாக அமிழ்ந்திய படி நடந்து கொண்டிருந்த என்னைத் "தங்கச்சி" என்ற குரல் தடுத்து நிறுத்தியது. குரல் வந்த திசையை நோக்குகின்றேன்.

"என்ன?" என்பது போல் எனது புருவங்கள் ஏறி இறங்குகின்றன. "நீங்க... பாஸ்கரனுடைய பள்ளியில தான் படிப்பிக்கிறீங்களா....?"

"ஓம்"
"பாஸ்கரன் பள்ளிக்கு வரமாட்டான் எண்டு அடம் பிடிக்கிறான்.

"ஏனாம்....."

"கொப்பி வேண்டாம பள்ளிக்கு வரவேணாமெண்டு வாத்தியார் திரத்திப் போட்டாராம்."

எனக்கு இந்தச் செய்தி புதுமையாய் இருக்கின்றது. எங்கள் பாடசாலையில் தான் எத்தனை விதமான மாணவர்கள். ஆனால் ஒரு கொப்பியில்லை என்பதற்காக யாராவது பாடசாலைக்கு வரவேண்டாம் என்று சொல்வார்களா?

"எங்கட பள்ளியில அப்பிடியெல்லாம் சொல்லமாட்டாங்களே!" என்குரல் உறுதியுடன் ஒலிக்கின்றது.

"இஞ்சபார் தங்கச்சி..... வகுப்பேத்தின உடனே, என்ட காதுத்தோட்டை வித்துப் போட்டு ஐம்பது ரூபாவுக்கு மேல் கொப்பி புத்தகம் வேண்டிக் குடுத்தன் போன கிழமையும் என்னவோ கலை விழாவாம் எண்டு கத்திக் குழறி ரெண்டு ரூபா வேண்டித்துப் போனான்.... நேத்துப் பள்ளியால வந்தவன் இன்னும் அஞ்சு கொப்பி வேணுமாம் எண்டு ஒரே புடியா நிக்கிறான்..... நான் என்ன செய்யிறது தங்கச்சி..... அவருக்கும் ஆனமான வேலயில்ல....."

அவளது கண்களிற் சொற்களின் பிரவாகத்தோடு, கண்ணீர் பிரவாகின்றது. மகளைப் பற்றிக் கண்ட கனவுகள், விதைத்த எண்ணாங்கள் அழிந்து விடுமோ என்ற ஏக்கத்தால் நெஞ்சத்தின் வெம்மை, நீண்ட பெருமூச்சாக வெளிவருகின்றது.

"இங்கு பாருங்க....... நானறியப் போன கிழம கலை விழாவும் நடக்கல்ல. திருவிழாவும் நடக்கல்ல. ஆளப் பள்ளிக்கு அனுப்புங்க நான் பாத்துக் கொள்ளுறன்." அந்த ஏழைத் தாயின் நனைந்த விழிகளில் நன்றி கனிகின்றது. மாலைச் செவ்வானத்தின் மஞ்சள் ஒளியாக மெல்லிய புன்னகை அரும்புகின்றது. தன் இதயச் சுமையைச் சொல்லிவிட்ட நிறைவிலே முந்தானையால் நனைத்த விழிகளைத் துடைத்துக் கொள்கிறாள்.

"தங்கச்சி...... என்னப் போல கெட்டு நொந்து போனவள் தான் கனகி. ஆனா அவள்ட மகன் ராசு.... சோதினயெல்லாம் பாஸ் பண்ணி இப்ப கண்டியில பெரிய படிப்புப் படிக்கிறான்..... இவனுக்கு நான் சொல்லாத புத்தியில்ல..... இவன் படிச்சி ஒரு சின்ன வேலையிலயென்டாலும் சேந்தா எண்ட தொல்லைகள் தீந்து போகுமே. கொஞ்சம் வாத்திமாரிட்ட சொல்லு தங்கச்சி...."

"ஓமோம் நீங்க அனுப்புங்க...." நான் அவளிடம் விடைபெற்று நடக்கத் தொடங்கும் போது அந்தத் தாயின் கனவுகளை எண்ணிப் பார்க்கிறேன். பாடசாலைக்கு மகளை

அனுப்பிவைக்க அவள் எத்தனை வீடுகளில் மா இடிக்க வேண்டும்.......

"டிங் டாங்" பாடசாலையின் மணி ஓசை.... ரிஜிஸ்ரரில் கையெழுத்துப் போட்டு விட்டுத் திரும்புகிறேன். மாணவர்கள் சாரி சாரியாக பிராத்தனை மண்டபத்தை நோக்கி விரைகின்றார்கள். பிராத்தனை மண்டபத்திற்கு விரைகின்றேன். "சொற்றுணை வேதியன்" மாணவர்களது வாயில் இருந்து உச்ச ஸ்தாயியில் ஒலிக்கின்றது. பிராத்தனை முடிந்ததும் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

மேல் மாடியில் இரண்டாவது வகுப்பறையில் எனக்கு முதலாவது பாடம். அது பத்தாம் வகுப்பு பாஸ்கரனுடைய வகுப்பு என் கண்கள் மேலும் கீழும் அலைகின்றன. கடைசி வாங்கின் இடது கோடியில்.... அவன் என்னைப் பார்ப்பதும் குனிந்து கொள்வதுமாக இக்கின்றான். தனது தாயார் என்னிடம் என்ன சொல்லியிருப்பான் என எண்ணுவது அவனுடைய பார்வையில் நன்கு தெளிவாகின்றது.

பாடத்தை ஆரம்பிக்கின்றேன் வட்டங்களின் இயல்புகள் கரும்பலகையில் கணக்கை விளக்கிவிட்டுத் திரும்பிய போது பாஸ்கரன் திறந்திருந்த யன்னலினூடே வெளியே பார்த்துக் கொண்டிருப்பது தெரிகின்றது. அந்தப் பார்வையில் எல்லையில்லாத ஒரு சுவாரஸ்யம் தேங்கிக் கிடப்பது தெரிகின்றது. பயிற்சியை எழுதி முடித்ததும் சத்தம் செய்யாமல் பாஸ்கரன் பின்னால் வந்து நின்று நானும் வெளியே பார்க்கிறேன். வெளியே பக்கத்து வளவில் உள்ள பப்பாசி மரத்தில் இருந்த ஒரு பழத்தை இரண்டு காகங்கள் போட்டி போட்டு கொத்திக் கொண்டிருக்கின்றன.

"பாஸ்கரன்" அமைதியாக, ஆனால் அழுத்தமாக அழைக்கிறேன். திடுக்கிட்டுத் திரும்பியவன் தன்னைச் சுதாகரித்துக் கொள்கிறான்."

"பாஸ்கரன்" எழுந்து நிற்கின்றான் கொப்பி எங்க? "அம்மா வேண்டித் தரல்ல...." "போன கிழம கலைவிழா வெண்டு சொல்லி வீட்டில காசு கேட்டநீரா?"

"ஓம் டீச்சர்...."
"ஏன் பொய் சொன்னீர்..."
"அப்படியில்லாட்டி அம்மா காசு தரமாட்டா......"

"அது சரி, அந்தக் காசில வாங்கின கொப்பிகளெங்க....."
"நான் வேண்டல்ல...."
"ஏன்?" அவனது முகத்தில் பயத்தின் ரேகைகள் நெளிகின்றன.
"காச எங்கேயோ துலைச்சிப் போட்டன்......"
"அது சரி இதென்ன கொப்பி...."

"தமிழ் கொப்பி..."

அதில கடைசிப் பக்கம் எடுத்துக் கணக்கச் செய்யும்" அவன் குனிந்து கொண்டே அமர்கிறான்.

அன்று மதியம். பின்னேர வகுப்புகள் ஆரம்பிக்க இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன. ஏதோ ஒரு காரணமாக பத்தாம் வகுப்பின் அண்மையில் சென்ற நான் உள்ளே உரத்தொலித்த பாஸ்கரனின் குரல் கேட்டு வாசலிலேயே நின்று விடுகின்றேன்.

"டேய் பாஸ்கர்.... ஏன்டா கலை விழாவெண்டு வீட்டில டூப் விட்டனீ" என்றான் பாஸ்கரனின் அருகே எப்போதும் ஒட்டிக் கொண்டிருக்கும் சந்திரன்.

"எங்கட அம்மா ஒரு சதமும் சும்மா தரமாட்டா...." "உனக்கேன்டா காசு....." "டேய்... உனக்குத் தெரியாதாடா...? போன செவ்வாய்க்கிழமை சுசீலாவின் பிறந்த நாள் எல்லோ...."

"ஓ ... உன்ட " கேர்ள் பிரண்ட் , அதுக்கு....." ஒரு சின்னப் பிரசன்ட் குடுக்காட்டி என்ன நினைப்பா..... அதான் அம்மாட்ட டூப்விட்டு...." தனது பொய்யின் வலிமையை நினைத்து கலகலவெனச் சிரிக்கிறான். இந்தப் புதிய தகவல் என்னை மேலும் குழப்புகின்றது. தமிழைக்கூட தடங்கலின்றி எழுதத் தெரியாத.... இவனுக்கு ஒரு காதலியா? தன்னைப் பற்றியே உணர்ந்து கொள்ள முடியாத ஒருவன் ஒரு பெண்ணின் வாழ்வில் விளையாடுகின்றான்....

"ரவி! ஒரு சின்ன உதவி செய்வியா...."கெஞ்சலாக ஒலிக்கிறது அவனது குரல் "என்னடா விஷயமில்லாட்டி இப்பிடி கெஞ்சமாட்டியே......" ரவியின் குரலில் கேலி மிளிர்கின்றது.

"டேய் எழுதித்தாடா.... இந்த முற மட்டும்..... இனிமேல் நான் எழுதுவன்."

"எழுதித் தந்தா..... என்ன தருவா..." "பின்னேரம்.... இங்கிலீஸ் படம் பார்க்கக் காசு தருவேன்..." " உண்மையா...." ரவியின் குரலில் நம்பிக்கையின்மை தொனிக்கின்றது. "சத்தியமா...." நம்ப வைக்கப் பிரயோகிக்கும் கடைசி அஸ்திரம்

"சரி சொல்லு..." கொப்பியில் இருந்து தாள் கிழிக்கும் ஒலி கேட்கின்றது.

"அன்பே உருவான சுசி....." எனக்குச் சிரிப்பு வருகின்றது. பற்களை இறுக்கிக் கடித்து அடக்கிக் கொள்கிறேன்.

"உன் அன்பான கடிதம் கிடைத்தது.... நீ கேட்ட அந்த கியூடெக்சை எப்படியும் வாற

கிழமைக்குள்ள வாங்கித் தருவேன். நாளைக்கு பள்ளி விட்டு வீட்ட போகக்குள்ள பஸ் ஸ்டான்டில நில். எல்லாம் சொல்கிறேன்.இப்படிக்கு உன் அன்பு மறவாத பாஸ்கரன்....."

நான் சந்தடியில்லாமல் திரும்பி வருகின்றேன். சிரிப்பதா, அழுவதா என்று தெரிய வில்லை. வகுப்பில் ஒழுங்காகப் படிக்காத ஒரு மாணவனாக மட்டும் தான்அவனை நான் கற்பனை செய்தேன். ஆனால், அதற்கும் மேலாக இந்த வயதிலே.... ஒரு காதலியும் கூடவா.... காதலிக்குக் கடிதம் கூட இரவல் கையெழுத்தில்!

என் நினைவுச் சங்கிலியை இடையில் அறுக்கிறது. கல்லூரி மணியொலி. மாலை இரண்டாம் பாடம் அதே வகுப்பு. கலகலத்துக் கொண்டிருந்த மாணவர்கள் நான் உள்ளே நுழைந்ததும் அமைதியாக அமர்கின்றார்"காலையில் நான் தந்த கணக்கைச் செய்யாதவங்கள் எழும்புங்கோ!" பாதி வகுப்பு எழுந்து நிற்கின்றது. ஒவ்வொருவர் ஒவ்வொரு சாட்டுச் சொல்கின்றனர். நான் காலையில் எடுத்துக் கொண்ட முயற்சியில் பாதி விரயமாகிவிட்டதில் ஒரு பக்கம் ஆத்திரமாகவும் மறு பக்கம் வேதனையாகவும் இருக்கின்றது. என் பார்வை பின் வாங்கிற்குத் தாவுகின்றது.... பாஸ்கரன் கூரையைப் பார்த்தபடி சலனமற்று நிற்கின்றான்.

"இப்ப செய்து முடிக்காவிட்டால்.... நான் பள்ளிவிட்டு வீட்ட போக விடமாட்டேன்... நானும் இண்டைக்குப் பள்ளி விட்டதும் நிற்கப் போறன்.... "ஒருவரும் கணக்குச் செய்யாமப் போக முடியாது..."

"பின்னேரம்..... டியூஷன் கிளாஸ் டீச்சர்....." குனிந்து கொண்டே ரவி பதிலளிக்கிறான். எனக்குச் சிரிப்பு வருகின்றது. வகுப்பில் ஒழுங்காகப் படிக்க முடியாத இவர்களுக்கு ஒரு "டியூஷன்" வகுப்பு.

இரண்டு நாட்கள் ஓடி மறைகின்றன. பாஸ்கரனைப் பாடசாலையில் காணவில்லை. அதைப்பற்றிச் சிந்திக்க முடியாதபடி பாடசாலையில் நிறைய வேலைகள். பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதில் நேரம் கழிகின்றது. அன்றுஒரு புதன் கிழமை பாடசாலையை விட்டு வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருக்கிறேன். பலாமரத்தடியிற் "சனக்கும்பல்" எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

"என்ன நடந்தது...."

"அது... இந்த வீட்டில ஒரு பொடியன் இருந்தானே.... என்னவோ அவன்ட பேர்.... ஆ... பாஸ்கரன். அவன் வீட்டில இருந்த காச எடுத்துத்து ஓடிட்டானாம்...." படசாலையடி யில் நின்ற கும்பலின் மத்தியில் அந்தப் பெண்ணின் ஒப்பாரி ஓங்கி ஒலிக்கின்றது.

"ஐயோ! கடலுக்குப் போக..... வலையில்லையெண்டு அந்த மனிசன் கடன்பட்டு

வேண்டிவந்த காசக் கொண்டு பொயித்தானே! அவன் நல்லா இருப்பானா.... நான் எங்க போவன் ஆரிட்டக் கேப்பன்....."

கும்பலில் ஒவ்வொருவரும் தமது கற்பனைக்கு ஏற்றபடி கதைகளை உருவகித்துக் கொண்டிருக்கின்றனர். ஒருவராவது குமுறும் அந்தத் தாய்க்கு ஆறுதல் சொல்வதாய் காணோம்.

"கத்தாத அம்மா..... நாம இனியென்ன செயிறது....." கந்தல் பாவாடையுடன் அழுக்கே உருவாக நின்ற ஒரு சின்னப் பெண். அவளது கைகளைப்பிடித்து இழுக்கின்றாள். அவளைப் போய்ச் சமாதானப் படுத்தலாமா என ஒரு கணம் நினைக்கின்றேன். ஆனால் அந்த சூழலில்........ ஏதோ ஒரு தயக்கம் என்னைத் தடுத்து நிறுத்துகின்றது. என்னுள் ஓர் உணர்வு பொறி தட்டுகின்றது. அவன் மட்டும் தான் பணத்தோடு ஓடினானா?! இல்லை அந்த அவளும்..... கடிதத்தில் மாத்திரம் பெயரளவில் நான் சந்தித்த சுசீலா.....! அப்படியிருந்தால், அந்த அசட்டுப் பெண்ணிற்காக நான் கண்ணிர் வடிக்கின்றேன். அந்தச் காசு சில நாட்களில் கரைந்து விட்டால் அவள் பாடு. நான் மௌனமாக நடக்கின்றேன். அன்று முழுவதும் என்னால் தூங்க முடியவில்லை.

மேலும் இரண்டு நாட்கள் நகர்கின்றன. இரவு பத்து மணியிருக்கும்.... பயங்கரமாக எழுந்த கூக்குரல் என்னைத் திடுக்கிடச் செய்கின்றது. கிறவல் வீதியால் பலர் விழுந்தடித்து ஓடுகின்றனர்..... உடைகளைச் சரிசெய்து கொண்டு வாசல் கேற்றைத் திறந்து எட்டிப் பார்க்கிறேன். தூரத்தில் விளக்கோளி தெரிகின்றது. அந்த வீட்டில்தான். நான் மெல்ல நடக்கின்றேன்.

"என்னவாம்...." பாதையில் நின்ற ஒரு கிழவியைப் பார்க்கிறேன். "அவன் பாஸ்கரன்...." கிழவி இடை நிறுத்துகிறாள். எனக்கு எரிச்சலாக இருக்கின்றது. அவசர விஷயங்கள் கூறும் போதும் இத்தனை எதுகை மோனை....

"அவன ஆரோ அடிச்சிக் கால முறிச்சிப் போட்டாங்களாம்...." நான் சூழலை மறந்து கூட்டத்தின் இடையே ஊடுருவி முன்னேறுகிறேன். அங்கே துவண்டு போய்க்கிடக் கிறான். அவன் தலையில் பெரிய கட்டு கால்களில் ஒன்று.... கால் துவண்டுகிடக் கின்றது. நான் யாரிடம் கேட்பது, எப்படி கேட்பது என்று தெரியாமல் விழிக்கின்றேன்.

"என்ட ராசா உனக்கு இப்படி ஆகிட்றேடா...." அவள்.... பெற்றவள் துடிக்கின்றாள்.
"இவன் ஆரோடயோ சூது விளையாடி, அடிபுடிப் பட்டிரிக்கான்.... இப்ப புள்ளையள் என்ன பள்ளிக்குப் போகுதுகள்...... பள்ளிக்கெண்டு சொல்லிப் போட்டு காசு விளையாடு

கிறதும் கடதாசியடிக்கிறதும்..." ஒரு கிழவி முணுமுணுக்கிறாள்.

"இந்தக்காலத்து வாத்திமா ரெண்டாப்புல...... புள்ளையள் பள்ளிக்கு வந்தாலும் சரிதான். வராட்டியும் சரிதான். பக்கத்தில் குந்தியிருந்த ஒரு கிழவர் ஒத்துப் பாடுகிறார்.

"இந்த வாத்திமார் நல்லாப் படிப்பிச்சிருந்தா எண்ட மகன் இப்பிடிப் போவானா? அவங்களுக்கு பணக்காரப் புள்ளையளெண்டா ஒரு மாதிரி. கெட்டு நொந்து போனது களெண்டா ஒரு மாதிரி...... எண்ட புள்ளய அநியாயமாகக் கெடுத்துப் போட்டாங்களேனா.... பள்ளிக்கு வரவேணாம் எண்டு அடிச்சித் துரத்தாட்டி அவன் இப்படி நாசமாகப் போவானா?....

"உன்னப் படிக்க வெச்சிப்பார்க்க ஆசப் பட்டனே மகனே! நீ இப்புடிக் கையையும் காலையும் உடச்சித்து...... ஒண்டுக்கும் ஆகாமக் கிடக்கிறியே..... எண்ட ஆசையெல்லாம் மண்ணாப் போயித்தே மகனே! அவன் ராசுவப் போல் நீயும் படிச்சி.... எண்ட கண்ணீரத் துடைப்பாயெண்டு நினைச்சனே...... எல்லாம் போயித்தே..... எண்ட கண்ணீர் அந்த வாத்திமாரச் சும்மா உடுமா....."

நான் மௌனமாகத் திரும்பி நடக்கின்றேன். இப்போதும் குற்றவாளிக் கூண்டில் நிற்பது நாங்கள் தானே......?

அந்தத் தாயின் இனிய கனவுகள் நிறைவேற முடியாத நீர்க்குமிழிகளாய் சமுதாய நீர்மட்டத்தில் வெடித்துச் சிதறி விட்டன. அவள்கற்பனை செய்த அற்புதமான கனவுகள் நிரந்தமாகக் கலைந்து விட்டன..... இனிமேல் பாஸ்கரன் காலமெல்லாம். ஊனமுற்ற ஒருவனாய் சமுதாய நீர்ச் சூழலில் சிக்கித் தவிக்கும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டான்.

வீரகேசரி 14.01.1979

# நியாயப்படுத்த முடியாத நியாயங்கள்

"ராசு..... படத்துக்குப் பூ வைச்சிற்றயாடா?" உயர்ந்து வளர்ந்திருந்த மல்லிகை மரத்தில் வெண்முத்துகள் போல் பரவிக் கிடந்த பூக்களை ஒவ்வொன்றாகப் பறித்துக் கூடையில் போட்டுக் கொண்டிருந்த ராசுவின் செவிப்பறையில் வந்து மோதியது முதலாளி சந்திரனின் குரல்.

"பூ ஆயிறன் முதலாளி.... அஞ்சு நிமிஷத்தில வைச்சி முடிச்சிடுவன்.... மல்லிகை மரத்தடியில் பூப்பறித்தவாறே பதில் குரல் கொடுத்தவன்..... இடுப்பில் இருந்து கீழிறங்கி விழப்பார்த்த தொள தொளத்த காற்சட்டையை ஒரு கையால் இறுக்கிப் பிடித்தபடி பூக்கூடையை மரத்தடியில் கிடந்த கருங்கல் ஒன்றின் மீது வைத்தான். காற்சட்டையை இறுக்கி, விளிம்பில் பூட்டூசியொன்றை குத்திக் கொண்டான். இத்தகைய சந்தர்ப்பங்களிற் காக காற்சட்டைப் பையில் சில பூட்டூசிகளை எப்போதும் வைத்திருப்பான். கலைந்து கிடந்த தலைமயிரைக் கைகளால் வாரிக் கொண்டான் அவன்.

பெற்றோர்களால் ராசேந்திரன் எனப் பெயரிடப்பட்டிருந்தாலும் ஊருக்கெல்லாம் ராசுக்குட்டிதான். பன்னிரண்டு வயதினிலேயே உலகின் பரிமாணங்களை எல்லாம் பார்த்தவன்..... எல்லா பிள்ளைகட்கும். இருக்க வேண்டிய அத்தனை ஆசைகளையும் மனதில் இருந்து பிடுங்கி எறிந்துவிட்டுச் சதாகாலமும் தனது குடும்பத்திற்காக உழைக்கும் ஒரு புனிதன். அவனது சிந்தனை முழுவதும் நிறைந்திருப்பது குடும்பந்தான்.

அம்மா...... அவன் கண்ணுக்குக் கண்ணாக நினைக்கும் அவனது அம்மா எல்லா அம்மாக்களையும் போல் கலகலவென்று சிரித்து சுறுசுறுப்பாய் சுற்றித் திரிந்ததை அவன் பார்த்ததில்லை. சிறிய குளிர்காற்று அடித்தால் போதும் சளி தொண்டைவர நிறைந்து அவளை வாட்டத் தொடங்கிவிடும். ஆஸ்மாவோடு போராடிப் போராடியே ஒரு மூலையில் சுருண்டு படுத்துவிடுவாள். பாசமான அம்மா. நோயோடு போராடும் போது அவனுக்கு நெஞ்சு வலிக்கும். அம்மாவை நோயாளியாக்கிய இறைவன்

அப்பாவின் ஒரு காலையும் செயலிழக்க வைத்ததுதான் கொடுமை. யுத்தத்தின் கோரச் சுவடாக காலின் வலிமை யிழந்த அப்பா ஒரு பிடிசோற்றிற்கு மகனின் பிஞ்சுக்கரங்களையே எதிர்பார்த்துநிற்பது தான் மாபெரும் அவலம்.

இந்த அவல நிலையிலும் இறைவன் கொடுத்த பெருங் கொடையாக அவனுக்குப் பின் மூன்று தங்கைகள், ஐந்து ஜீவன்களின் வயிற்றுப்பசி தணிக்க அவன்தான் உழைக்க வேண்டும்.

காலை ஏழு மணிக்கு நீண்டு கிடக்கும் புதிய கல்முனை வீதியில் கிழக்குப் புறமாக அமைந்திருக்கும் கராஜ்ஜிற்கு வந்துவிடுவான்.

மாலை ஐந்து மணிவரை ஏதாவதொரு வேலையில் தன்னை இணைத்துக் கொள்வான். அந்த கராஜ்ஜைப் பொறுத்தவரை சந்திரனின் கூப்பிட்ட குரலுக்குக் காலடியில் நிற்கும் ஜீவன் அவன்தான்.

'முதலாளி..... இந்தாங்க பூ..... நான் வைக்கவா நீங்க வைக்கிறீங்களா?' கழுவிய முகத்தைப் துடைத்தபடி சுவாமி படங்களின் முன்னால் நின்ற சந்திரனின் முன்னே பூக்கூடையை நீட்டியபடியே கேட்கிறான்.

'நீயே வைச்சுவிடு..... நான் ஊது பத்தியை கொளுத்தி கொண்டுவாறன் சந்திரனின் பதிலால் திருப்தியடைந்தவன். மூன்று படங்களிற்கும் முன்னால் இருந்த தட்டில் பூக்களை பரப்பி வைத்தான். கைகுவித்து வணங்கும் போது முருகனும், பிள்ளையாரும் அம்மனும் தன்னைப் பார்த்துச் சிரிப்பது போன்றதொரு பிரமை.

'என்னைப் பார்த்தால் உங்களுக்கு சிரிப்பு வருகிறதா?' எனத் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

'என்ன ராசு வரம் கேக்கிறாயா?' என்ற முதலாளி சந்திரனின் குரல் அவனை சிறிய கனவுலகில் இருந்து நினைவுக்குக் கொண்டுவர 'இல்ல முதலாளி.... நாம என்னதான் வரம் கேக்கிற..... நம்மக் கடவுளுக்கு ஞாபகமிருக்குமோ தெரியா' என்றபடி அன்றைய வேலைக்குரிய ஆயுதங்களை எடுத்து மேசையில் அடுக்கத் தொடங்கினான்.

'ராசு..... நேத்து நாம நிமித்தின தகடு இன்னும் நேராக வரல்ல..... அந்தச் சுத்தியலைத் தூக்கிக் கொஞ்சம் அடியன்.'

'ஓம் முதலாளி' மூலையில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த பாரமான சுத்தியலைத் தூக்கினான்.... தூக்கவே மூச்சுமுட்டியது. பன்னிரண்டு வயதுச் சிறுவனுக்கு இது கடின மான வேலைதான்.... ஓங்கி அடித்தான். ஒவ்வொரு அடியும் அடிக்கும் போது வயிறு

இரைச்சல் போடுவது அவனுக்குக் கேட்கிறது. காலையில் ஒன்றுமே சாப்பிடவில்லை. இரவு சமைத்த சோற்றில் சிறதளவை மிச்சம் பிடித்து அதைக் காலையில் உப்பு தேங்காய் மிளகாய் வெங்காயம் சேர்த்து சிறிது புளிவிட்டு அம்மா கரைக்கும் கரையலிற்காக ஐந்து ஜீவன்கள் கையேந்தும் போது தானும் அதில் பங்குகேட்பது சரியல்ல என அவன் நினைப்பு. அம்மா 'கொஞ்சம் சாப்பிடன் தம்பி' என்றாலும் கூட 'வேணாம் அம்மா..... கராஜ்ஜில ஏதும் பார்த்துக் கொள்ளுவன்' என்று பொய் சொல்லி விடுவான். காலையில் அம்மா தரும் வெறும் தேநீர் மாத்திரம் தான். சில வேளைகளில் முதலாளி காலையில் வாங்கும் சாப்பாட்டில் மிச்சம் மீதி இருந்தால் கொடுப்பார். இல்லாவிட்டால் பட்டினிதான். ஒவ்வொரு மாலையிலும் சந்திரன் இவன் வேலை முடிந்து போகும் போது நானூறு ரூபாய் கையில் கொடுத்துவிடுவான். அதில் முப்பது ரூபாவை மத்தியானம் இரண்டு பணிஸ் வாங்க ஒதுக்கிவிட்டு மிகுதியை அப்படியே அம்மாவிடம் கொடுத்துவிடுவான்.

'ராசு....' சுத்தியலால் அடிப்பதை நிறுத்திவிட்டு நிமிர்ந்தான். ' வாசல்ல ஏதோ வாகனம் போல கிடக்குது பார்.....'

வாசலுக்கு விரைந்தான். ஒரு சிவப்பு நிற மாருதி கார் நின்றிருந்தது. காரின் கண்ணாடி கீழே இறங்க ஒரு நாற்பது வயது மதிக்கத்தக்க பெரியவரின் முகம் எட்டிப்பார்த்தது.

'சந்திரன் இருக்கிறாரா?'

'ஓம் சேர்' என்றவன் உள்ளே திரும்பி கதிரையில் அமர்ந்து தேநீர் பருகிக் கொண்டிருந்த சந்திரனை அழைக்கப்போனான்.

'உங்களைக் கூப்பிடுறார் முதலாளி' என்றவன் பழையபடி தனது சுத்தியலைத் தூக்கிக் கொண்டான். அவனிடம் ஒரு வேலையை ஒப்படைத்து விட்டால் போதும் எத்தனை கடினமான வேலையாக இருந்தாலும் அதை முடித்துவிட்டுதான் மறுவேலை பார்ப்பான். இதனால்தான் சந்திரனுக்கு ராசுவை மிகவும் பிடிக்கும்.

'ராசு ஐயாட காரை நான் கொஞ்சம் பார்க்கிறன்.... ஐயாவுக்கு ஒரு கதிரையை எடுத்துப் போடு.....' சந்திரனின் குரலைத் தொடர்ந்து உள்ளே காலடி எடுத்து வைக்கும் அவர் கண்களில் படுகிறார். நீல நிற சேர்ட்டும் கறுப்புக் காற்சட்டையும் போட்டிருந்தார். கண்களில் தங்க பிறேம் போட்ட கண்ணாடி..... சுத்தியலை வைத்துவிட்டு மூலையில் கிடந்த பிளாஸ்டிக் கதிரையைத் துணித்துண்டொன்றால் துடைத்துக் கொண்டு வந்து மத்தியில் போட்டான். அவர் அமர்ந்து கொள்ள அவன் பழைய படி சுத்தியலைத் தூக்கிக் கொண்டான். தான் சுத்தியலால் அடிப்பது அவருக்கு அசௌகரியமாக இருக்குமோ

என்ற நினைப்பு அவன் மூளையில் பளிச்சென மின்ன அவரைத் திருப்பிப் பார்க்கிறான்.

'சேர் நான் சுத்தியலால இந்த இரும்புத் தகட்டை அடிச்சால் சத்தம் உங்களுக்கு கஷ்டமாயிருக்குமோ....'

'இல்ல தம்பி நீ அடி' அவன் மெதுவாக அடிக்கத் தொடங்கினான். கருமமே கண்ணாக இருந்தவனுக்கு அவர் தன்னை அவதானிப்பது போன்ற உணர்வு ஏற்பட கடைக்கண்ணால் பார்த்தான். சிந்தனையோடு தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது தெரிகிறது. குனிந்து கொள்கிறான்.

'தம்பி....' அவரது அழைப்பிற்கு நிமிர்ந்தான்.

'பேரென்ன தம்பி'

'ராசு சேர்'

'கன காலமா வேல செய்யிறயா? "ரெண்டு வருஷமா"

'ஏன் உன்ர அப்பா குடும்பத்தப் பார்க்க மாட்டாரா?' அவரது கேள்வி அவனுக்குள் சிரிப்பை வரவழைக்க அவனை அறியாமலே சிரித்துவிடுகிறான். சிரிக்கும் அவனை வியப்புடன் அவர் பார்க்கும் போது தான் தனது பிழை அவனுக்குப் புரிகிறது. சட்டெனச் சிரிப்பை நிறுத்திவிட்டு அவரை நன்றாகப் பார்க்கிறான்.

'அப்பா தான் சேர் குடும்பத்தைப் பார்த்தவர்.... அப்ப நாங்க எவ்வளவு சந்தோஷமாக இருந்தம்... நாங்க முதல் இருந்தது ஆத்துக்கு அங்கால சேர்... தாண்டியடியில்.... அப்பா வயல் வேலைக்குப் போவார் சேர்.... வேலை இல்லாட்டி காட்டுக்கு விறகு வெட்டப் போவார்.... அப்ப நல்ல வருமானம் சேர்... அப்பா வருஷமெண்டால் நல்ல உடுப்பெல்லாம் வாங்கித் தருவார்.... சண்டையொண்டு வந்தது.... எல்லாமே துலைஞ்சு போயிட்டுது.... நான் அப்ப சின்னப் பிள்ளை சேர்.... திடீரென்று வெடிச்சத்தம் கேக்கும்... அம்மாவும் அப்பாவும் எங்களைத் தூக்கிக் கொண்டு காட்டுப் பக்கம் ஓடுவாங்க.... மேல வானத்தில ஹெலியும் சுத்திச் சுத்திச் சுடும். நாங்கள் மரங்களுக்குக் கீழ் இருப்பம். நினைச்சால் பயங்கரம் சேர். கடவுள் மட்டும் தான் எங்களுக்குக் காவல்.... எல்லாத்துக்கும் மேலா ஒரு நாள் பெரிய துன்பம்.... என்ன நடந்ததோ தெரியாது. ஒரு நாள் மத்தியானம் திடீரெண்டு பொம்பர் அடிச்சுது..... சாப்பிட்டுக் கொண்டு இருந்த நாங்க உயிரைக் காப்பாத்திக் கொள்ள ஓடினம்......'

ஓடுறதெண்டால் சேர் கண்மண் தெரியாமல் ஓடுவம்... எல்லாம் முடிஞ்சு வந்து பார்த்தா அப்பா பொறிவெடியில மாட்டிற்றார். செஞ்சிலுவைச் சங்கம் தான் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனாங்க..... பிறகென்ன சேர் அப்பாட கால் ஒண்டு செயலிழந்து போச்சுது.... அது கூட அங்கால இருக்கேலாம மஞ்சந்தொடுவாய்

முகாமுக்கு வந்த பிறகுதான் தெரிஞ்சுது....' இவ்விடத்தில் நிறுத்தித் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டவன் அவரை நிமிர்ந்து பார்த்தான். பிறகு எதையோ நினைத்துக் கொண்டவன் மீண்டும் தொடர்ந்தான். 'சேர் அப்பா தான் இப்படியாகிட்டார் அம்மாவாவது உதவலாம் தானே எண்டு கேப்பீங்கள்.... அம்மா ஒரு ஆஸ்மா நோயாளி சேர். ரெண்டு நாளைக்கு நல்லா இருந்தா மூண்டு நாளைக்குப் படுத்திடுவா... பாவம் சேர் அம்மா நல்லவ....' சொல்லும் போதே கண்கள் பனித்தன. துறுதுறுவென்று சுழன்று வேலை செய்யும் இந்தச் சின்னஞ்சிறு சீவனுக்குள் இத்தனை சோகமா என எண்ணும் போது அவருக்குப் பெருவியப்பு....

'ஏன் தம்பி உங்களுக்கு சமுத்தி உதவி கிடைக்கிறதில்லையா?'

'கிடைக்கும் சேர் ஆனால், போதாது.... மூண்டு தங்கச்சிமார் சாப்பிட வேணும். உடுக்கவேணும்... படிக்கவேணும்....'

அவர் தன்னைச் சிந்தனையோடு பார்ப்பது போல் அவனுக்குத் தோன்றியது. வளைந்த தகட்டின் ஓரத்தை குறடொன்றால் நிமிர்த்திய படியே ஓரக்கண்ணால் அவரைப்பார்த்தான்.

'நீ இங்க வேலை செய்யிறது பிழை எண்டு உனக்குத் தெரியுமா?' அவன் எதுவும் பேசவில்லை. கருமமே கண்ணாகத் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான்.

'உனக்கெத்தின வயசு'

'பன்னிரெண்டு சேர்' "பன்னிரண்டு வயசில படிக்க வேண்டிய பிள்ளையள் இப்படி வேலை செய்ய வரக்கூடாது.... உன்னைக் கண்டால் பொலிஸ் பிடிச்சுக் கொண்டு போகும்."

அவன் மீண்டும் மௌனமாக இருந்தான். 'அப்பிடி ஒரு நிலை வராது சேர்... எங்கட முதலாளி பார்த்துக் கொள்ளுவார்.'

'அப்படியெல்லாம் யாரும் காப்பாற்ற முடியாது.... உன்னுடைய வயதில பிள்ளைகள் கட்டாயம் படிக்க வேணும்..... நானும் ஒரு ஒபிசில வேலை செய்யிறவன் தான் எனக்கும் சட்டம் தெரியும்....'

அவனுக்குச் சட்டென்று கோபம் வந்தது.... உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டான். என்ன இவர்..... கார் பழுதென்றுகராஜ்ஜுக்கு வந்தால் அதைச் செய்து கொண்டு போக வேண்டியது தானே என தனக்குள்ளே எண்ணிக் கொண்டான். நிமிர்த்திய தகட்டை பின் சுவரில் சாய்த்து வைத்துவிட்டு சுத்தியலையும் அருகில் வைத்தான். மேற்சட்டை யைத் தூக்கி வியர்த்த முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

'தம்பி இப்பிடி கராஜ்ஜில வேலை செய்தால் தானே பிடிச்சுக் கொண்டு போவாங்க.... நீ எங்கட வீட்ட வாவன்.... பெரிய தோட்டம் இருக்குது.... வீட்டு வேலைகளைச் செய்தால் போதும்..... நான் ஐயாயிரம் தருவன் இப்படிச் சுத்தியலைத் தூக்கி அடிச்சுக் கொண்டு கஷ்டப்படத் தேவையில்லை.....' அவர் சுற்றி வளைத்து எங்கே வந்திருக்கிறார் என்று அவனுக்குப் புரிந்தது.... மெல்லிய புன்னகையொன்று அவனது முகத்தில் வந்து போனது.

'சேர்.... உங்கட வீட்ட வந்து வேலை செய்தால் அது சிறுவர் தொழிலாளி இல்லையோ சேர்..' அவன் அவரது முகத்தை நன்கு உன்னிப்பாக பார்த்த படியே கேட்கிறான். சிக்கலான கேள்வி என அவரது மனதில் தோன்றிய எண்ண அலையின் பளிச்சீடு அவரது முகத்தில் வந்துபோனது.

'இப்படிப் பகிரங்கமாகக் கராஜ்ஜில வேலை செய்தால் எல்லாருடைய கண்களிலும் படும்.... ஆனால் எங்கட வீட்டை வந்தால் யாருக்கும் தெரியாது'

'சேர் சுயநலமா யோசிக்கீறிங்க சேர்..... இங்க வேலை கஷ்டம் தான் ஆனா பின்னேரத்தோட வேலை முடிஞ்சிடும்..... காசோட வீட்டபோய் அம்மாட கையில காசக் குடுத்துப் போட்டு அம்மா அப்பா தங்கச்சிமார் எல்லாம் சுத்தி இருந்து சாப்பிடுறது... நான் தங்கச்சிமார் எல்லாம் எங்கட அம்மாவைக் கட்டிப்பிடிச்சிக் கொண்டு படுப்பம் சேர். அம்மா நித்திர கொள்ளும் மட்டும் மேலெல்லாம் கையெல்லாம் தடவிவிடுவா சேர்.... இந்தச் சுத்தியலத் தூக்கி அடிக்கிற வலியெல்லாம் இல்லாமல் போயிடும்.....நான் நித்திர கொண்டுட்டன் எண்டு நினைச்சி அம்மா நெத்தியில கொஞ்சுவா சேர்... சிலவேளை அம்மாட சூடான கண்ணீர் துளி நெத்தியில விழும் சேர்....

அம்மாக்கு என்னில நிறையப் பாசம் சேர் இந்த அம்மாவ விட்டிற்று நான் வரலாமா சேர்.... எங்கட அம்மாவுக்கு சுகமில்லையெண்டால் அப்பா எங்களை மடியில படுக்க வைப்பார் சேர்.... இதெல்லாம் விட்டிட்டு உங்கட வீட்ட வரலாமா சேர்... மேசையில் கைகளை ஊன்றியபடியே பேசிக்கொண்டிருந்த அவனது கண்களில் திரண்ட கண்ணீர் கன்னங்களை நனைக்கின்றது.

'தம்பி... இப்படிச் சுத்தியலைத் தூக்கிக் கொண்டு கஷ்டப்படுறத பார்க்கக் கஷ்டமாய் இருந்தது.... அதோட படிக்கிற வயதில படிக்க வேணும் தானே'

'சேர் படிப்பப் பற்றி நீங்க கதைக்காதீங்க சேர்.... நான் இங்க வேலை செய்யிறதால என்ர மூன்று தங்கச்சிகள் படிக்குது சேர்.... மூத்த தங்கச்சி சரியான கெட்டிக்காரி... உங்கட வீட்டுக்கு வந்தால் நீங்க பாலும் பழமும் தரலாம். அம்மா செஞ்சுதாற சோறும் சம்பலும் அதைவிட ருசியா இருக்கும் காசால பணத்தால வாங்க முடியாத சந்தோசம்

எங்கட வீட்டுல இருக்குது சேர்... என்னப்போல பிள்ளைகளுக்கு உதவிறதெண்டால் எங்கட குடும்பத்தையே தத்து எடுக்க வேணும் சேர்... முடியுமா? அவரால் பேச முடியவில்லை. ராசுவைப் பார்க்கும் போது பன்னிரண்டு வயதுப்பையனாக அவருக்குத் தோன்றவில்லை. அவனிடம் மண்டிக்கிடந்த அனுபவ முதிர்ச்சி அவரை வியப்பில் ஆழ்த்தியது.

'சேர்... அந்த யன்னலால திரும்பிப் பாருங்க... பெரிய மோட்டார் சைக்கிள்ள கறுப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டு... தெரியுதா சேர்... தங்கச் சங்கிலி தெரியத் தக்கமாதிரி சேர்ட்டைத் திறந்து விட்டுக்கொண்டு கதைச்சுக்கொண்டு நிற்கிறானே.... அவன்ர பெயர் சுதேஸ் சேர்.... அவங்கட அப்பாவிற்கு மூன்று கடை இருக்குது.... கார் இருக்குது... இவன் பள்ளிக்குச் சரியாப் போகமாட்டான் சேர்..... ரோட்டால போற பெண்பிள்ளையளச் சுத்திச் சுத்தி வருவான்... அவனுக்கு கவலையில்லை.... ஆனால், ஒரு நாள் அவங்கட அப்பாட வியாபாரத்தில் நட்டம் வந்து நடுத்தெருவில நிக்கவேண்டி வந்தால் இவன்ர கதி என்ன..... வசதி போனா இவன் பிச்சை எடுக்க வேணும் அல்லது களவெடுக்க வேணும்.... ஆனால், நான் அப்படியில்ல சேர்..... இப்ப நான் தொழில் பழகுறன்... இதுவும் ஒரு படிப்புத்தானே சேர்... எனக்கும் ஒருநாள் வசதி வாய்ப்பு வந்தா நானும் இப்படியொரு கராஜ் வைச்சுப் பலருக்கு வேலை குடுப்பன்....

அவருக்குப் புரிந்தது அவன் சொல்வதில் பல உண்மைகள் பொதிந்திருக்கின்றது. அவனது குடும்ப நிலைமையில் அவனைத் தவிர குடும்பத்தைக் காப்பாற்றக்கூடிய யாருமே இல்லை. இந்த நாட்டிலே இப்படியான எத்தனையோ குடும்பங்களைத் தாபரிக்க திட்டம் வகுக்காத வரையில் சிறுவர் தொழிலாளிகளை நிறுத்த முடியாது.

'சேர் உங்கட கார் ரெடியாகிட்டுது.....' கையைத் துடைத்தவாறு உள்ளே வந்து கொண்டிருந்தான் முதலாளி சந்திரன்.'

'தம்பி.... ராசு எனக்கு ஞானோபதேசமே செய்திட்டான்... புத்திசாலி' 'ஓம் சேர்... ராசு இல்லாட்டி என்னால எதுவும் செய்ய ஏலாது...குடும்பத்தில கஷ்டம் என்னாலையும் நிறையப் பணம் குடுக்க முடியாது... இப்ப வாற வருமானத்தில இவ்வளவுதான் குடுக்கலாம்... வருமானம் கூடினால் என்னால் முடிஞ்சதக் குடுப்பன் சேர்....'

'சேர் நீங்க அரசியல்வாதியா வந்து.... எங்களப் போல வழியில்லாத குடும்பங்களுக்கு வழிகாட்டுங்க சேர்... அப்படிச் செய்தீங்களெண்டா என்னைப் போல பிள்ளைகள் பள்ளிக்குப் போகும் சேர்...' ராசுவின் கேலியைக் கேட்டுக்கொண்டே காரில் ஏறிய அவர் சொல்லிக்கொண்டார் இவை நியாயப்படுத்த முடியாத நியாயங்கள்.

தினக்குரல் 29.01.2012

# பூக்களைப் பொசுக்காதீர்கள்

விடிந்தும் விடியாத அந்தக் காலை வேளையில் ஓலைக் குடிசையின் தட்டி கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் சிவகாமி.

கலைந்து கிடந்த கேசத்தை ஒன்றாகச் சேர்த்து கொண்டையாகப் போட்டுக் கொண்டாள்.

காலை வேளையின் குளிர் சுமந்த இளங்காற்று உடலை வருடிச் செல்ல புடவைத் தலைப்பால் உடலை மூடிக் கொண்டாள். வீட்டின் முன்னாள் கிடந்த தென்னங்குற்றியில் அமர்ந்து கொண்டவள் மெல்ல சோம்பல் முறித்தாள்.

இரவின் அமைதி மெல்லக் குலைந்து வீதிகளில் மக்கள் நடமாட்டம். பால்கார மணியன் எங்கோ படுத்திருந்த மாடுகளைக் கறப்பதற்காக துரத்திக் கொண்டே வந்தவன் தென்னாங்குற்றியில் அமர்ந்திருக்கும் சிவகாமியைப் பார்த்ததும் ஒரு நிமிடம் நின்றான்.

"சிவகாமி அக்காவா..... விடிய வெள்ளன வாசலில வந்து இருக்கிறா?"

"சும்மாதான் முழிப்பு வந்திற்று. அதுதான் வாசலில் வந்து இருக்கிறன்.... மாடுகள வீட்டில கட்டுறதில்லையா?" என்றாள். சேலையை நன்றாகப் போர்த்தியபடி. அவளது பேச்சில் இருந்த கேலி புரிந்ததோ புரியவில்லையோ,

"இதுகளுக்கு நம்மட கஷ்டம் தெரியுமா மேயப்போற இடத்தில் படுத்திடுது என்று அலுத்துக் கொண்டவன். "சூய்" என்று மாடுகளைத் துரத்திக் கொண்டு ஓடலானான். சிவகாமி திறந்திருந்த தட்டிக் கதவின் ஊடாக உள்ளே பார்த்தாள். மங்கலான ஒளியில் கணவனும் குழந்தைகளும் உறங்குவது தெரிந்தது. நீண்டதொரு பெருமூச்சு அவளிடமிருந்து வெளிப்பட்டது. நினைத்துப் பார்த்தால் வேதனை தரும் வாழ்க்கை. ஒவ்வொரு நாளும் ஓடுவது எவ்வளவு சிரமம் என்பதை அனுபவபூர்வமாக அறிந்து வைத்திருந்தாள். தங்கராசா நன்றாக வேலை செய்யக் கூடியவன் தான். ஆனால் எல்லாக் கெட்ட பழக்கங்களினதும் மொத்த உருவமாக இருந்தான் கடினமாக

உழைப்பான்.

மாலையானதும் உழைத்ததில் பெரும்பகுதியைக் கள்ளுக் கடையில் தொலைத்து விட்டு தள்ளாடியபடியே வீட்டிற்கு வருவான்.

குடித்து விட்டு வந்தால் வீடு இரண்டாகும். ஏதேனும் ஒரு காரணத்தை வைத்துக் கொண்டு பிள்ளைகளை அடிப்பான். காசைத் தூக்கி எறிவான்.... அவனது வெறி தீர்ந்ததும் விழுந்து படுத்துவிடுவான். சிவகாமி தான் எறிந்த காசை தேடிப் பொறுக்கியெடுத்து கிடைத்த காசுக்குத் தகுந்தபடி சமையல் செய்வாள்.

பெரும்பான்மையாக ஒரு நேரம்தான் சமையல் சாப்பாடு. மற்ற நேரங்களில் தேநீரில் பட்டர் ரஸ்கை தொட்டுச் சாப்பிடுவார்கள். சில வேளைகளில் பிள்ளைகளுக்குக் கொடுத்த பின் சிவகாமிக்கு எதுவும் கிடைக்காது. வயிறு நிறைய பச்சைத் தண்ணீரைக் குடித்து விட்டுபடுத்துவிடுவாள்.

சிவகாமி கணவனது உழைப்பை மட்டும் நம்பாமல் தானும் உழைத்தாள். பல வீடுகளில் அரிசி, மஞ்சள், மிளகாய் என இடித்துக் கொடுத்து கணிசமான பணம் பெற்று விடுவாள்.

இப்படியான நிலையில் காட்டிற்கு விறகு வெட்டச் சென்ற தங்கராசா காலில் முள்ளுக்குத்திய நிலையில் வந்தவன் காலைத் தூக்கி வைத்துக் கொண்டு படுத்து விட்டான். இரண்டு நாளாக சிவகாமி படும் கஷ்டம் கொஞ்சமல்ல.

தென்னாங்குற்றியில் அமர்ந்திருந்தவளின் அடிவயிறு பசிக்கிறது என்றது. இரவு பாணும் தேநீரும் தான் சாப்பாடு எல்லோருக்கும் கொடுத்த பின் அவளுக்குக் கிடைத்தது. கருகல் துண்டொன்று மட்டும்தான்.

தட்டிக் கதவை அகலத் திறந்து கொண்டு உள்ளேபோனாள். அடுப்பில் கிடந்த சாம்பலை அள்ளி பழைய தகடொன்றில் போட்டவள் அடுப்பை மூட்டி தண்ணீர்ப் பானையை அடுப்பில் வைத்தாள். பிள்ளைகள் இருவரும் அவளது பழைய சேலை ஒன்றைப் போர்த்தியபடி இன்னும் தூங்கிக் கொண்டிருந்தனர். பிள்ளைகளை நினைக்க இவளது பெற்ற வயிறு பற்றி எரிந்து தனது வயிற்றில் வந்து பிறந்ததால் அல்லவா நேரத்திற்கு உணவு கிடைக்காமல் அப்பிஞ்சுகள் வாடுகின்றன. என்பது அவளது எண்ணம். அவளுக்கும் மற்றப் பிள்ளைகள் போல் தனது பிள்ளைகளும் படிக்க வேண்டுமென்ற பெரிய ஆசை. எப்போதும் உண்டு. ஆனால் வறுமையும் வாழ்க்கையும் பெரிய தடைக்கல்லாக உள்ளதை அவள் அறியாமலில்லை. மெல்லிய பெருமூச்சொன்று புறப்பட்டது அவளிடமிருந்து.

சீனி போத்தலை எடுத்துப் பார்த்தாள். மிகச் சிறிதளவே சீனி இருந்தது. நான்கு

பேருக்கு கலக்கிக் குடிக்கும் அளவுக்குப் போதாது. ஒரு கோப்பையில் தேயிலையைப் போட்டு கொதி நீரை ஊற்றி உறவைத்து நான்கு சிறிய கிண்ணங்களில் ஊற்றிக் கொண்டாள்.

கணவனை எழுப்பி ஒரு கிண்ணத்தைக் கொடுத்தவள் கரண்டியால் சிறிதளவு சீனியை எடுத்து உள்ளங்கையில் வைத்தாள். பிறகு இரு பிள்ளைகளையும் மெதுவாக எழுப்பினாள்.

"சுமதி எழும்பும்மா.... எழும்பு..." சேலைக்குள் புகுந்தபடி தூங்கும் மகளை எழுப்பி தேநீர் கிண்ணத்தையும் சீனியையும் கொடுக்கிறாள்...... குமார் சோம்பல் முறித்தவாறே எழுந்து அமர்கிறான். அவனுக்கும் தேநீரைக் கொடுத்துவிட்டுப் பார்த்தால் சீனி போத்தல் காலியாகி இருந்தது.

சீனி போத்தலின் வாய்ப் பகுதியை உள்ளங்கையில் தட்டி அதை நக்கியவாறே தேநீரைக் குடித்து முடித்தாள். விரித்திருந்த பாய்களைச் சுற்றி மூலையில் வைத்தவள் அதன் மேல் கிழிந்து போன நான்கு தலையணைகளையும் அடுக்கி வைத்தாள். இரண்டு பிள்ளைகளும் மீண்டும் வெறும் நிலத்தில் படுத்துக் கொண்டிருந்தார்கள்.

"எழும்புங்க பிள்ளையள்.... பள்ளிக்குப் போக வேணும்......"

"நான் பள்ளிக்குப் போகல்ல..... சுமதி மட்டும் போகட்டும்...." எழும்பிச் சுவரில் சாய்ந்து இருந்து கொண்டே சொல்கிறான் குமார்.

"ஏன்... பள்ளிக்குப் போகாமல் என்ன செய்யப் போறாய்......"

"என்ர சட்டையெல்லாம் ஊத்தையெண்டு எனக்கு ஏசுறாங்க...."

அவளுக்குத் தெரியும். ஒரே உடையை மீண்டும் மீண்டும் துவைத்து அணிவதால் மேற்சட்டை வெள்ளை நிறம் மங்கி பழுப்பு நிறமாகியிருந்தது. இந்த முறை தந்த யுனிபோம் துணிகளையும் தங்கராசா சாராயத்திற்காக விற்றுத் தீர்த்துவிட்டான். அவளது கண்கள் கசிந்தன. தனது பிள்ளைகளை 'ஊத்தை' என்று தள்ளி வைக்கும் நிலைமை தோன்றிவிட்டதே என்ற நினைவினால் நெஞ்சு வலித்தது..... அழுவதைத் தவிர ஏழைகளால் வேறு என்ன செய்ய முடியும்.

"சரி சரி...... இண்டைக்கு எப்படியும் சவக்காரமும் நீலமும் வாங்கி சட்டையைக் கழுவித் தந்திடுறன்.... நாளைக்குப் போங்க......" பிள்ளைகள் இருவரும் பெரிய சந்தோசம் கிடைத்தது போல் வெளியே ஓட அவள் வாசலிற்கு வந்து எட்டிப் பார்க்கிறாள். வாசலில் தென்னாங் குற்றியில் காலை நீட்டிப் போட்டவாறே அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறான் தங்கராசா.

கதவைத் திறந்து பின்புறம் சென்றவள் பழைய பெட்டியொன்றால் மூடி வைக்கப் பட்டிருந்த குஞ்சுக் கோழியொன்றைத் தூக்கிக் கொண்டுநடக்கத் தொடங்கினாள். பாதையில் மக்கள் நடமாட்டம் கூடியிருந்தது. கடை கண்ணிக்குப் போகின்றவர்கள், பாடசாலைக்குப் போகின்றவர்கள், வயலுக்குப் போகின்றவர்கள் என மக்கள் விரைந்து கொண்டிருந்தனர். நீண்ட வீதித் திருப்பத்தில் கம்பீரமாக இருந்த பெரிய வீட்டின் முன் நின்று குரல் கொடுத்தாள்.

"மாலா..... டீச்சர்...... மாலா டீச்சர்......"

"யாரது....." உள்ளே இருந்து டீச்சரின் குரல் கேட்கிறது.

"நான் தான் சிவகாமி....."

கதவு திறந்து வெளியே எட்டிப் பார்க்கிறா மாலா டீச்சர்.... கோழிக் குஞ்சோடு நிற்கும் சிவகாமியைப் பார்த்த வியப்பு முகத்தில் தோன்றி மறைகிறது.

"என்ன சிவகாமியக்கா......"

"டீச்சர்..... எல்லாக் கோழிகளையும் ஒவ்வொண்டாப் பிடிச்சு வித்து கடைசில இது மட்டும் தான் நிண்டது டீச்சர்...... வீட்டில ஒரு அரிசிமணி இல்ல. இதை எடுத்துக் கொண்டு ஒரு நூறு ரூபாக் காசு தாங்க......"

"இந்தக் குஞ்சு நூறு ரூபா பெறுமா? அக்கா....."

சிவகாமிக்குத் தெரியும்; நூறு ரூபாய் கொஞ்சம் அதிகம் தான் ஆனால், நான்கு ஜீவன்களின் வயிற்றுப் பசிக்கு நூறு ரூபாய் கட்டாயமாகத் தேவை.

"டீச்சர்..... இப்ப எனக்கு நூறு ரூபாய் தந்து உதவி செய்யுங்க..... பிறகு இடிக்கிற குத்துற வேலை ஏதும் செய்து தாறன்"

மாலா டீச்சர் என்ன நினைத்தாலோ, பசிக்காக கேட்டு நிற்கும் போது பேரம் பேசுவது சரியில்லை என நினைத்தாளோ, உள்ளே சென்று திரும்பியபோது கையில் நூறு ரூபா இருந்தது. சிவகாமியிடம் கொடுத்து விட்டு கோழிக் குஞ்சை வாங்கிக் கொண்டா. சிவகாமிக்கு "அப்பாடா" என்றிருந்தது. இன்றைய நாளைக் கழித்துவிடலாம். என்ற எண்ணம் மேலோங்க டீச்சருக்கு நன்றி சொல்லி விட்டுத் திரும்பி நடக்கிறாள்.

வீட்டை அடையும் போது தங்கராசா இன்னும் தென்னங்குற்றியில் அமர்ந்திருந்து வீதியில் போவோர், வருவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அந்த ஓலை வேய்ந்த சிறிய களி மண் வீட்டின் முன்னால் வியாபித்து வளர்ந்திருந்த வேப்ப மரத்தடியில் பிள்ளைகள் இருவரும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவளது வீட்டைச் சுற்றி வேலியில்லை. முன்புறம் உயர்ந்து பரந்த வேப்ப மரம்போல் பின்புறத்தில் மிகப்பெரியதொரு புளிய மரமும் நின்றது. சிவகாமி வீட்டைச் சுற்றிக் கூட்டிப்

பெருக்கித் துப்பரவாக வைத்துக் கொள்வாள். அவர்களது மிகப் பெரிய பிரச்சினை அவர்களிற் கென்று கிணறு இல்லாதது தான். பக்கத்து வீட்டு பரமேஸ் அக்காவின் கிணற்றில் தான் சகல நீர்த் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். தங்கராசா மாத்திரம் நூறு அடி தள்ளி இருந்த கோயில் கிணற்றில் போய் குளித்து முழுகி வருவான்... வாளியையும் குடத்தையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டவள் ஏதோ நினைத்துக் கொண்டவளாக நின்றாள்.

"குமார்..... மகன் குமார் சந்திக் கடைக்குப் போய் அரிசி வாங்கி வாறியளா?" என்று குரல் கொடுத்தாள். விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகள் துள்ளி ஓடி வந்தார்கள். சேலைத் தலைப்பில் முடிந்திருந்த நூறு ரூபாயை அவிழ்த்து மகனது கையில் வைத்தாள்.

"மகன் காசு கவனம்... ஒரு கொத்து அரிசி வாங்கிற்று மிச்சத்தைக் கொண்டு வந்து செம்புக்குள்ள வையுங்க.... தண்ணி அள்ளிற்று வந்து ஏதும் கறிபுளி பாப்பம்..." காசை வாங்கிக் கொண்டு விரையும் பிள்ளைகளின் பின்னால் நடந்தாள். பரமேசக்காவின் வீட்டுப் படலையடியில் தங்காக் கிழவி நிற்பது தெரிகிறது.

தங்காக் கிழவியைத் தெரியாதவர்கள் அந்த ஊரிலே மிகவும் குறைவு. தளர்ந்து போன மாநிறமான உடல்... வயது எழுபதைத் தொட்டாலும் மிகவும் தீட்சண்யமான கண்கள்.... ஒரு கம்பீரமான தோற்றம்... ஒரு காலத்தில் வீடு, வாசல் என்று வசதியாக வாழ்ந்தவர்கள் தான். ஆனால் இந்த மண்ணில் செந்நீர் பாய்ந்த யுத்த நாட்கள் அவர்களது வசதியை வாரி அள்ளிக் கொண்டு போயிருந்தது. கிழவிக்கு மூன்று பெண் பிள்ளைகள் மூவருக்கும் அருகருகே வீடு கட்டி நன்றாக வாழவைத்திருந்தாள்......

ஆனால், ஒரு யுத்த இரவில் விமானக் குண்டு வீச்சில் அந்த மூன்று குடும்பங்களும் இரத்த வெள்ளத்தில் மறைந்து போனது. கிழவியும் இரண்டு பேரப்பிள்ளைகளும் தொலைவில் இருந்த கோயிலுக்குப் போனதால் தப்பிக் கொண்டார்கள்... கிழவி திகைத்தாள்.

பேரப்பிள்ளைகளை என்ன செய்வதென்று புரியவில்லை....... உடலில் தள்ளாமை வந்தபோது இரண்டு பேரப் பிள்ளைகளும் சுமையாகத் தோன்றினார்கள். தகரக் கொட்டிலுள் உடை மாற்றக் கூடக் கஷ்டப்படும் பேரப்பிள்ளைகளை தன்னால் காப்பாற்ற முடியுமா என்ற எண்ணம். வலுப்பெற்ற போது தான் அவள் அந்த முடிவுக்கு வந்தாள். சிறுவர் நன்நடத்தை அதிகாரி ஒருவரது துணையுடன் அவர் பாதுகாப்பான இல்லமொன்றில் சேர்த்து விட்டாள்.

சிவகாமியைச் சந்திக்கும்போது கிழவி சொல்வாள். "சிவகாமி... உன்ர ரெண்டு

பிள்ளைகளையும் வைச்சுக்கொண்டு நீ படுறபாட்டை நானும் பார்க்கிறன்....சாப்பாடு குடுக்கேலாம,உடுப்புக் குடுக்கேலாம என்ன கஷ்டப்படுகிறாய்..... உன்ர புருசன் குடிச்சால் பிள்ளைய கட்டி வைச்சி அடிக்கிறான்.....என்னைப் போல ஒரு பாதுகாப்பான இல்லத்தில் விட்டால் அதுகள்ட வாழ்க்கையெண்டாலும் நல்லாவருமே" ஆனால் சிவகாமிக்குப் பிள்ளைகளைப் பிரிந்திருக்கக் கூடிய மனம் இல்லை. இப்போது தன்னைச் சந்தித்தால் திரும்பவும் இதைத்தான் சொல்வாளோ என்ற எண்ணம் மேலோங்க நடந்தாள். கிழவி பரமேஸ் அக்கா வுடன் காரசாரமாக ஏதோ பேசிக் கொண்டிருந்ததில் இவளைக் கவனிக்கவில்லை.

தண்ணீருடன் வீட்டுக்குத் திரும்பிய போது அரிசிப்பை அடுப்பங்கரையில் இருந்தது. பிள்ளைகள் பையை வைத்துவிட்டு விளையாடச் சென்றிருப்பார்கள் என்று நினைத்துக் கொண்ட வள் சேலையைத் தூக்கிச் செருகிக் கொண்டு முற்றத்தைக் கூட்டினாள். வாளித் தண்ணீரில் முகம், கை, கால், அலம்பிக்கொண்டு அடுப்பை மூட்டி உலைப்பானையை வைத்தாள். அரிசியைக் கழுவிப் பானையில் போட்டு, அரிசி வெந்ததும் அடுப்பைப் பிரித்து சோற்றை மூடிவிட்டு செம்புக்குள் கையை விட்டவள் திகைத்தாள். நூறு ரூபாயில் அரிசி வாங்கியது போக மிகுதிப்பணம் செம்பினுள் இல்லை. எல்லாப் பானைகளையும் தேடிவிட்டு பின் கதவைத் திறந்து கொண்டு வந்தாள். இரண்டு பிள்ளைகளும் புளிய மரத்தின் வேரில் இருந்து ஏதோ செய்து கொண்டிருந்தனர்.

"குமார்... மகன் இஞ்ச வா....." இருவரும் தயங்கிக் கொண்டே வருவது போல் இருந்தது. காசைத் தொலைத்து விட்டிருப்பார்களோ? ஒரு கணம் நினைத்தாள். அப்படி என்றால் சொல்லி இருப்பார்களே.

"மகன் மிச்சக் காசு எங்க...."

"மிச்சக் காசு கடக்காரர் தரல்லம்மா ..... அரிசி மட்டுந்தான் தந்தவர்....."

அவளுக்குத் திக்கெனிருந்தது. அந்தக் காசுக்காக எவ்வளவு சிரமப்பட்டாள் என்று அவளுக்குத்தான் தெரியும்.

"உண்மையாகத் தான் சொல்லுறயளா?"

"ஓம்..... அம்மா...."

"ஒரு கொத்து அரிசி நூறு ரூபாயா?...." சின்னப் பிள்ளைகள் எண்டால் கடைக்காரர் ஏமாத்திப் போடுறாங்க..... மணியத்திட கடையில் தானே வாங்கினனீங்கள்..." என்றாள் ஆற்றாமையோடு.

"ஓமம்மா....."

இந்த வார்த்தைகள் தென்னாங் குற்றியில் குந்தியிருந்த தங்கராசாவின் காதில் பட்டது

தான் தாமதம் "எவன்டா ஏமாத்தினவன்...." என்றவாறே நொண்டிக் கொண்டு அவ்விடத்திற்கு வந்து விட்டான். அவளுக்கு தர்மசங்கடமான நிலை. தங்கராசா சண்டைக்குப் புறப்பட்டு விடுவானோ என்றொரு பயம் அவளது உள்ளத்தை ஊடறுத்துச் சென்றது.

"சத்தம் போடாதீங்க... நான் ஆறுதலாப் போய் கேட்கிறன்" என்றாள்.

"இல்ல சிவகாமி... நானென்ன குடிச்சிக் கிடிச்சி இருக்கிறனா?.......

சண்டை போடமாட்டன். நியாயத்தைக் கேட்டிற்று வாறன்.... வாங்க ரெண்டு பேரும்..." நொண்டிக் கொண்டே செல்லும் தகப்பனின் பின்னால் தயங்கிக் கொண்டே செல்லும் பிள்ளைகளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. போய் வரட்டும் எனத் தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டவள் சம்பல் போட பாதித் தேங்காய் வாங்க மீண்டும் பரமேஸ் அக்காவின் வீடு நோக்கி நடக்கலானாள்.

மணியத்தின் கடை சந்தியில் ஒரு பெரிய அலரி மரத்தின் கீழே இருந்தது. சுற்றிலும் தகரம் அடித்து மேலே கிடுகு வேய்ந்த கடை சிறிய உரப்பைகளில் ஒரு மேசையின் மேல் சரக்குச் சாமான்கள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தன. தோரணம் கட்டினாற் போல் ஷம்பு, மிக்சர், கச்சான், கடலைப் பைக்கற்றுகள் தொங்கிக் கொண்டிருந்தன.

"சின்னப் பிள்ளையள் எண்டால் எல்லாரும் ஏமாத்திப் போடுறியள்...."

என்ற தங்கராசாவின் அலறல் மணியத்துடன் சமான் வாங்க வந்தவரையும் திரும்பிப் பார்க்கவைத்தது.

"தங்க ராசாண்ண.... ஆரு ஏமாத்தினது....."
"நீதான்...."
"நானா..... என்ன கதையண்ண கதைக்கிறயள்"

"நூறு ரூபா குடுத்து ஒரு கொத்து அரிசி வாங்க பிள்ளைகள அனுப்பினா நீ நூறு ரூபாயையும் வாங்கிக் கொண்டு ஒரு கொத்து அரிசி குடுத்தனுப்பி இருக்கிறாய்....." ஒரு கொத்து அரிசி நூறு ரூபாயா......"
"இதென்ன பொய்க் கதை கதைக்கிறயள் அண்ண" மணியத்தின் குரல் சூடானது.

"பொய்யோ.... பிள்ளையள் நூறு ரூபாய் கொண்டு வந்தவங்க தானே....."

"ஓம்...."
"அரிசி எழுபது ரூபா...."
"அப்ப மிச்சக் காசெங்க....." தகப்பனுக்குப் பின்னால் நடுங்கியபடி நிற்கும் பிள்ளை களின் நிலை மணியத்திற்கு ஓரளவு விளங்கினாலும் தன்னை ஏமாற்றுக்காறன் என்று

சொன்னதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

"விஷயம் விளங்காமல் நீங்கள் சண்டைக்கு வந்திருக்கிறீங்கள். மிச்சம் முப்பது ரூபாவுக்கும் ஆளுக்கொரு பணிஸ் வாங்கித்திண்டு போட்டுத்தான் உங்கட பிள்ளைகள் வந்ததுகள். பொய்யெண்டால் கேட்டுப் பாருங்க..."

தங்கராசா பிள்ளைகளைத் திரும்பிப் பார்ததான்....கோபமும் அவமானமும் அவனைத்தள்ளாட வைத்தது. அவன் குடிகாரன் தான்... குடித்துவிட்டு வீட்டில் சண்டை போடுவான். பிரச்சினைப்படுத்துவான். ஆனால் வெளி மனிதரோடு பிரச்சினைக்குப் போகமாட்டான். தன் பிள்ளைகள் தனக்கு கரியைப் பூசிவிட்டது போன்ற உணர்வு அவனுள் பீறிட்டு எழுந்தது.

"நடங்க ரெண்டு பேரும் வீட்ட" நடுங்கிக் கொண்டே செல்லும் பிள்ளைகளுக்குப் பின்னால் நொண்டிக் கொண்டே நடக்கலானான். வீட்டை அடையும் போது தேங்காய் வாங்கப் போன சிவகாமி வீட்டிற்கு வந்து சேர்ந்திருக்கவில்லை. வீட்டிற்குள் போனதும் முன்கதவை மூடிய பின் இருவரையும் ஆக்ரோஷத்துடன் பார்த்தான் தங்கராசா.

"பணிஸ் வாங்கித் திண்ட நீங்கள் தானே...."

அண்ணனும், தங்கையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"திண்ட நீங்களா?" உறுமலாக வெளிவந்தது அவன் குரல் "ஓமப்பா... நேத்தும் கொஞ்சம் பாண் துண்டு தான்... சரியாப் பசித்ததப்பா அதான் வாங்கிச் சாப்பிட்டுட்டம்.... இனிமேல் செய்யமாட்டம் அப்பா....." இரண்டு பிள்ளைகளதும் பிஞ்சுக் கரங்கள் தந்தையை நோக்கிக் குவிந்தன.

"விழுங்கிப்போட்டு இந்த வயசுல பொய்யும் சொலிலுறியள் என்ன....!"

இருவரையும் இரு கைகளாலும் இழுத்து மாறி மாறி அறையலானான்.

"அப்பா நோகுதப்பா அடிக்காதீங்கப்பா...."

"இனிமேல் நீங்க கனவுலயும் இந்த வேல செய்யப்படாது...."

அடுப்படிக்குச் சென்றவன் தகதகவெனத் தணலோடு மின்னிய விறகுக் கட்டையைக் கொண்டு வந்து இருவரின் தொடைகளிலும் மாறி மாறி வைத்து அழுத்தினான். தோல் கருகிப் புகைந்தது.

"எண்டப்பா எருயுதப்பா... சுடாதீங்கப்பா..." இரண்டு பிஞ்சுகளினதும் அலறல் அப்பிராந்தியமெங்கும் எதிரொலித்தது."

"எரியனும்.... நல்லா எரியனும்..." பெரியதொரு இராட்சதனாய் எரிந்து சுருங்கியதோலின் மேல் மிளகாய்த் தூளை அள்ளி வைத்து அழுத்தினான்...... எழுந்த

பாரிய கூக்குரல், தேங்காய் வாங்கப் போன சிவகாமியின் செவிகளில் பட்டு அவள் பாய்ந்தோடி வருமுன்னே அந்த அவல நாடகம் அரங்கேறி முடிந்திருந்தது. குழந்தைகள் மூர்ச்சித்து விழுந்திருந்தனர்....

"அட பாவி மனுஷா என்ன கொடுமையைச் செய்து போட்டாய்...."
கணவனைத் தள்ளிவிட்டுக் குழந்தைகளை அள்ளிக் கொண்டாள்.

"என்னபாவி....? யார் பாவி....? இனிப் பொய்யக் கனவிலயும் நினைக்காதுகள்...."
அவன் சற்றேனும் இரக்கமில்லாமல் பேசிய படி வெளியேறினான்.

"நோகுதம்மா..... எரியுதம்மா...." எனத் துடிக்கும் இரு குழந்தைகளையும் அனைத்துக் கொண்டாள்.... அவளது உள்ளம் எரிமலையாய் வெடித்துச் சிதறியது.

சிவகாமி ஒரு முடிவுக்கு வந்தாள்..... பசிக்கொடுமைக்காக இப் பிஞ்சுகள் பட்ட அவலம் போதும் பெற்றுவிட்டால் மட்டும் போதுமா. அந்தப் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளையாவது நிறைவேற்றவேண்டுமல்லவா...? தங்காக் கிழவி சொன்ன சிறுவர் நன்னடத்தை அதிகாரியின் அலுவலகம் நோக்கி நடக்கிறாள். பெற்ற பாசத்தை, தாய்மையை மூட்டை கட்டி வைத்து விட்டுத் தனது பிள்ளைகளின் சுதந்திரமான அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தரவேண்டும். என்ற வீரத்தாயாக அவள் களத்தில் இறங்கத் தயாராகி விட்டாள்.

வறுமையான குடும்பங்களில் முகையவிழ்த்துச் சிரிக்கும் முன்னே பொசுங்கிப் போகும சின்னஞ் சிறு பூக்களை பொசுக்காதீர்கள் என்று பெற்றோர்களே உங்களையும் கேட்கலாமா?

வீரகேசரி 11.12.2011

# போலிப் பூக்கள்

கடலும் வானும் சந்திக்கும் கோடுபோன்ற எல்லையில் இருந்து மெல்ல எட்டிப் பார்த்தான் மஞ்சள் வர்ணச் சூரியன். விடியலுக்காய் காத்திருக்கும் பூமி அவன் கண்களுக்குக் காட்சியாகிப் போனது. இந்தப் பொற் கதிர்களின் அரவணைப்பில் கடற்கரை மணலும் பச்சை மரங்களும் தங்கமுலாம் பூசிக் கொள்கின்றன. இந்த அற்புதமான காலை வேளையில் கல்லடிக் கடற்கரையருகே அமைந்திருந்த அந்த முதியோர் இல்லம் மாத்திரம் அதற்கே உரிய கம்பீரத்தோடு தலைநிமிர்ந்து நிற்கின்றது. சுற்றுமதில் ஓரமாக நாட்டப்பட்டிருந்த அலரி மரங்கள் கொத்துக் கொத்தாக பூத்து சூழலை அழகாக்கிக் கொண்டிருக்கின்றன.

காலையிளம் சூரியனும் தூய தென்றலும் இயற்கையும் சூழலை அழகாக்கிக் கொண்டிருக்க அந்த அழகையெல்லாம் ரசிக்க முடியாதவர்களாய் இல்லத்தின் முன்மண்டபத்தில் வரிசையாய் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த கட்டில்களில் முடங்கிக் கிடக்கிறார்கள் சில முதியவர்கள்.

இவர்கள் சமூகமென்ற மரத்தில் இருந்து வீழ்த்தப்பட்ட காவோலைகள். சூடான குருதி உடலில் வேகமாகப் பாய்ந்த காலத்தில், உடலில் வலிமை ஊற்றெடுத்த காலத்தில், தமது பிற்காலம் பற்றிய ஆயிரம் ஆயிரம் கனவுக் கோட்டைகளைக் கட்டியவர்கள். அத்தனையும் வெறும் மணற் கோட்டைகளாய் உதிர்ந்தபின் கற்பனைகளே வாழ்வாகிப் போனவர்கள். தமது எதிர்கால சந்ததிகள் என்று எவரைச் சுமந்தார்களோ அவர்களிற்கே சுமையாகிப் போனவர்கள். உடலும் மனமும் சோர்ந்து வலிமை இழந்து கிடக்கும் இவ்வாத்மாக்களின் நம்பிக்கை நட்சத்திரம் பூரணி தான்.

பூரணி தொழில் ரீதியாக அந்த இல்லத்தின் வேலைக்காரி. ஆனால் ஒவ்வொரு முதிய உள்ளங்களிற்கும் அவள் ஜீவாத்மா.

"என்ன எல்லோரும் கூரையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறீங்க... முகங்கழுவி தேத்தண்ணி குடிக்க ரெடியா...?"

எல்லோர் பார்வையும் திரும்பிய திக்கில் தேனீர்க் கிண்ணங்கள் கொண்ட பிளாஸ்டிக் தட்டை ஏந்தியபடி நிற்கிறாள் அவள். காலையிலேயே குளித்து மஞ்சள் நிற வொயில் சேலையைச் சீராக உடுத்தி பளிச்சென்ற குங்குமத்துடன் காட்சி தரும் அவளைப் பார்க்கும் எவரும் பகிடிக்குக் கூட வேலைக்காரி என்று சொல்லிவிட மாட்டார்கள். அவளுக்குள் ளேயும் ஒரு சோகமும் வறுமையும் பின்னிப் பிணைந்ததால் அவள் இங்கு வர வேண்டியது விதியாகிப்போனது.

"கோமதியக்கா! இந்த மஞ்சள் பிளாஸ்டிக் கோப்பைதானே உங்கடது? இண்டைக்கு உங்களுக்குப் பிடிச்ச பால் தேத்தண்ணிதான்."

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதை கூறிய படியே தேனீரை வழங்கியபடி வந்தவள் அந்தக் கட்டிலருகே வந்ததும் நின்றாள்.

அந்தக் கட்டிலில் எழும்பாமல் முகங்கழுவாமல் படுத்துக் கிடந்தார் பரமலிங்கத்தார்.
"பரமு சேர்.. பரமு சேர்..." மெல்லப் பிடித்து உலுக்கினாள்.
"..ம்....." மெல்லிய முனகல் மாத்திரமே பதிலாக வந்தது. நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள். காய்ச்சல் இல்லை. பூஞ்சையான கண்கள் மெல்லத் திறந்தன.

"ஹப்பி பேர்த்டே டு யூ பரமு சேர்.... இண்டைக்கு உங்கட பிள்ளையள் எல்லாம் வருவாங்களெல்லோ.. எழும்புங்களன்" பரமலிங்கத்தாரின் கண்கள் மீண்டும் மூடிக்கொள்ள கண்ணீர் கோடாகக் கன்னங்களில் வழிகின்றது. இது அவரது எண்பதாவது பிறந்த நாள். எண்பது வருடங்கள் இப்புவியில் வாழ்ந்து விட்ட அவரது காலக் கணக்கு.

"ஹப்பி பேர்த்டே பரமுக்கண்ணா... இன்னும் நித்திரையா.." திருமணத்தின் பின் இருபத்தெட்டாவது பிறந்தநாளில் மென்மையான நெற்றியில் முத்தமிட்டு வாழ்த்துச் சொன்ன அபிராமியின் பசுமையான நினைவுகள் உள்ளத் திரையில் படமாக விரிந்தது.
"அபிக்கண்ணு.. இன்னொரு முற என்னைச் செல்லமா விஸ் பண்ணுடி..." என்ற அன்புப் பிதற்றிலில் அவள் மார்பில் முகம் புதைத்து மௌனமாய் உணர்த்திய பாச நினைவலைகள். அவளோடு வாழ்ந்த வாழ்வில் வந்து போன ஒவ்வொரு பிறந்த நாளும் அவருக்குச் சொர்க்கமாய்த் தெரிந்தது.

"அபிம்மா.. இண்டைக்கு உன்ர பரமுக் கண்ணாட பேர்த்டே டா.. ஆனால் இப்ப இருபது வரக்ஷமா நீ.. விஸ் பண்ண முடியாம ஒழிப்பொயிற்றயேடி..." அவளோடு மானசீகமாகப் பேசி அந்தச் சோகத்திலே புதைந்து போகின்றார்.

இல்லற வாழ்வில் இனிப்பான செய்தி சொன்ன முதல் நாள் இன்னும் உருக் குலையாமல் உள்ளத் திரையில் இருந்து எட்டிப் பார்க்கிறது. அப்போது பரமலிங்கம்

வாழைச்சேனை காகித ஆலையில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அதிகாலையில் எழுந்து பஸ்சில் அரசடிச் சந்தியில் இறங்கி ஒரு பொடி நடைபோட்டால் ரெயில்வே ஸ்டேசன். ரெயிலில் ஏறி இருந்து நண்பர்களோடு சாப்பிட்டு காகித ஆலைக்கு ஓடிப்போய் டைம் பஞ்ச் பண்ணி... மீண்டும் மாலை களைத்து வீடு வந்து சேர்ந்தால் வரவுக்காய் காத்திருந்த அபிராமி.

"என்ன அபிம்மா... ஏதும் சுகமில்லையா?" பதறிப் போகிறார் அவர். "இல்ல.. இல்ல.. கொஞ்சம் உள்ள வாங்களன் சொல்லுறன்" அவள் கைகளைப் பற்றிப் பிடித்து உள்ளே அழைத்துச் செல்கிறாள். அவருக்குப் புரியவில்லை. உள்ளே சென்றதுதான் தாமதம் அவரது வாயிலே கற்கண்டுத் துண்டொன்றைச் செருகி விட்டு மார்பில் சாய்ந்து கொள்கின்றாள்.

"என்ன அபிக்குட்டி... இண்டைக்கு ஏதோ விஷேசம் போல தெரியுது...." "விஷேசம் தான்...." அவரது கையைப் பற்றி வயிற்றின் மேல் வைத்தபோது குபீர் என்றொரு சந்தோஷ வெள்ளம் உள்ளத்தில் பாய்கிறது.

"உண்மையாகவா அபி.... மகனா மகளா?". மார்பினில் மாலையாய்ச் சரிந்து கிடந்தவளின் முகத்தை இரு கைகளாலும் பாசத்தோடு நிமிர்த்துகிறார். "மகன்தான்.. ஏன் தெரியுமா? நமக்கு ஏலாத காலம் வந்தா நம்மைத் தாங்கிற தைரியம் மகனுக்குத் தான் வரும். பொம்புளப் பிள்ளையெண்டால் புருஷன்ர கதையைத்தானே கேட்க வேணும்."

அவள் நினைத்தது போலவே வசீகரன் பிறந்தான். கண்ணை இமை காப்பது போல மண்ணில் இறங்கவிடாமல் பொத்திப் பொத்தி வளர்த்தார்கள். "அபிம்மா! கொஞ்ச நாளைக்கு இரவிலயும் ஓவர் டைம் செய்வம் எண்டு நினைக்கிறன். பக்கத்து வீட்டுச் சிவகாமி அக்காவக் கூப்பிட்டுக் கொள்ளலாம் தானே."

"ஏன் இப்பிடி ஓடி ஓடி கஸ்டப்படுறியள். நமக்கு வயல் நிலத்தாலயும் குத்தகை கிடைக்குது தானே.. கொஞ்சம் ஆறுதலாக இருங்கவன்." "அபிம்மா! உழைக்கிற நேரத்தில்தான் உழைக்கலாம். ஒரு பொம்புளப் பிள்ளை பிறந்திட்டுது எண்டால் இந்த வீடு சரிவருமா? ஒரு பெரிய வீடு கட்ட வேணும்."
அபிராமிக்கு அவரது பேச்சு நியாயமாகப் பட்டது. ஆனால் ஓய்வின்றி உழைப்பது அவளுக்குள் மிகுந்த கவலையை வரவழைத்தது. சிலவேளை களைத்து அயர்ந்து தூங்கும்அவரைப்பார்க்கக் கண்கள் கசியும். வசீகரனின் ஆறாம் வருட நிறைவில் அவர்கள் வாழ்வில் மீண்டும் வசந்தம் ஆரணியின் வடிவில் வந்தது.

"அபிம்மா! ஆசைக்கு ஒரு பிள்ளை. ஆஸ்திக்கு ஒரு பெண்பிள்ளை."அவர் அவளைக்

கேலி செய்வார். "பகிடி பண்ணாதிங்க...... நம்மட மகன எஞ்சினியராக்கி..... மகள டொக்டராக்கி பேரன் பேத்திகளோட ஓடி விளையாடுற மாதிரி நினைச்சுப் பாருங்க. எவ்வளவு சந்தோசமாக இருக்கும்....."

இருவரும் கற்பனை செய்து அந்த மகிழ்ச்சியிலேயே லயித்துப் போவார்கள். சட்டெனக் கண்ணைத் திறந்து பார்க்கிறார். முதியோர் இல்லத்தின் வாசற் கதவின்மேல் மாட்டப்பட்டிருந்த அன்னை திரேசாவின் படம் உண்மை நிலையைத் தெளிவாக உணர்த்த மீண்டும் உள்ளமெங்கும் வேதனை உணர்வு வியாபிக்கின்றது.

"அபிம்மா! பேரப்பிள்ளைகள் கற்பனையிலதான். உண்மையில் எனக்கென்று யாரும் இல்ல. அபிம்மா... நான் தனிச்சுப்போனன்ரி......" உதடுகள் துடிக்கின்றன......
"பரமு சேர்........ எழும்புங்களன்....... வாங்க முகங்கழுவி விடுகிறன். எல்லோருக்கும் கடிதம் எழுதிக் குடுத்துத் தைரியம் சொல்லுற நீங்க உங்கட பிள்ளையளிட்ட இருந்து கடிதம் வந்தபிறகு மாறிட்டீங்க. எழும்புங்க சேர்..."
வேண்டா வெறுப்பாக எழுந்து பூரணியின் கையைப் பிடித்துக் கொண்டே நடக்கிறார். இந்தப் பூரணி என்பிள்ளையாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என உள்ளம் எண்ணிப்பார்க்கிறது. ஒவ்வொரு முதியவர்களிலும் எத்தனை பாசத்தைக் கொட்டுகிறாள். பிள்ளையும் கையுமாக நின்றவளைக் கைவிட்டுப் போன குடிகாரக்கணவனின் கொடுமைகளிலிருந்து தப்பி தன்குழந்தையை வளர்ப்பதற்காகவே இத்தனை பணிகளைச் செய்கிறாள் என்பதை நினைக்கும்போது அவள் அதி அற்புதமான பெண்ணாகத் தெரிகிறாள்.

"என்ன சேர் யோசிக்கிறீங்க...." முகங்கழுவிக் கொண்டிருக்கும் அவரைப் பார்த்துக் கேட்கிறாள்.

"எவ்வளவு கஷ்டத்திலயும் உன்னால கலகலப்பாக இருக்க முடியுதேயம்மா"
"சேர்........ கவலைப்பட்டுக் கொண்டே இருந்தால் நமக்கு என்ன கிடைக்கும்.... நோய் நொடிதான்..... கவலைகளைக் காலடியில் போட்டு மிதிச்சிக் கொண்டே ஏறினாத்தான் வெற்றி கிடைக்கும்..." முகம் துடைத்து சாமி அறைக்கு அழைத்துப்போய் சாமி கும்பிட்டு மீண்டும் கட்டிலில் இருத்தி தேனீர்க் கிண்ணத்தைக் கொடுக்கிறாள்.
"சேர் உங்கட பிறந்த நாளைக்கு மகனும் மகளும் நிறையப்பரிசுகளோட வருவாங்கதானே..... பிறகேன் கவலைப்பட்டுக் கொண்டு......"

அவர் தேனீர்க் கிண்ணத்தைப் பற்றிப்பிடித்தபடி அவளது முகத்தைச் சோகமாகப் பார்க்கிறார்.

"பூரணி உனக்குத் தெரியாதம்மா....... எஞ்சினியராக வந்து கொஞ்ச நாளிலேயே

அவுஸ்ரேலியா போகக் காசு கேட்டான் மகன்...... எனக்கெண்டா கொஞ்சமும் விருப்பமில்ல. ஆனா என்ட அபிராமி அரைவாசி வயலை விற்கச் சொல்லிப்போட்டாள்.... கடைசிக்காலத்தில என்னைத் தன்னோட அவுஸ்ரேலியாவுக்குக் கூட்டித்துப் போவானாம் மகன்..... பாத்தியா பூரணி...... அவுஸ்ரேலியாட நிறமும் எனக்குத் தெரியாது......." பூரணிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவரது சோக நினைவுகளை மாற்ற நினைத்தவள். "சேர்... யார் வந்தாலும் வராட்டியும் நாங்க பார்டி வைப்பம்.... இப்ப சாப்பிடப் போவமா"

"இல்ல பூரணி! உடம்பும் மனசும் நல்லா இல்ல.... நான் பிறகு சாப்பிடுறன்" என்று மீண்டும் படுத்துக் கொள்கிறார். கண்களை மூடினால் நெற்றி நிறைந்த குங்குமத்துடன் அபிராமி...

"சும்மா கவலைப்பட்டுக் கொண்டிருந்தால் உடம்பு என்னத்துக்காகும்.... சிரியுங்கப்பா..."

அதே புன்னகையோடு அவள் சொல்லும் வார்த்தைகள்.
"அபிம்மா! என்னால எப்படியம்மா சிரிக்க முடியும்..... நாங்க நினைச்சது பொய்யாகிப் போச்சுதே அம்மா"

மகளின் திருமணநாள் மனதிற்குள் படமாக விரிகிறது.
"இங்க பாருங்கப்பா! மாமா சொல்லுறார் மாப்பிள்ளைக்கு இந்த வீடு தேவை இல்லையாம். காசுதான் வேணுமாம்..."

"என்ன அபிம்மா... என்ர உழைப்பு முழுவதுமே இந்த வீட்டில்தான் போட்டனான்.... உனக்குத் தெரியாதா..... என்ர பிள்ளையளும் பேரப்பிள்ளையளும் சந்தோசமா இருக்க வேணும் என்ற எண்ணத்தால தானே இவ்வளவும் செய்தனான்"
அவருக்கு மாப்பிள்ளை வீட்டார் மேல் கோபம் வருகிறது.
"அது சரியப்பா... அவங்க வெளிநாட்டுக்காரர். அவங்களுக்கு இந்தவீடு வேணாமாம்."

"அப்ப என்ன செய்யிறது.... மகனும் பிடி தராமப் பேசுறான்....." அவருக்குக் கவலையாக இருக்கிறது.

"மகனுக்காக வித்தது போக மிச்ச வயல வித்துப்போட்டுக் காசக் குடுப்பம்" அவர் பதறிப் போகிறார். ஏனென்றால் திருமணத்தின்போது தாய் வீட்டுச் சீராக அபிராமி கொண்டு வந்து தந்த செல்வம் அந்த வயல் நிலம். "என்னப்பா கனக்க யோசிக்கிறியள்... நம்மட பிள்ளைகளுக்காகத்தானே குடுக்கிறம்..... நாளைக்கு நமக்கு ஒண்டென்றால் பிள்ளையள்தானே பார்க்க வேணும்....."

அவர் சம்மதிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.... பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பிய பின் பிள்ளைகளுக்காகப் பார்த்து பார்த்துக் கட்டிய வீட்டில் தன்னந்தனியாக

மீண்டும் வாழத் தொடங்கிய கணங்களை நினைத்துப் பார்க்கிறார்.

"பிள்ளையள் ரெண்டும் வெளிநாடு பொயிற்றென்று கவலைப்படுறீங்களா அப்பா.... ரெண்டுதரம் வந்து போனதுகள் தானே.... நம்மட மாளிகைபோல வீடிருக்கிறதால வந்தா அதுகளுக்கு ஒரு குறயும் இல்ல பாத்தியளா"

சோகத்தை மறைத்துக் கொண்டே அவரை மகிழ்விக்க முயல்வாள். இரு பிள்ளை களும் பிரிந்தபின் அவளும் கவலையை உள்ளத்தில் மறைத்து வைத்திருக்கிறாள் என்று தெரியும். அவளைக் காயப்படுத்த அவர் என்றுமே விரும்பியதில்லை. அந்த அன்புப் பறவைகள்வாழ்ந்த கூட்டிற்குக் காலன் ஒருநாள் கல்லெறிந்தான். காய்ச்சலில் இரண்டுநாள் படுத்த அபிராமி அவரிடம் சொல்லிக் கொள்ளாமலே பறந்துவிட்டாள். சந்தைக்குப் போய் சாமான்களோடு திரும்பிய அவருக்கு அபிராமியின் புன்னகையோடு மறைந்துபோன பூதவுடலே காட்சியானது.

உலகில் அன்றுதான் தனிமையை உணர்ந்தார். இதயம் வெடித்துச் சிதறியது.... அந்த வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் நின்று அபிராமியே புன்னகைத்தாள். நடைப்பிணமாக நாளை நகர்த்தினார்.

"அப்பா இந்தப் பெரிய வீட்டில தனிய இருந்து கஸ்டப்படுறீங்கள்... நாங்கள் சொல்லுற மாதிரிக் கேளுங்க...." என்றான் ஒருநாள் மகன்....., தனது கனவு நனவாகி மகனுடன் அவுஸ்ரேலியா போகலாமா என ஏக்கத்தோடு மகனைப் பார்த்தார்....

"அப்பா! சொன்னால் கோவிச்சுக் கொள்ளாதீங்க.... தனிய இருந்து உங்களுக்கு ஒண்டெண்டால் எங்களால ஓடிவர ஏலுமா?.... இந்த வீட்டை வாடகைக்கு விடுவம். நீங்க அந்தக் கடற்கரை ஓரமிருக்கிற முதியோர் இல்லத்தில நில்லுங்களன் அப்பா.... நான் எல்லாம் அவங்களிட்டச் சொல்லிற்றுப் போவன்...." அவன் தொடர்ந்து பேசிக் கொண்டே போனான். அவர் விக்கித்துப்போய் நின்றார். கால்கள் தள்ளாடின. வீடு சுற்றிச் சுழல்வது போல் இருந்தது. எத்தனை கனவுகளோடு இரண்டு பிள்ளை களையும் வளர்த்தார். இரத்தத்தையும், வியர்வையையும் பணமாக்கிப் பார்த்துப் பார்த்துக் கட்டிய வீடு.... இந்த அறை மகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் அந்த அறை மகனுக்கும் பிள்ளைகட்கும் என்று இருவரும் திட்டமிட்டுச் செய்த ஒவ்வொரு வேலைகளும் ஞாபகத்தில் வர "ஓ" வென்று அலறவேண்டும் போல் இருக்கிறது.

"இரண்டு பேரில யாராவது ஒரு ஆள் உங்களோட என்ன கூட்டிற்றுப் போங்களன்" இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொள்கின்றனர்.

"அப்பா அந்த யந்திர வாழ்வ உங்களால சமாளிக்க ஏலாது. இங்க எண்டால் நாலு தெரிஞ்ச சனம் இருக்கும்." தன்பாட்டிற்கு மகளும் கைவிட அவர் இல்லத்திற்கு வந்தே ஆக வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதன் பின் இல்லமே அவரது உலகமாகிப்

போனது. இடைக்கிடையே பிறந்தநாள் அன்று இருவரும் வருவார்கள். அவர் முகம்கொடுத்துப் பேசமாட்டார். "கோபமா அப்பா" என்பார்கள்.... இப்படியே நகர்ந்த வாழ்வில் ஒரு வாரத்திற்கு முன் வந்த கடிதம்.. அவரிடம் இருந்த அத்தனை நம்பிக்கையையும் நாசமாக்கியது.

"அப்பா..... எங்கள் ரெண்டுபேருக்கும் இங்க வீடுவாங்கக் காசு தேவைப்படுது. அங்க வீடு இருந்து பிரயோசனம் இல்லதானே..... அதை விற்க முடிவு செய்து விட்டோம்.... உறுதி தயார் செய்து கொண்டு வருகிறோம். கையொப்பம் போட்டுத் தாருங்கள். எங்க இரண்டுபேருடைய நாலு பிள்ளைகளையும் இந்த முறை அழைத்துவருகிறோம்"

அவரது உள்ளத்தினுள்ளே இவ்வார்த்தைகள் மீண்டும் மீண்டும் வந்து போகின்றன. "அபிம்மா... அந்த வீட்டில என்ற உயிர் இருக்குதுடி... எனக்குத் தாங்கேலாம இருக்குதும்மா...." வார்த்தைகள் வெளிவராமல் மனதுக்குள்ளேயே அழுகிறார்.
"பரமு சேர்... உங்கட பிள்ளையள் வந்திட்டாங்க போல.... வாசல்ல வேன் நிற்குது." அவருக்குப் பூரணியின் வார்த்தைகள் கிணற்றுக்குள் இருந்து கேட்பது போல் ஒலிக்கிறது.

"அப்பா! ஹப்பி பேர்த்டே டூ யூ... கிரான்பா ஹப்பி பேர்த்டே டூ யூ..." படுத்திருந்த அவரை உலுக்கி எழுப்புகிறார்கள்... அவரில் சலனமில்லை..... "பாவி மனுஷன். நாங்க அவ்வளவு தூரத்தில இருந்து வாறம்.... மரக்கட்ட மாதிரிக் கிடக்குது. வீடு வித்தாப் போலதான்....." மகன் அலுத்துக் கொள்கிறான்.

"பரமு சேர்....." பூரணி அருகில் வந்து நெற்றியில் கைவைத்துப் பார்க்கிறாள். தோளிற்பற்றி மெல்ல நிமிர்த்த எத்தனிக்கும் போது தலை துவண்டு போகிறது.

"பரமு சேர்.... எல்லாரையும் விட்டுப் போட்டுப் பறந்திட்டியளா?...."
பூரணியின் உண்மையான சோகம் வெடித்துச் சிதறுகிறது. அவர் தனது நிரந்தரமான வீட்டைத் தேடிக் கொண்டுவிட்டார். தனது இல்லற வானிலே பூத்த இரண்டு பூக்களும் போலிப்பூக்கள் என்று நிதர்சனமாக உணர்ந்த கணமே தன் இணைப்பறவை இருக்கும் இடம்தேடி உயிர்ப்பறவை பறந்துவிட்டது.

செங்கதிர் 2012

# கருகும் மொட்டுக்கள்

எங்கும் நிசப்தம்.

மாணவர்களின் பேனாக்கள் கொப்பிகளில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக் கின்றன.

சிலர் சுயமாக இயங்கச், சிலர் விழிகளால் பக்கத்து மாணவர்களின் கொப்பிகளை மேய்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அவன் மட்டும், திறந்திருந்த யன்னலூடே தெரிந்த நீல வானத்தில் எதையோ தேடிக்கொண்டிருந்தான். அவனுடைய பேனா கணிதப் பயிற்சிப் புத்தகத்தைக் கீறி ரணமாக்கிக் கொண்டிருக்கிறது. "அரவிந்" எனும் அவனது பெயர் புத்தகம் எங்கும் சிதறலாகக் கிறுக்கப்பட்டு அச்சுக்கோலங்களை அலங்கோலமாக்கிக் கொண்டிருக்கிறது.

"டேய் அரவிந்.... ஏன்டா கணக்குப் புத்தகத்தில இப்பிடிக் கிறுக்கித் தள்ளுகிறாய்....." பக்கத்தில் அடிக்கடி இவனை அவதானித்துக் கொண்டிருந்த குமணன் மெல்லக் கிசுகிசுத்தான். அரவிந் நீல வானத்தில் நிலைத்திருந்த பார்வையைச் சட்டென குமணனின் மேல் திருப்பினான். அவனது முகம் இறுகிக் கண்கள் சிவந்து, குமணனுக்கு வியர்த்துக் கொட்டியது.....

"இது என்ர புத்தகம்.... எனக்கென்று தந்தது நான் அதில என்னவும் செய்வன் நீ யார் இதைக் கேட்க...."

"அரசாங்கம் சும்மா புத்தகம் தந்தால் இதுவும் செய்வாய் இன்னமும் செய்வாய்....."

குமணன் வார்த்தைகளை முடிக்குமுன் அரவிந்தின் கை பலமாக வலது கன்னத்தில் தாக்க..... "அம்மா....." என்றெழுந்த குமணனின் அலறல் எல்லோரையும் திரும்பிப் பார்க்க வைக்கிறது.

"அங்க என்ன நடக்குது...." பயிற்சிக் கொப்பிகளைத் திருத்திக் கொண்டிருந்த

மைதிலி டீச்சர் கதிரையைத் தள்ளிவிட்டு எழுந்தாள்.....

"டீச்சர்..... புத்தகத்தில ஏன் கிறுக்கிறாய் எண்டு கேட்டதிற்கு எனக்கு அறைஞ்சு போட்டான் டீச்சர்"

"வாங்க இங்க ரெண்டு பேரும்..... அரவிந் புத்தகத்தையும் கொண்டு வா......."

அரவிந்தின் கணிதப் புத்தகத்தைத் திருப்பிய மைதிலியின் பார்வையில் தோன்றிய தெல்லாம் கிறுக்கல்கள் தான்.

உங்களுக்கு இலவசமாப் புத்தகம் தந்தால் புத்தகத்தின்ர பெறுமதியும் அவசியமும் எப்பிடித் தெரியப்போகுது..... ஒவ்வொருவரும் காசு குடுத்து வாங்கி இருந்தால்தான் கஸ்டம் விளங்கும்..... ஏன் அரவிந். ஏன் இப்படிக் கிறுக்கி வைச்சிருக்கிறாய்....

அரவிந் கைகளைக் கட்டிக்கொண்டு குனிந்துகொண்டு நிற்கிறான்.

"இனிமேல் இப்படிச் செய்வாயா?"

அவன் பதில் சொல்லவில்லை.... அது அவனுக்கே உரிய தன்மை.

"குமணனை அறைந்தாயா அரவிந்"

அவன் ஆமாம் எனத் தலையை அசைத்தபடி அடிவாங்கத் தயாராகத் தனது வலது கையை அவளுக்கு முன்னால் நீட்டினான். ஓங்கிய பிரம்பை பின்னால் இழுத்துக் கொண்டாள் மைதிலி. அரவிந்தைப் பொறுத்த வரை அவனுக்கு அடிவாங்குவது வெகு சகஜமான நிகழ்வு......

'அரவிந்' ஏன் இப்படி மாறிவிட்டான். அந்தப் பாடசாலையில் ஒவ்வொருவரும் தமக்குத்தாமே கேட்டுக்கொள்ளும் கேள்வி இது.... சில மாதங்கட்கு முன்வரை 'அரவிந்' நல்ல மாணவனாக திறமையான முதல் மாணவனாகத்தான் இருந்தான்.... எல்லோர தும் மனங்கவர்ந்த மாணவனாக இருந்த அவன் சில மாதங்களுள் முற்றாகவே மாறிப்போய் இருந்தான்.... படிப்பதில்லை.... பாடங்களில் அக்கறையில்லை, எதற்கெடுத்தாலும் சீறிச் சினந்தான்.... வெறித்த பார்வை. சிவந்த விழிகள்.... அவனை அணுகவே பயந்துநடுங்கும் மாணவர்கள். எந்தக் குற்றச் செயலுக்கு எத்தனை அடிகளை வாங்கினாலும் அவன் கண்களில் துளிக்கண்ணீர் கசியாது. அவனுக்குள் இந்த இராட்சத குணங்கள் எப்படிப் புகுந்ததோ? அவன் அந்தப் பாடசாலைக்கே பிரச்சனையாக மாறியிருந்தான்.

எல்லோரும் வெறுத்து ஒதுக்கினாலும், மைதிலியால் அவனை முற்றாகப்

புறக்கணிக்க முடியவில்லை.... அவனை அறிய வேண்டும். அவனுள்ஒரு இராட்சதன் எப்படிப் புகுந்தான் எனக் கண்டுகொள்ள வேண்டும். இது சுலபமான செயல் அல்ல... அன்றைய மாணவர்களைப் போல் இல்லை இன்றைய மாணவர்கள். நாளைய சமுதாயம் நாம் என்பதைவிட, இன்றே சகல செயல்களிலும் தங்கள் பங்களிப்பு இருக்க வேண்டுமென எண்ணுபவர்கள்.... அவர்களுக்கு அறிவுரை கூறுவதோ திருத்துவதோ ஆபத்தை விலைக்கு வாங்கும் செயல் என்பது பலரது கணிப்பு. அறிவுரை கூறப்போய், நல்லொழுக்கத்தைப் போதிக்கப் போய் மீளமுடியாத சிக்கல்களில் சிக்கிக் கொண்ட எத்தனையோ புத்திஜீவிகளின் வரலாறு. ஆசிரிய மாணவர் உறவை மிகவும் பாதிக்கிறது. நமக்கேன் வீண்வம்பு என்ற எண்ணத்தில் பலர் தாமுண்டு தம் வேலை யுண்டு என ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

மைதிலி எத்தனையோ நாட்கள் சிந்தித்தாள். அவனை அறிய வேண்டுமானால் ஒரேயொரு வழி அவனுள் தூங்கிக் கொண்டிருக்கும் மனித உணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப வேண்டும்..... அவனது இராட்சத உணர்வுகளை அடித்து நொறுக்கி..... அந்தக் கணத்தில் அவனை மீண்டும் பழைய அரவிந்தாக மாற்றவேண்டும். அவன் மாடிவீட்டுப் பிள்ளையல்ல மண்குடிசையில் ஏழ்மையின் பிடியில் தவிக்கும் ஒரு குடும்பத்தின் பிரதிநிதி.... அவனை எப்படியாவது மீட்க வேண்டும்.... அவன் அவனது பெற்றோருக்கு குடும்பத்திற்கு வழிகாட்டியாகத் திகழ வைக்கவேண்டும்.... ஆனால் வழி..... அவளுக்குப் புரியவில்லை.

விளையாட்டுப் பயிற்சிக்காக மாணவர் எல்லோருமே சென்றுவிட்டதால் வகுப்பறை வெறுமையாக இருந்தது. ஆனால் அவன் மட்டும் கன்னத்திற்குக் கை கொடுத்தவாறு அமர்ந்திருந்தான். வரவு இடாப்பைச் சரிபார்த்துக் கொண்டிருந்த மைதிலியின் பார்வை நிமிர்ந்தபோது அரவிந் மாத்திரம் சிந்தனையில் மூழ்கி இருப்பது தெரிகிறது.

"அரவிந்"

அவனது பார்வை நிமிர்கிறது. என்ன எனக் கேட்கும் பாவனை.

"இங்கே கொஞ்சம் வருகிறாயா?"

இயந்திரப் பொம்மையாக அவளை நோக்கி நகர்கிறான்.

"அரவிந், நான் ஏதாவது கேட்டால் நீ கோபித்துக்கொள்வாயா?"

"இல்லை டீச்சர்"
"ஏதும் குறையாக விளங்கிக் கொள்வாயா?"

"இல்லை டீச்சர்"

"உனக்கு அக்கா உண்டா அரவிந்?"

"இல்லை டீச்சர்"

"அப்படியென்றால் என்னை உன் அக்காவாக நினைத்துக்கொள்..... என்ன ஏற்றுக் கொள்வாயாஅரவிந்" வார்த்தைகளில் மைதிலி தேக்கியிருந்த மென்மை அவனுக்கு ஏதோ ஒரு விதத்தில் பிடித்திருக்கவேண்டும்.

"சரி டீச்சர்" வழமையைவிட மென்மையாகப் பதில் சொல்கிறான். தந்தியை தட்டியாகிவிட்டது. இனிச் சரியாக மீட்டினால் தான் இசை பிறக்கும் எனப் புரிகிறது அவளுக்கு.

"அரவிந், இந்தப் பாடசாலையையும் மாணவர்களையும் உனக்குப் பிடிக்க வில்லையா?"

"நிரம்பப் பிடிக்கிறது....."
"ஆசிரியர்களை....."
அவன் ஒரு கணம் யோசித்தபின் பதில் சொல்கிறான் "நிரபராதிகளைத் தண்டிக்கும் போது கோபம் வரும் டீச்சர்.... ஆனால் அந்தக் கோபம் எப்போதும் நிலைச்சு நிக்கிற தில்லை....."

"அரவிந், உங்க அம்மா அப்பாவைச் சந்திக்க வேணும் என்று எனக்கு ஆசை.... ஒரு நாளைக்கு என்னைக் கூட்டிக்கொண்டு போகிறாயா?"

"டீச்சர்" அவன் கண்களில் ஈரம் திரையிட்டது.

"வேண்டாம் டீச்சர்..... எங்கப்பா ஒரு எரிமலை.... ஊர் உலகத்துக்குப் பயனில்லாம எரிகிற எரிமலை. என் அம்மா அந்த எரிமலைக்குள் வாழ்ந்து ஒரு தீப்பிழம்பா மாறிட்டா டீச்சர்..... எங்கள் வீட்டில் ஈரமே இல்லை டீச்சர்....."

அவன் குலுங்கிக்குலுங்கி அழுதான். அவள் மெல்ல அவனருகே சென்று கண்ணீரைத் துடைத்துவிட்டாள். பாசத்துடன் தலைமயிரை மெல்லக் கோதிவிட்டாள். அழாதே அரவிந்.... பலரது வாழ்க்கையில் ஏதோ ஒரு சோகம் மறைந்திருக்குது. சிலர் வெளியே காட்டிக்கொள்வாங்க சிலர் தனக்குள்ளேயே மூடி மறைச்சுக்கொள்வாங்க........ வாழ்க்கையே மனிதனுக்குச் சவால்தான் அரவிந்.....:

வடிகால் கிடைத்துவிட்ட உணர்வில் அவனுள் பொங்கிப் பொருமிக் கொண்டிருந்த

பெருவெள்ளம் உடைப்பெடுத்தது.

"தாழையூர்". நகரத்தில் இருந்து இருபது மைல் தொலைவில் உள்ள சிறிய கிராமம்.. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில அரசாங்க உத்தியோகத்தர்களைவிட, பெரும் பான்மை மக்கள் கூலி வேலைகளால் அன்றாடம் வயிற்றை நிரப்பிக் கொள்பவர்கள் தான். அந்தக் கிராமத்தின் எல்லையில் விரிந்து கிடந்த தென்னந்தோப்பு ராமலிங்கப் போடிக்குச் சொந்தமானது..... அந்தத் தோப்பைப் பராமரிப்பதற்கென்று அவர் நியமித்தவன் தான் கந்தசாமி.... அவனிடம் ஊரில் உள்ள அத்தனை கெட்ட பழக்கங்களும் இருந்தது. ராமலிங்கப் போடி தனக்குப் பிடிக்காதவர்களை தட்டிக் கேட்க அவனையே கருவியாகப் பயன்படுத்தியதால் எத்தனை கெட்ட குணங்கள் இருந்தாலும் அவனை அவர் தோப்பில் குடியிருத்தி இருந்தார். முன் செய்த தீவினைப் பயனோ அல்லது விதியோ அன்னம்மாள் அவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். விரும்பியோ விரும்பாமலோ அவர்களிடையே உதிர்ந்த பிஞ்சுகள் மூன்று மூத்தவன் முரளி, அதற்குப் பிறகு மயூரன், அதற்குப் பின் கடைக்குட்டி தான் "அரவிந்".

அரவிந்தைப் பொறுத்தவரை அவனது தந்தையை நிதானமாகக் கண்டது குறைவு. மாலை 6 மணிக்கு ஆடிக்கொண்டே நுழைந்து, சட்டி பானைகளை உருட்டி, அம்மாவோடு வாக்குவாதப்பட்டு அடிபிடியில் இறங்கி, அவர் உறங்கப் பத்துப் பன்னிரண்டு மணியாகும். இந்த ரகளைகள் ஓயும் வரை அரவிந் தன் வீட்டிற்குப் பின்னால் துணிதுவைக்கும் கல்லின் மேல் அமர்ந்திருப்பான்.... மூத்தவன் முரளி சிறிது முரட்டுச் சுபாவம் ஆனால் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவன்..... ஒரு நாள்.... தந்தை தாய் வாக்குவாதம் அடிபிடியில் முடிந்த போது... தாயை வெறித்தனமாகத் தாக்கிய போது தந்தையைக் கைநீட்டி அடித்துவிட்டான்.... அன்று போனவன்.... எங்கே போனான் என்றவிபரமோ எவருக்கும் தெரியாது...... காற்று வாக்கில் ஒரு செய்தி வந்தது. இனத்திற்கான போராட்டத்தில் அவன் காற்றோடு காற்றாய் கலந்து விட்டான்.... அரவிந்தால் அதனை இலகுவில் சீரணிக்க முடியவில்லை.

அம்மா இரண்டு நாள் ஒப்பாரி வைத்ததோடு சரி.... அப்பா அதைப்பற்றி யோசிப்பதேயில்லை.... அரவிந் கலங்கும் போதெல்லாம் ஆறுதலும் தேறுதலும் அண்ணா மயூரன் தான். "அரவிந்.... நாளையில இருந்து நானும் மில்லில வேலைக்குப் போகப் போறன்....."

அரவிந் திடுக்கிட்டான்....... மயூரன் பள்ளிக்கூடத்தில் கெட்டிக்காரன் என்றே பெயர் பெற்றவன்.....

'அண்ணா நீங்க படிக்கக்கூடிய ஆள்....?'

அது சரிதம்பி.... அப்பாட போக்கு இப்போ நல்லா இல்ல.... அவர் வீட்டுக்கு வாறதே குறைவு..... அம்மாவும் நோயாளி.... இந்தக் குடும்பம் மூன்று நேரத்திற்கு ஒரு நேரம் சாப்பிட வேண்டுமென்றால் இதைத் தவிர வேறு வழி இல்லை.... என்ர ஒரேயொரு ஆசை நீயாவது எங்கட குடும்பத்தில் படிச்சு நாலுபேர் மதிக்க பெரிய உத்தியோகம் செய்ய வேணும்..... என்ன தம்பி....

அரவிந் குலுங்கிக் குலுங்கி அழுதான்.....

மயூரன் அரவிந்தின் கண்ணீரைத் துடைத்து விட்டான்.....

அன்று முதல் மயூரனே அரவிந்தைப் படிப்பித்தான். புத்தகம் கொப்பி உடுப்பு என்று தன்னைப் புறக்கணித்துத் தம்பிக்கு உதவினான்..... அரவிந் முழு மூச்சாகப் படிக்கத் தொடங்கினான். அவனைப் பொறுத்தவரை அப்பா அம்மா ஆசான் எல்லாம் மயூரன் தான்.

ஆனால்.... கால ஓட்டத்தில் சில மாதங்களின் முன்.... அந்தச் சம்பவம் நடந்தது.... இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளை யாரோ அழைப்பதாக அம்மா சொல்ல எழுந்து சென்றவன் கையைக் கழுவி விட்டுக் கொடியில் கிடந்த சேர்ட்டையும் எடுத்துப் போட்டுக் கொண்டு புறப்பட ஆயத்தமானான் "அண்ணா இந்த நேரத்தில....."

"அப்பாவப் பற்றி ஏதோ கேட்க வேணுமாம்..... நீ சாப்பிடு... அந்தக் கடையடி மட்டும் போய் வந்திடுவன்"

ஆனால் அவன் வரவே இல்லை.... மறுநாள் கடையடியில் பேச்சிழந்து பிணமாகிச் சாய்ந்திருந்தான்.... "அரவிந்" அலறக் கூட முடியாமல் நின்றான்.... அவனுக்குள் ஆயிரம் கோடி அலைகள் எழுந்தன....

அண்ணா.... இந்த உலகத்தில எல்லாம் பொய்.... நான் இனிமேல் பழைய அரவிந்தா இருக்க மாட்டன் எல்லாரையும் பழிவாங்குவன்..... பழிக்குப் பழி... அவன் தன்னையும் மறந்து சூனிய வெளியைப் பார்த்து ஓலமிட்டான்...

"டீச்சர்.... இப்ப சொல்லுங்க.... நாங்கள் உணர்ச்சிகளால கருகிக் கொண்டிருக்கும் போது.... எங்களுக்கு ஏது அமைதி.... எதுக்குப் படிப்பு இந்த உலகத்தில பழிக்குப் பழிவாங்கி அடிச்சு மிரட்டித்தான் சீவிக்கலாம் டீச்சர்.....

அவன் குமுறி அழுகிறான்.

"இல்லை.... அரவிந்... உன்னைப் போல் கடந்து போன நிகழ்வுகளால் பாதிக்கப் பட்டவர்கள் இந்தப் பிரதேசம் எங்குமே இருக்கிறார்கள்.... அவர்கள் ஒவ்வொருவரும்

பழிவாங்கும் எண்ணத்தோடு வாழ்ந்தால் நம் இனம் என்னவாகும்...

"அது சரி டீச்சர்... எங்க அண்ணா ஒரு சிறு தவறு கூட யாருக்குமே செய்ய வேயில்லை டீச்சர்... எங்கள் அப்பாவிற்கு அண்ணா பொறுப்போட வேலை செய்து எங்களைப் பார்ப்பது பிடிக்கவில்லை... அவர் குடிவெறியில என்ன சொன்னாரோ... என் அண்ணாட உயிரைக் குடிச்சிட்டாங்களே டீச்சர்..."

"அரவிந்... இப்படியே உன்னைப்போன்ற மாணவர்கள் படிப்பையும், கல்வியையும் புறக்கணித்துத் திசைமாறிப் போய் கருகிய மொட்டுக்களாய் உதிர்ந்தால்... எமதினத்தில் கற்றவர்கட்கான ஒரு பெரிய இடைவெளி தோன்றும் அரவிந்... அது யாரால் நிரப்பப்படும். கடைசியில் நாம் மீண்டும் அறிவுக் குருடர்களாக, அடிமைகளாக, கூலிகளாக மாறவேண்டியதுதான் அதுவே எம் தலைவிதியாகி விடும்....::

அரவிந்தின் முகத்தில் தெளிவு பிறக்கிறது...

அரவிந்... நமது இலட்சியங்கள் நாம் அடைய நமக்கு நிறையப் புத்தி ஜீவிகள் தேவை அரவிந்... நீ உன் அண்ணாவின் கனவுகளை நினைவுகளாக்க வேண்டுமானால் நன்றாகப் படித்து... ஒரு நல்ல நிலையை அடையவேண்டும்... உன் வெற்றிப் பயணத்தில் நானும்... உன் அக்காவும் உதவுவேன் அரவிந்... நீ பழைய அரவிந்தானால் உனக்கு இங்குள்ள ஒவ்வொருவரும் உதவுவார்கள் அரவிந்...

அவன் நிதானமாக எழுந்தான்.

"டீச்சர்... இனிமேல் நான் படிப்பேன்... என் அண்ணாவின் கனவுகளை நினைவுகளாக்க... எம்மினத்தில் அறிவு இடைவெளி தோன்றாமல் இருக்கப் படிப்பேன் டீச்சர்..."

அவன் சொற்களில் தெரிந்த உறுதி எதிர்கால நம்பிக்கைக்கு அத்திவாரம் இட்டது.

அணையா விளக்கு 1989



புனைவின் பொது வெளியில் பெண்கதை மொழிதல்,
மரபுகள் மீறப்படுதலில் தொடங்கி பெண்ணியக்
கருத்தாக்கங்களை மீட்டுருவாக்கம் செய்துவரும்
எழுத்துக்களை நாம் தொடர்ந்து கண்டு வரும் சூழலில்
பெண் புனை கதையாளர்களது எண்ணிக்கை
சொற்பத்திலும் சொற்பமாக இருந்து வருகின்றது.
இந்நிலையில் திருமதி. இந்திராணி புஸ்பராஜாவின்
முதல் தொகுப்பு இதுவாகும். அவர் தன்
வாழ்வனுபவத்தின் ஊடாக சமூகப்பிறழ்வுகளை,
அசிங்கத்தை, வேதனையை, துன்பத்தை தன்
எழுத்துப்பாணியின் மூலம் நமக்கு நெருக்கமான
மனிதர்களை நம் கண் முன் நிறுத்தியிருக்கிறார்.

-த. மலர்ச்செல்வன்

பண்பாட்டலுவல்கள்
திணைக்களம், கி.மா

ISBN 978-955-4628-07-6

9789554628076

Evergreen Printers. Batticaloa. 065 2222607